ஆகஸ்ட் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

303



விலை
ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

303

ஒளி : 26 சுடர் : 03

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்



ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info



சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- சமரபாகு சீனா உதயகுமார் 05
- கனகசபாபதி செல்வநேசன் 07
- கலாநிதி ஜீவகுமாரன் 10
- அநபாய சோழன் 18
- செல்லையா சுப்ரமணியம் 23
- கீத்தா பரமானந்தன் 24
- மிதுஷிக்கா பிரேமச்சந்திரன் 35
- பஸ்ஸில் பெர்ணான்டோ / ஸ்ரீ பராக்கிரம கொடிதுவக்கு/ மாவனல்லை எம்.எம்.மன்ஸூர் 37


### கட்டுரைகள்


- கலாநிதி செல்லத்துரை சுதர்சன் 11
- பேராசிரியர் சபா ஜெயராசா 25
- E.A.G. மிலாணி 31


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 38


### சிறுகதைகள்


- காரைக்கவி கந்தையா பத்மநாதன் 02
- ஸ்ரீரஞ்சனி 19
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 28
- ந.பார்த்தீபன் 36


### வாசகர் பேசுகிறார்


வாசகர் பேசுகிறார் 40


பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**கௌரவ கலாநிதி பட்டத்துக்கு பெருமை சேர்த்த தருணம்**

பேராதனைப் பல்கலைக்கழகமானது ஜூலை 2025இல் தனது 86ஆவது பட்டமளிப்பு விழாவின் போது **பேராசிரியர். சி. பத்மநாதன்** அவர்களுக்கு Doctor of Letters (D.Litt) எனும் உயரிய **கௌரவ கலாநிதி** பட்டத்தை வழங்கியுள்ளமை ஈழத்தமிழர் பெருமைகொள்ளும் தருணமாக அமைந்துள்ளது.

தற்போது தமது 85ஆவது வயதிலும் ஆய்வுத்துறையில் ஒளிபாய்ச்சிக் கொண்டிருக்கும் சிவசுப்ரமணியம் பத்மநாதன் அவர்கள், ஈழத்து தமிழரின் வரலாற்றினை ஆதாரபூர்வமாக செப்பனிட்டு நிமிர்த்தி வருபவர்களில் முன்னணியில் திகழ்பவர். இவர் இலங்கையின் பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளதுடன், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பதவி வகித்தவர் என்பது ஞாபகத்தில் கொள்ளத்தக்கது. தமது நீண்ட பயணத்தின்வாயிலாக இலங்கையில் வரலாற்றுத்துறை மாணவர் பரம்பரையொன்றை பேராசிரியர் உருவாக்கியுள்ளமை மகிழ்வுக்குரிய விடயமாகும்.

இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், ஈழத்து இலக்கியமும் வரலாறும், ஈழத்து வரலாறு, யாழ்ப்பாண இராச்சியம், வன்னியர், தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், இந்துக் – கலைக்களஞ்சியம், கலாசாரம், கோயில்கள், நடனங்கள், ஓவியங்கள், கட்டடங்கள், சிற்பங்கள் எனும் பல துறைகளில் தொடர்ந்தும் ஆய்வுப் பணிகளை பேராசிரியர் ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றார். இதுவரை 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய பேராசிரியரின் நூல்களில் சில இலங்கை மற்றும் இந்திய அரசுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் இலங்கைத் **தமிழ்ச் சாசனங்கள்** சார்ந்த ஆய்வானது, பேராசிரியருக்கு **மகுடமாக அமைகின்றது** எனலாம். மேலும், இந்து கலாசார திணைக்களத்தின் முயற்சியால் 1990களில் தொடங்கி இருபத்தைந்து வருடங்களாக நடைபெற்றுவந்த **இந்துக் கலைக்களஞ்சிய** தொகுப்பு முயற்சியில் பதினொரு தொகுதிகளுக்குத் **தொகுப்பாளராக** இயங்கியுள்ளமை இவரின் பொறுப் புணர்ச்சியையும் அயராத உள்ளத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.


இலக்கிய ஆதாரங்களுக்கு மேலாக, சாசனங்கள், நாணயங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கட்டடங்கள் ஆகிய **மூல ஆதாரங்களைத் துணைகொண்டு** பேராசிரியர் முன்வைக்கும் தரவுகள், தொகுப்புகள், முடிபுகள் ஈழத்தமிழரின் வரலாற்றை கல்வெட்டில் பொறிப்பதற்குச் சமமானதாகும். இம்முயற்சிகளை **தமது வாழ்நாள் தவமாக** பேராசிரியர் மேற்கொள்கிறார். இதனால், ஆசியாவில் முன்னணி வகிக்கும் ஒரு வரலாற்று ஆய்வறிஞராக பேராசிரியர் பத்மநாதன் அவர்களை அறிஞர்குழாம் அடையாளப்படுத்துவது நாமனைவரும் மார்தட்டிக்கொள்ளும் விடயமாகும்.

பட்டங்களைக் கேட்டும், வாங்கியும், பெற்றும் கௌரவங்களைச் சேமித்துவரும் தமிழ் உலகில், **கௌரவ கலாநிதி எனும் பட்டத்துக்கே பெருமை சேர்க்கும் தருணமாக** இது அமைந்துள்ளமை அனைவருக்கும் மன நிறைவினைத் தருகிறது.

ஞானமும் வாழ்த்தி மகிழ்கிறது.

சிறுகதை

# போகுதடி





**காரைக்கவி**
**கந்தையா பத்மநாதன்**

நிண்டாப்போல ஆளையே உறைய வைக்கக்கூடிய மாதிரி இருக்கிற லண்டன் குளிரைத் தாங்கிறதுக்கு எண்டே செய்யப்பட்ட கம்பளி நிரப்பின மெத்தை உறைக்குள் சுருண்டபடி படுத்திருந்தாள் மைதிலி. பொழுது நல்லா விடிஞ்சும் எழும்புறதுக்கு மன மில்லாமல் கண்ணை மூடிப் படுத்திருந்த அவள் தன்னை அறியாமலே எப்பன் நித்திரையாப் போனாள் . திடீரெண்டு என்னவோ ஒரு கனவு கண்டு திடுக்கிட்டுக் கண் முழிச்சவள் தனக்குப் பக்கத்திலை படுத்திருந்த குமரனைக் காணாமல் ஒரு கணம் யோசிச்சாள். நல்லா விடிஞ்சாப் பிறகும் நித்திரை கொண்டு பழக்கமில்லாத மைதிலிக்கு அண்டைக்கு அப்பிடி நித்திரை கொண்டது பெரிய புதினமாக இருந்தது.

“கடவுளே ஒருநாளும் நான் இப்பிடி அடிச்சுப் போட்ட மாதிரிப் படுத்ததில்லையே.....” எண்டு வாய் விட்டுச் சொன்னவள் அப்பிடித் தான் நித்திரை கொண்டதை நெச்சு வெக்கப் பட்டாள்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு வாயை நல்லாத் திறந்து “ஆ .........” எண்டு கொஞ்சம் சத்தமாக் கொட்டாவி விட்டபடியே மெத்தை உறையை விலக்கிக் கொண்டு கட்டிலாலை எழும்ப வெளிக் கிடேக்கை தான் அம்மணமாய்ப் படுத்திருந்தது ஞாபகம் வர அவள் இன்னும் வெக்கப்பட்டாள்.

அம்மணமாய்ப் படுக்கிறது மைதிலிக்கு ஒண்டும் புது விஷயம் இல்லை. உப்பிடி எத்தினையோ இரவுகள் எத்தினையோ பேரோடை, அதில கனபேரை ஆரெண்டே தெரியாது, படுத்து இருக்கிறாள். எண்டாலும் தனக்கு எண்டு சொந்தமா வந்த ஒருத்தனோடை படுத்ததுதான் அண்டைக்கு அவளுக்கு வந்த அந்த வெக்கத்துக்கு காரணம். பயத்தோடையும், ஒருவித அருவருப் போடையும், கண்ணீரோடையும், கம்பலை யோடையும் எத்தினையோ இரவுகளிலை நித்திரையைத் துலைச்ச மைதிலி அண்டைக்குத் தான் குமரனோடை எந்தவித பயமும் இல்லாமல், அருவருப்பும் இல்லாமல், நிம்மதியாகப் படுத்தாள். எழும்பிக் கட்டில் சட்டத்தில போட்டுக் கிடந்த துவாயை எடுத்து உடம்பிலை சுத்தினவள் பேந்தும் பஞ்சியாக் கிடக்க கட்டில் விளிம்பிலை ரெண்டு முழங் கைகளையும் துடையிலை ஊண்டி நாடிக்குக் கை குடுத்தபடி இருந்தாள்.

பேந்து தலையை நிமித்தி தலைக்கு மேலை கையை உயத்தித் திரும்பவும் ஒருமுறை கொட்டாவி விட்டுச் சோம்பல் முறிச்சவள் “கடவுளே நான் கனவிலும் நெச்சுப் பாத்திராத ஒரு வாழ்க்கையைத் தந்ததுக்காக உனக்கும் குமரனுக்கும் உண்ணான நான் நன்றி சொல்லிக் கொள்ளிறன்....” எண்டு சொன்னபடி கண்ணை மூடினாள்.

மூடின கண்களுக்கால துளித்துளியா வரத்துடங்கின கண்ணீர் பேந்து மளமளவெண்டு அறுமனாவோடை வள்ளம் போலவந்து கன்னங்களைத் தாண்டி நெஞ்சு முகட்டிலை விழுந்து துவாயிலை ஊறத் துடங்கினது. ஒரு வித சத்தமும் இல்லாமல் கண்ணீர் விட்ட மைதிலி நிண்டாப்போலக் கைகளாலை முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவிக் கமறி அழ வெளிக்கிட்டாள்.

கடந்த காலங்களிலை அவள் பட்ட அவலங்களும், அவமானங்களும், துயரங்களும்,

துன்பங்களும், ஏமாற்றங்களும், துரோகங்களும், சோதனைகளும் அவளின்ரை கமறலோடு வெளிப்பட்டது எண்டுதான் சொல்லவேணும். கமறலோடு கமறலாகத் தன்ரை கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பாத்த மைதிலிக்கு ஒரே மாரடிப்பாக இருந்தது.

*000*

கொஞ்சம் வறுமைப்பட்ட பேரம்பலம் சின்னம்மா தம்பதிகளுக்குப் பிறந்து வளர்ந்த மைதிலி கிராமத்துப் பொம்பிளைப் பிள்ளை யளுக்கே உரிய வெகுளித்தனத்தோடும் அப்பாவித்தனத்தோடும் வெள்ளந்தியாகவே வளந்து வந்தாள். குப்பைச் சாம்பலுக்கை மூடுப்பட்டுக் கிடக்கிற நெருப்புக் காத்து வீச முளாசி எரியிறமாதிரி கனகாலமா அமுங்கிக் கிடந்த இனமுறுகல், உசுப்பேத்தல் பேச்சுகளால் ஒரு இனப்போராகத் துடங்கிப், பேந்து பல இயக்கங்களும் உண்டாகிப், பேந்து அதுகள் எல்லாம் ஆளாளுக்கு நானோ நீயோ அடிபட்ட காலம் அது.

"உண்ணான ஆமிக்காறன் சாக்காட்டின மாதிரி எங்கட இயக்கங்களும் ஆள் மாறி ஆள் சாக்காட்டின எங்கட பெடி பெட்டையளைச் சனத்தைக் கூட்டிப் பாத்தம் எண்டால் எக்கச் சக்கமா வரும்..." எண்டு பேரம்பலம் அடிக்கடி சின்னம்மாக்குச் சொல்லுவார்.

"உப்பிடிச் சாக்காட்டினதுக்கு அவை சுலபமா தேசத்துரோகம்... இல்லாட்டில் காட்டிக்குடுப்பு... எண்டு சொல்லிச் சோலியை முடிச்சுப் போடு வினம்.." எண்டுவார் அவர்.

உந்த இயக்கச் சண்டை முடிவில் மற்ற இயக்கங்கள் எல்லாத்தையும் தடைசெய்து, இல்லாட்டில் அழிச்சுப் போட்டு, மிஞ்சி இருந்த புலிகள் இயக்கம் மட்டும் ஆமியோடை சண்டையை நடத்திக்கொண்டு இருந்தது.

உப்பிடிச் சண்டை அமளி துமளியா நடக்கிற நேரம் மைதிலி பத்தாம் வகுப்பு படிச்சுக்கொண்டு இருந்தாள். அப்பேக்கை இயக்கத்துக்கு ஆக்களைச் சேர்க்க வேணும் எண்டு போட்டு ஊரூராய்தெருக்கூத்துகள் அமள்துமளியா நடந்தது. அப்பிடி ஒருநாள் ரியூசனுக்குப் போகேக்கை போட்ட தெருக் கூத்தைப் பாத்து உணர்ச்சி வசப்பட்ட மைதிலி கொண்டு போன சயிக்கிளை டியூட்டரிக்குக் கிட்டத் தெருவிலை நிண்ட புளிய மரத்துக்கு கீழை சாத்திப்போட்டு ரியூசனுக்குத் தன்னோட வந்த தன்ரை சினேகிதப் பெட்டையள் நாலைஞ்சு பேரோடை இயக்க வாகனத்திலை ஏறிப் போட்டாள்.

ரியூசனுக்குப் போன பெட்டையைக் காணேல்லை எண்டு தேடின தாய் தேப்பன் இயக்க வாகனத்திலை அவள் ஏறிப்போனவள் எண்டு ஆரோ சொன்னதைக் கேட்டு முகாம் வாசலுக்குப் போய் அழுது குளறிச்சினம். முகாம் பொறுப்பாளருக்கு மேல மண் அள்ளி எறிஞ்சு, "குறுக்கால போவானே கோதாரி விழுவானே... எங்கையடா எங்கட பெட்டை...." எண்டு சின்னம்மா திட்டினா.

எவ்வளவு அழுது குளறியும் அவங்கள் மைதிலியைக் கண்ணிலை காட்டவே இல்லை. அப்பிடி ஒரு ஆள் வரவேயில்லை எண்டு நாண்டுகொண்டு நிண்டாங்கள்.

"நாசமாப் போவாங்கள் ஒரு நாளும் நல்லாவே இருக்க மாட்டியள்..... ஒருநாளைக்கு ஒண்டும் இல்லாமல், அழிஞ்சுதான் போவியள்....." எண்டு சின்னம்மாவால இயக்கப் பெடியளைத் திட்ட மட்டும்தான் முடிஞ்சுது.

போன பெட்டை போனதுதான். அவை தாய் தேப்பன் வெறும் கையோட வீடு போய்ச் சேந்தினம். ஒவ்வொரு நாளும் கண்ணீரும் கம்பலையுமாத் தின்னாமல் குடியாமல், நித்திரை கித்திரை கொள்ளாமல், துடிச்சுப் பதறின பேரம்பலமும் சின்னம்மாவும் ஒருமாதிரித் தங்களை ஆசுவாசப் படுத்திக்கொண்டு தங்கடை சோலி சுறட்டைப் பாக்க வெளிக் கிட்டிச்சினம். இப்பிடி இருக்கேக்கை ஆறு மாதங்களுக்குப் பிறகு வந்த இயக்கப் பிள்ளை ஒண்டு மைதிலி குடுத்து விட்டது எண்டு சொல்லி ஒரு கடிதத்தைக் கொண்ணந்து குடுத்தது. அதிலை மைதிலி தான் சுகமா இருக்கிறதாகவும் தன்னைப் பற்றி ஒண்டும் யோசிக்க வேண்டாம் எண்டும் எழுதி இருந் தாள். பேந்து நிண்டாப்போலை ஒரு நாள் திடுதிப்பெண்டு வந்தாள் மைதிலி.

"நான் லீவிலை வந்தனான்.....ரெண்டொரு நாளைக்கு இஞ்சை வீட்டிலை தானணை நிக்கப்போறன்....." எண்டு சிரிச்சுக்கொண்டே தாயைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினவள் சொன்னமாதிரியே வீட்டிலை நிண்டாள்.

அவள் வீட்டிலை நிண்ட ரெண்டு மூண்டு நாட்களும் தாய் தேப்பன் அவளுக்கு விதம் விதமாய்ச் சமைச்சுப் போட்டினம். அவள் வந்த புதினம் அறிஞ்ச இன சனம் அவளிட்டைச்




சுகம் விசாரிக்கிற சாட்டிலை விடுப்புப் பாக்க வந்திச்சினம். லீவு முடிஞ்சு மைதிலி போக வெளிக்கிடேக்கை "கவனம் பிள்ளை.....சண்டை பிடிக்கிறன் எண்டு போட்டு மொக்குத்தனமா முன்னுக்குப் போகாதை....." எண்டு சின்னம்மா கண்ணீரும் கம்பலையுமாச் சொன்னதைக் கேட்டு கெக்கட்டம் போட்டுச் சிரிச்சாள் மைதிலி.

"எணேய்..அம்மா ஒரு நாளைக்குச் சாவம் எண்டு தெரிஞ்சுதானே நாங்கள் சண்டைக்குப் போற னாங்கள் ....பேந்து அதுக்குள்ளை முன்னுக்கு பின்னுக்கு எண்டு பாக்கேலுமேணை....."

"முன்னுக்கு விழுகிற குண்டு பின்னுக்கு விழாதேணை.... " எண்டு சொன்ன மைதிலி தன்ரை முகாமுக்குத் திரும்பிப் போட்டாள்.

காலம் உருண்டு ஓடினது அதோட சேந்து சண்டையும் அதன் நோக்கமும் கூட ஒருபக்கமாக ஓடியது. மைதிலி சண்டைக் களத்திலை தன்ரை அணியோடை நிண்டு சண்டை பிடிச்ச அணி ஒண்டிலை இருந்த மாறன் எண்ட போராளியை விரும்பித் தலைமையின்ரை அனுமதியோடு கலியாணம் கட்டி மூண்டு பிள்ளையளுக்குத் தாயுமாகி விட்டாள். சண்டை உக்கிரமான படியாலை மைதிலிக்குத் தன்ரை பிள்ளையளைக் கொண்டு போய்த்தாய் தேப்பனுக்கு காட்டிறதுக்குக்கூட நேர காலம் அமையேல்லை. மைதிலி கலியாணம் கட்டிப் பிள்ளை குட்டியோட இருக்கிறாள் எண்டதை ஆரோ சொல்லிக்கேட்ட தாய் தேப்பன் சரியாச் சந்தோசப் பட்டினம்.

"என்ரை பிள்ளையாரே...என்ரை குஞ்சு குருமனை நாங்கள் சாகிறதுக்கு இடையில கொண்ணந்து எங்களுக்குக் காட்டிப்போடு....." எண்டு சின்னம்மா பிள்ளையாரைக் கும்பிடாத நாளே கிடையாது . பிள்ளையாருக்கு வழக்கம் போல சின்னம்மா கத்தினது கெஞ்சினது ஒண்டும் காதிலை விழேல்லை.

தங்கடை பேரப் பிள்ளையளைத் தாங்கள் கண் மூடுறதுக்கு இடையிலை எப்பிடியெண்டான்ன பாக்கவேணும் எண்டு துடிச்ச பேரம்பலத்துக்கும் சின்னம்மாவுக்கும் அதுகளைப் பாக்கிறதுக்கு நேரம் கடைசிவரையும் அமையேல்லை. அதுகளைப் பாக்காமலே ஒரு நாள் விமானப்படை வீசின கொத்துக்குண்டில ஆப்பிட்டு மண்ணோடு மண்ணாகிப் போட்டினம். அவை மண்ணோடு மண்ணாகிப் போனதாலை சவத்தைக் கொண்டு போய்ச் செத்தவீடு செய்யக் காசில்லை எண்ட பிரச்சினை சொந்தக்காறர் ஒருத்தருக்கும் வரேல்லை.

"உப்பிடித்தான் எங்கட கனசனம் சண்டையில ஆப்பிட்டு அனாதையாச் செத்துப் போனதுகள். அந்தச் சனங்களுக்கு செத்த வீடு, கிறுவை, கொள்ளிவைப்பு, எட்டு வீடு, அந்தியேட்டி, பூசை வீடு, ஆட்டைத் திவசம், எள்ளும் தண்ணியும் இறைப்பு எண்டு ஒண்டும் நடந்தது இல்லை....."

"அதுக்கு ரெண்டு காரணங்கள் எண்டு சொல்லலாம். ஒண்டு உதுகளைச் செய்ய அந்தக் குடும்பங்களிலை ஒருத்தரும் மிஞ்சி

இருக்கேல்லை எல்லாருமே செத்திருப்பினம். ரெண்டாவது உப்பிடிச் சனங்கள் அல்லோல கல்லோலப்பட்டுச் செத்துப் போச்சுதுகளே எண்டதைக் கனபேர் மறந்தே போட்டினம்......"

"உப்பிடிக் கனசனம் சண்டை பிடிச்ச ரெண்டு பகுதிக்குள்ளையும் ஆப்பிட்டு செத்த விஷயம் சண்டை முடியும் வரைக்கும் கனபேருக்குத் தெரியேல்லை. இண்டைக்கும் கூடக் காணாமல் போனவை திரும்பக் கிடைப்பினம் எண்ட நம்பிக்கையிலை தேடிக் கனசனம் அங்கயும் இஞ்சையுமா நாயாப் பேயா அலைஞ்சு திரியுதுகள்...." எண்டு உந்தக் காணமல் போன சனங்களைப் பற்றிப் போராட்டம் செய்யிற ஐயா ஒருத்தர் அடிக்கடி சொல்லுவார். அப்பிடித்தான் மைதிலிக்கும் கூடத் தன்ரை தாய் தேப்பன் செத்த புதினம் அவள் சண்டை முடிஞ்சு ஊருக்குப் போகும் வரைக்கும் தெரியாது.

சண்டையில ரெண்டு காலும் துடையோட இல்லாமல் போன மாறனும் தெய்வாதீனமாகக் காயம் கீயம் ஒண்டும் இல்லாமல் தப்பின மைதிலியும் புனர்வாழ்வு முடிஞ்ச பிறகு ஊரிலை எண்டான்ன போய் இருப்பம் எண்ட நம்பிக்கையோட போச்சினம். அங்கை அவளின்ரை தாய் தேப்பன்ரை வீடு இருந்த இடத்திலை இருந்த கல்லுக் கும்பி ஒண்டுதான் அவையை வரவேற்றது.

"அடக்கடவுளே ஊரிலை எப்பிடி யெண் டான்ன சீவிக்கலாம் எண்டு இருந்த ஒரே ஒரு நம்பிக்கையும் இல்லாமல் போட்டுதே..."

"கை கால் ஏலாத மனுசனோடையும் ஒண்டுக்கு மூண்டு பிள்ளையளோடையும் இருக்க இடம் இல்லாமல் என்னண்டு சீவிக்கப்போறன்....." எண்டு மைதிலி ஆதங்கப்பட்டாள்.

இருக்க இடம் இல்லாமல் தவிச்ச மைதிலி குடும்பத்துக்கு நெஞ்சில ஈரம் இன்னும் கொஞ்சம் மிச்சமா உள்ள ரெண்டொரு மனிசர் தரப்பாள் ரெண்டு மூண்டையும் கொஞ்சக் காட்டுத்தடியளையும் குடுத்தினம். அதுகளைப் பாவிச்சுத் தற்காலிகமாப் போட்ட ஒரு கொட்டிலிலை மைதிலி குடும்பம் தங்கட சீவியத்தைத் துடங்கிச்சினம். மாறனுக்கு இடுப்புக்கு கீழை ஒண்டுமே இயங்காது எண்டபடியாலை அவனால ஒண்டும் செய்ய ஏலாது. அதால மைதிலிதான் அங்கை இஞ்சை எண்டு ஓடித்திரிஞ்சு கிடைச்ச தொட்டாட்டு வேலையளைச் செய்து மாறனுக்கும் பிள்ளையளுக்கும் ஒருவேளைக்கு எண்டான்ன சாப்பாடு போட்டாள்.

உதவிக்கு ஒருத்தரும் இல்லாமல் நாதியத்துப் போன தங்கட நிலையை எண்ணி மாறனும் மைதிலியும் நெடுகவும் கவலைப் படுவினம்." மற்றக் காசுக்கார வீட்டுப் பெடி பெட்டையள் மாதிரி நாங்களும் வெளிநாட்டை தப்பி ஓடி இருக்கலாம் ....இல்லாட்டில்




நான் இருக்கிறேன்
உங்களுக்கு ஆறுதல் சொல்ல என்று
சொன்ன வாயும்
தடம் புரண்டு
அந்த "மடைத்தலையில்"
வீழ்ந்து கிடக்குது காண்..!

உன்னிடம்
அன்பாக இருப்பேன்
என்றுதான் நான் சொன்னேன்
அடிமையாக இருப்பேன் என்று
சொன்னேனா..? எப்பவும்
அப்படி நான் சொல்லவில்லை
அப்படி நான் சொல்லவுமாட்டேன்..!

இப்பவெல்லாம்
உன்னை
உறவு சொல்லி
உரிமை பாராட்டி
நான் பேச வரும்
ஒவ்வொரு பொழுதிலும்
திமிராகவே பேச நினைக்கிறாய், நீ..!

ஒரு மனிதனுக்குள்
எதுவும் நிரந்தரமில்லை என நினைத்து
வாழ நினைப்பவன், நான்..!

**– சமரபாகு சீனா உதயகுமார்**

கொழும்புக்குத்தன்னும் ஓடிப்போய் எண்டான்ன என்னத்தையும் படிச்சுக் கிடிச்சு ஒரு வேலையை எடுத்து இருக்கலாம்.....'' எண்டு தன்ரை கவலையைப் பகிர்ந்து கொள்ளுவான் மாறன்.

''சும்மா எங்கட இனம் எங்கட சனம் எண்டு வீணாப் போராட வெளிக்கிட்டுப் போய் இருக்கிறம்.....''

''எந்தச் சனத்துக்கு எண்டு போராடப் போனமோ இண்டைக்கு அந்தச் சனமே எங்களைத் திரும்பியும் பாக்குதுகள் இல்லை ..... நன்றி கெட்டதுகள்.. எங்களை வெறும் போடுதடியளா நெக்குதுகள்.....''

''மனுசத்தன்மை அஞ்சாத்துக்கும் இல்லாத உதுகளுக்காகத்தானே இண்டைக்கு என்ரை ரெண்டு கால்களையும் துலைச்சுப் போட்டு நிக்கிறன் .....'' எண்டு இல்லாத முழங்காலுக்கு மேல காஞ்சு கறுத்து ஊழலிச்சுப் போய்க்கிடந்த ரெண்டு சதைத் துண்டங்களையும் கையளால தடவிப் பாத்துக் கண் கலங்கினான் மாறன் .

ஆறடி உயரத்தில கம்பீரமா வாட்ட சாட்டமா இருந்த மாறன்ரை இண்டைய நிலையைப் பாத்தால் ஆருக்கும் கழிவிரக்கம் வரும். தான் காதலிச்சுக் கட்டின தன்ரை புருஷன் கண் கலங்கினதைப் பார்த்த மைதிலி கலங்கிப் போனாள்.

''இஞ்சாருங்கோ.. ஒண்டுக்கும் யோசியாதை யுங்கோ எல்லாத்துக்கும் நான் இருக்கிறன் எல்லே...'' எண்ட மைதிலி ''கடவுள் எண்டவர் இருக்கிறார் போல...... நல்ல வேளை என்ரை கையள் கால்களுக்கு ஒண்டும் நடக்கேல்லை...''

''நான் உழைச்சு உங்களையும் பிள்ளை யளையும் காப்பாத்துவன்..'' எண்டாள்.

''படிப்பு, பதவி, சொத்து, சுகம் எண்டு எல்லாத் தையும் விட்டுப்போட்டுப் போராடப்போய் இளம் வயதிலை அங்கவீனமாப் போன புருசனோ பெண்சாதியோ உள்ள குடும்பங்கள்,... இல்லாட்டில் ரெண்டு பேருமே அங்கவீனமாப் போன குடும்பங்கள்...., சண்டைக்குப் போய்ப் பலியான பிள்ளையளின்ரை குடும்பங்கள்... எண்டு நிறையக் குடும்பங்கள் இண்டைக்கு எத்தினை இருக்குது... எங்க இருக்குது எண்டு ஒருத்தருக்கும் ஒழுங்காத் தெரியாது '' எண்டு சொல்லி அவள் பெருமூச்சு விடுவாள்.

''இருக்க இடம் இல்லாமல்..., தின்னக் குடிக்க வழி இல்லாமல்..., வாதை வருத்தத் துக்கு மருந்து மாத்திரை எடுக்க முடியாமல்..., பாக்க எடுக்க உதவி ஒத்தாசை செய்ய ஆளில் லாமல்..... உப்பிடி எத்தினை குடும்பங்கள் அல்லாடுதுகள்...'' எண்டு நெடுகவும் கவலைப் படுவாள்.

''தேசியம் விடுதலை எண்டு கத்திக் குளறித்திரிஞ்சு செத்தவங்களையும் இப்பிடி அங்ககவீனமாப் போனவங்களையும் காட்டிக் காட்டி வாக்குப் பிச்சை கேட்டுத் திரி யிற எந்த ஒரு போக்கிலியும் எங்களை மாதிரிக் குடும்பங்களைத் திரும்பியும் பாக்கேல்லையே......'' எண்டு எண்ணி எண்ணி மைதிலி மனசுக்குள்ளை மறுகாத நாளே இல்லை எண்டு சொல்லலாம்.

''பேசாமல் என்னொத்த மற்றப் பெட்டை யள் மாதிரி நானும் இயக்கத்துக்குப் போகாமல் படிச்சு இருந்தால் இப்பிடி ஒரு நரக வாழ்க்கை எனக்கு கிடைச்சிருக்காது....'' எண்டு பெருமூச்சு விட்டாள் அவள் .

இப்பிடி இருக்கேக்கை ஒரு நாள் நிண்டாப் போல மூச்செடுக்கக் கஷ்டப்பட்ட மாறன் ''ஐயோ என்ரை பிள்ளையள்........'' எண்டு கத்தினபடியே செத்தே போனான்.

''புனர்வாழ்விலை இருக்கேக்கை போட்ட ஏதோ ஒரு ஊசியாலைதான் அவன் செத்துப் போனவன்....''

''உப்பிடித்தான் புனர்வாழ்வாலை வந்த கனபேர் நிண்டு நிண்டாப்போல செத்துப் போறாங்கள்....'' எண்டு செத்த வீட்டை வந்த சனங்கள் குசுகுசுத்ததுகள். சண்டை முடிஞ்சு இத்தினை வருசங்கள் போன பிறகும் அதுகளுக்கு இப்பவும் சில விசயங்களை வெளிப்படையாப் பேசப் பறையப் பயம்.

மாறன் இருக்கும் வரைக்கும் முடம் எண்டாலும் பேருக்கு ஆம்பிளை எண்டு ஒருத்தன் வீட்டிலை இருக்கிறான் எண்ட தெம்பிலை மைதிலி இருந்தாள். எண்டாலும் அவளின்ரை அந்த நம்பிக்கையிலும் மண் விழுந்தது. உதவி செய்யிறம் எண்ட போர்வையில வந்த சிலர் அவளைப் பார்வையாலேயே புணர்ந்தாங்கள். அதில ரெண்டொருத்தர் உண்மையாவே அவளைப் புணரப் போனாங்கள், எண்டாலும் மைதிலி அந்த அனர்த்தங்களிலை இருந்து ஒரு மாதிரித் தப்பிவிட்டாள். பிள்ளையள் வளர வளர மைதிலியின்ரை உழைப்பு ஒண்டுக்கும் காணமல் போனது.

“கடவுளே பெடி பெட்டையளை என்னண்டு வளக்கப் போறன்... அதுகளின்ரை படிப்புச் சிலவு... சாப்பாட்டுச் சிலவு... உடுப்புச் சிலவு... மற்றச் சிலவுகளை என்னண்டு சமாளிக்கப் போறன்...” எண்டு நெச்சு அவள் ஆதளி மாதளிப்பட்டுப் போனாள்.

அந்த நேரம்தான் அவளின்ரை சிநேகிதி ஒருத்தி கொழும்பிலை காமன்ட்சில வேலை செய்தால் நல்லா உழைக்கலாம் எண்டு சொன்ன கதைக்கு எடுபட்டுக் கொழும்புப் பக்கம் போனாள் மைதிலி.

“பொம்பிளையைப் பிள்ளையளை வீட்டிலை விட்டுப் போட்டு மத்திய கிழக்குக்கு வேலைக்கு எண்டு தாய்மார்கள் போன எத்தினையோ வீடுகளிலை சித்தப்பன், பெரியப்பன், மாமன், மச்சான், சொந்தக்காரன், பக்கத்து வீட்டுக்காறன் எண்டு எத்தினையோ பேர் பொம்பிளைப் பிள்ளையளைப் பாலியல் பலாத்காரம் செய்த கதையள் அரசல் புரசலா உலாவுது...”.

“கடவுளே என்ரை பொம்பிளையைப் பிள்ளையை ஆரோட விட்டுப்போட்டு நான் கொழும்புக்குப் போறது...” எண்டு ஏங்கிப் போனாள் அவள்.

எண்டாலும் ஒண்டும் செய்ய வழி இல்லாத மைதிலி தன்ரை ரெண்டு பெடியளையும் ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளையையும் தன்ரை தூரத்துச் சொந்தக்காரர் ஒருத்தரின்ரை வீட்டிலை விட்டுப் போட்டு கொழும்புக்கு வெளிக்கிட்டாள். கொழும்புக்குப் போன மைதிலிக்கு அவள் நெச்ச மாதிரி நிலைமை இருக்கேல்லை. காமன்ட்ஸ்காறங்கள் குடுத்த சம்பளம் அவளின்ரை சாப்பாட்டுக்கும் அறை வாடகைக்கும்தான் போதுமானதாக இருந்தது. என்ன செய்யிறது எண்டு தெரியாமல் ஆதளிமாதளிப்பட்ட மைதிலி அழுது குளறிக் கும்பிட்ட கடவுள்களே இல்லை எண்டு சொல்லலாம்.

“முள்ளிவாய்க்காலிலை துடிச்சுப் பதைச்ச சனம் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வராத கடவுள் நான் அழுது குளறினாலும் வரவோ போகிறார்" எண்டு வாய் விட்டுச் சொன்ன மைதிலி பேந்தும் துக்கம் தாங்காமல் “கடவுளே..... கடவுளே... " எண்டு கதறி அழுதாள். அப்பிடி அழுது குளறுறது அவளுக்கு பெரிய ஆறுதலாக இருந்தது.

தின்னக் கோப்பையுக்கை கை வைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பசி பட்டினியோட இருக்கிற பிள்ளையளின்ரை முகங்கள் ஞாபகம் வந்து அவளைத் தின்ன விடாது. அத மாதிரிப்படுக்கப் போனால் அதுகளின்ரை நினைவுகள் வந்து அவளை நித்திரை கொள்ளவும் விடாது. உப்பிடி ஆன தீனும் இல்லாமல் ஒழுங்கான நித்திரையும் இல்லாமல் இருந்த மைதிலி எலும்பும் தோலுமா வரக் கண்ட அவளோடை வேலை செய்த மாலினி என்ன ஏது எண்டு விசாரிச்சாள். காமன்ட் சிலை கொஞ்சச்

## குறுங்கவிகள்

புழுதிப்பாதை விரிந்தது
கார்ப்பர்ட் வீதியாக.
நினைவுகளில் நீள்கிறது
பசியின் சுவடுகள்.

♦ ♦ ♦

குலதெய்வ வழிபாடு
உறவுகள் நிலைத்தன.
கோபுரம் உயர்ந்தது
குடும்பங்கள் கலைந்தன.

♦ ♦ ♦

மூன்றாம் நாளில்
இயேசு தொலைந்து போனார்.
ஒவ்வொரு மாதமும்
பெண் உயிர்த்தெழுகிறாள்.

♦ ♦ ♦

அன்னதானச் சபைதனில்
அவசர ஊர்தி
விரைவாகப் பயணிக்கிறது
சம்பந்தி போசனம்.

♦ ♦ ♦

**கனகசபாபதி செல்வநேசன்**
**(அல்வாய்)**

சம்பளத்துக்கு வேலை செய்தாலும் மினுக்கி கினுக்கிக்கொண்டு வரும் மாலினியின்ரை கையிலை தாராளமாக் காசு புழங்கும். வீட்டுக்கும் தாராளமாக் காசு அனுப்புவாள். அப்பதான் மாலினிதான் எப்பிடிக் காசு உழைக்கிறன் எண்ட வழியைச் சொன்னாள்.

‘‘இஞ்சபார் மைதிலி எங்கட பிள்ளையள் நேரத்துக்கு தின்னவேணும் குடிக்க வேணும் எண்டால்..... நல்ல உடுப்புப் போடவேணும் எண்டால்... படிக்க வேணும் எண்டால்... வருத்தம் வாதை வந்தால் வைத்தியம் செய்ய வேணும் எண்டால்... எங்கட கையிலை காசு இருக்க வேணும் கண்டியோ...’’

‘‘பிள்ளையளுக்கு எண்டு வாழ முடிவு எடுத்த நாங்கள் எப்பிடி வாழ்ந்தால்த்தான் என்ன.... ஆனபடியால நீ ஒண்டுக்கும் யோசியாதை... நான் போற இடத்துக்கும் நீயும் நாளையில இருந்து வா....’’ எண்டபடி வெளிக்கிட்டுப் போனாள் மாலினி.

மாலினி போனதிலை இருந்து பல வாறாகவும் யோசிச்ச மைதிலி தன்ரை பிள்ளையளின்ரை வாழ்க்கைக்காக மாலினி சொன்னதுபோலத் தன்ரை உடம்பை விக்கத் தீர்மானிச்சாள். இப்ப அவளின்ரை கையிலை காசுப் புழக்கத்துக்கும் குறைவில்லை அதோட பிள்ளையளின்ரை சிலவுக்கும் தாராளமா அனுப்பத் துடங்கினாள்.

*000*

உப்பிடித்தான் அவள் காசு உழைக்கப் போற இடத்துக்கு என்னவோ அலுவலா வந்த புலம் பெயர் தேசம் ஒண்டிலை இருக்கிற சிறி எண்ட முன்னாள்ப் போராளி ஒருத்தன் தற்செயலா அவளைக் கண்டு கதைச்ச நேரத்திலை அவளின்ரை நிலையை அறிஞ்சு சரியாக் கவலைப் பட்டான்.

‘‘சாய்..... எங்கட சனத்துக்காக அவையின்ரை வாழ்க்கைக்காக நாங்கள் இளந் தாரியளா இருக்கேக்கை எடுத்த முடிவு சரி இல்லைப் போல ....’’

‘‘எங்கட படிப்பு, எதிர்காலம், இளமை எல்லாத்தையும் வீணாக்கிப் போட்டமே....’’

‘‘இப்பிடிக்கொத்த எங்களை வைச்சு அரசியல் செய்யிறவங்களும் எங்களைத் திரும்பியும் பாக்கிறாங்கள் இல்லையே....’’ எண்டு கோவப்பட்டான்.

சிறி வெளிநாட்டிலை துப்பரவுத் தொழிலாளி யாத்தான் வேலை செய்யிறான். போராட்டத் துக்காகப் படிப்பை இடையில கைவிட்ட அவனாலை துப்பரவுத் தொழிலாளியாத்தான் வர முடிஞ்சுது. தன்ரை மண்ணையும் சனத்தையும் இன்னும் மறக்கேலாமல் தன்ரை உழைப்பில ஒருபகுதியை இண்டைக்கும் உதவி எண்டு சிலவழிச்சுக் கொண்டு வந்தான் அவன். அப்பிடிக் கொத்தவனுக்கு தங்களோட நிண்டு ஒரு காலத்திலை போராடின மைதிலி உப்பிடியான தொழில் செய்யிறதிலை கொஞ்சமும் புறிய மில்லை. அதால அவன் மைதிலிக்கு உப்பிடியான தொழில் செய்யக்கூடாது எண்டு விஷயத்தை விளங்கப்படுத்தித் தான் மாதம் மாதம் அவளின்ரை குடும்பச் சிலவுக்கு காசு தாறதாச் சொல்லி அவளைச் சம்மதிக்க வைச்சு ஊருக்கு அனுப்பி வைச்சான்.

விடுமுறை முடிஞ்சு தான் சீவிக்கிற நாட்டுக்குப் போன சிறி மைதிலியின்ரை பிரச்சினையைத் தன்னைப் போல இருக்கிற ரெண்டொரு முன்னாள் போராளியளுக்குச் சொன்னான்.

‘‘மச்சான் நாங்கள் உப்பிடிக்கொத்த ஆக்க ளுக்கு உதவ வேணும். அவையின்ரை வாழக்கை யைச் செம்மைப்படுத்த வேணும்..’’

‘‘சமூக பொருளாதார நெருக்கடிகளிலை இருந்து அவையை விடுவிக்க வேணும். அதுகும் ஒருவகை விடுதலைப் போராட்டம் தான் ...’’ எண்டு சிறி தன்ரை கருத்துகளைச் சொன்னான்.

சிறியோட தொடர்பில இருந்த முன்னாள் போராளிகளிலை ஒருத்தன்தான் குமரன். சண்டை முடிவில ஏதோ ஒரு விதமா லண்டனுக்கு வந்தவனுக்கு அவன்ரை உடம்பில நிறைஞ்சு போய் இருந்த காயக்குறிகளாலை விசா கிடைக்கிறதில ஒரு பிரச்சினையும் இருக்கேல்லை. விசா கிடைக்கும்வரை தமிழ்க் கடை ஒண்டிலை கொஞ்சக் கைக்காசுக்கு வேலை செய்தவன் விசா கிடைச்ச பிறகு இப்ப கொஞ்சம் சம்பாரிக்கத் துடங்கி இருந்தான்.

‘‘தமிழ்க் கடைக்காறர் எண்டு சொல்லிற ஆக்கள் சிலர் விசாக் கிடைக்காத ஆக்களை அடிமாடுகள் மாதிரி குறைஞ்ச சம்பளம் குடுத்து வேலை வாங்குவினம்..... சில நேரம் சம்பளமே குடுக்க மாட்டினம்... பேந்து அப்பிடிச் சம்பாரிச்ச காசைக் கொண்டு போய் ஊரிலை

கோயில் குளத்துக்கு எண்டு சிலவழிச்சு கடவுளையும் அடி மாடு மாதிரி ஆக்குவினம்.... ‘‘ எண்டு தன்ரை தமிழ்க்கடை அனுபவத்தை அடிக்கடி குமரன் அசை போடுவான்.

குமரன் உழைக்கத் துடங்கின கையோட அவனுக்கு ஒரு கலியாணம் செய்ய வேணும் எண்டு அவன்ரை வீட்டுக்காறர் வெளிக் கிட்டிச்சினம். விசா இருக்கிற லண்டன் மாப்பிளை எண்டதும் பொம்பிளைப் பிள்ளையளை வைச்சிருக்கிற ஆக்கள் வழக்கம் போல போட்டி போட்டுக் கொண்டு விழுந்து எழும்பிச்சினம்.

அப்பிடிச் சாதகம் பொருந்தி வந்த ஒரு இடத்திலை பேச்சுக்கால் வைச்ச நேரம் ‘‘ இஞ்ச பாருங்கோ சீதனம் எண்ட பெயரிலை குடுக்கல் வாங்கல் எண்டு ஒண்டும் இருக்கப்படாது..... பொம்பிளைப் பிள்ளையளைப் பெத்தவைக்கு நாங்கள் கரைச்சல் குடுக்கப்படாது......’’ எண்டு குமரன் தன்ரை தாய் தேப்பனிட்டைக் கறாராச் சொல்லிப் போட்டான்.

ஒரு நல்ல நாளிலை இலங்கைக்குப் போய் தாய் தேப்பன் பாத்து வைச்ச வசந்தியைக் கலியாணம் கட்டினவன் கொஞ்ச நாளிலேயே அவளை லண்டனுக்குக் கூப்பிட்டு எடுத்தான். வசந்தியைப் பேசி முடிச்ச குமரன்ரை தாய் தேப்பன் அவளுக்கு ஒரு காதலன் இருந்ததையும் அவனும் லண்டனிலைதான் இருக் கிறான் எண்டதையும் அறியேல்லை. அல்லது கலியாணம் பேசின தரகர் அந்த விஷயத்தை தரகுக் காசுக்காக மறைச்சுப்போட்டான் போல. விசா இல்லாமல் இருக்கிற தன்ரை காதல னிட்டை போய்ச் சேர விசா என்னண்டு எடுக்கிறது எண்டு தெரியாமல் அந்தரப்பட்ட வசந்தி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி லண்டனுக்கு வந்த ரெண்டு மூண்டு நாளிலேயே குமரனை விட்டுப்போட்டு தன்ரை காதலனிட்டைப் போய்ச் சேர்ந்தாள். காட்டிக் குடுப்புகளாலையும், கழுத்தறுப்புகளாலையும், முட்டாள்த்தனமான முடிவுகளாலையும் தோத்துப்போன போராட்டத்தை நெச்சுத் துடிச்ச மாதிரியே வசந்தியின்ரை நம்பிக்கைத் துரோகத்தையும் நெச்சுத் துடிச்ச குமரன் ஒருமாதிரித் தன்னைத் தேத்திக்கொண்டு சட்ட பூர்வமாக வசந்தியைக் கை கழுவி விட்டான்.

தனக்கு ஒரு துணை இல்லாமல் தவிச்ச குமரன் மைதிலியின்ரை கதையைச் சிறி சொன்னதும் அவளுக்கு வாழ்வு குடுக்கத் தீர்மானிச்சான். ‘‘தேச விடுதலைக்குப் போராட எண்டு வெளிக்கிட்ட நான் எந்தச் சமூகத்துக் காகப் போராடப் போனனோ.... அந்தச் சமூகத் துக்காகப் போராடிக் கடைசியில அந்தச் சமூகத்தால் பாராமுகமாக வஞ்சிக்கப்பட்ட ஒரு பொம்பிளையின்ர சமூக விடுதலைக்கு உதவி செய்யிறதும் ஒரு வகைப் போராட்டம்தான்........’’ எண்டு தன்ரை முடிவுக்கு தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

தன்ரை முடிவை சிறி ஊடாக மைதிலிக்குத் தெரிவிச்ச குமரன் மைதிலியையும் அவளின்ரை பிள்ளைகளையும் லண்டனுக்கு எடுக்கிறதுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் சிறியின்ரை உதவி யோட செய்தான். எண்டாலும் பாஸ் போட்டிலை இருந்த பிரச்சினையால அவனால் பிள்ளைகளை உடன லண்டனுக்கு எடுக்க முடியாவிட்டாலும் மைதிலியை ஒரு மாதிரி எடுத்தான். எண்டாலும் பிள்ளைகளை எடுக்கிறதுக்கான முயற்சியளை அவன் கை விடேல்லை தொடர்ந்து முயன்று கொண்டிருந்தான்.

000


‘‘மைதிலி ...... மைதிலி .......’’ எண்டு குமரன் கத்திக்கொண்டு வரவும் என்னவோ ஏதோ எண்டு ஓடிப்போன மைதிலி ‘‘என்ன ஏன் இந்தக் கத்து கத்திறியள்.....’’ எண்டு கேட்டாள் .

‘‘மைதிலி பிள்ளையளின்ரை பாஸ் போர்ட் அலுவல் விசா அலுவல் எல்லாம் சரி..... நாளைக்கு வாற பிளேனில ஹீத்ரூ வருகினம்....’’

‘‘இனி நீ ஒண்டுக்கும் கவலைப்படத் தேவையில்லை.....’’ எண்டதும் மைதிலி அவனைப் பாய்ஞ்சு இறுக்கிக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சோ கொஞ்சு எண்டு கொஞ்சினாள்.

அவள் குமரனை இறுக்கின இறுக்கில அவிண்டு விழுந்த அவள் கட்டியிருந்த துவாய் விழுந்தது விழுந்தபடியே தேடுவாரற்றுக் கிடந்தது சில ஊனமுற்ற முன்னாள் போராளி களைப் போல.....

❍❍❍



# தற்கொலை

கடிகாரம் மட்டும் டிக் டிக் என்றது
அவள் இதயமும் பக் பக் என்றது
நீண்ட நாட்களுக்கு முன்பு
வந்து போன அம்மா நித்திராவை நினைத்து
ஏங்கினாள் நீதிதேவதை.

தன் கண்களைக் கட்டியிருந்த
கறுத்தத் துண்டை அவிழ்த்து எறிந்தாள்
அந்த நீதிமன்றம் வெறிச்சோடிக் கிடந்தது
நீதிபதிகள் எவரும் வேலைக்கு வரவில்லை.
தெருவில் இறங்கி நடந்தாள்.

"நான் சரி நீ பிழை
எனக்குத் தெரியும் உனக்குத் தெரியாது
நான் பெரியவனா இல்லை நீயா?"
வார்த்தைகள் வெடிகுண்டுகளாகி
தெருவெங்கும் வெடித்தன.

ஒப்பாரிகள் வானை முட்டின.
ஆண், பெண், குழந்தைகள்,
முதியவர்கள் என
வார்த்தைகள் பந்தாடப்பட்டன
வெடி குண்டுகளாகப் பந்தாடப்பட்டன.
அவள் பிள்ளைகள்
தாமே வழக்காடுபவர்களாக
தாமே நீதிபதிகளாக
இருக்கக் கண்டாள்.

குருசேத்திர யுத்தத்தை
தமக்குத் தாமே நடத்தினர்.
எல்லோரது கைகளிலும் தராசு
ஒருவரை மற்றவர் அளந்து அளந்து
தத்தம் இதயங்களைத் தாமே
சந்தேகங்களுக்கு அடகு வைத்து
மீட்க முடியாது மாண்டு போயினர்.

நடக்க முடியாமல் அழவும் முடியாமல்
தன் கால் போன போக்கில்
நடந்து போன நீதிதேவதையை
வாரியணைத்து முத்தமிட்டன
கடலலைகள்.
"அம்மா என்னை நீ எடுத்துக் கொள்"
விம்மியபடி முன்னோக்கி நடந்தாள்.
"அம்மா என்னையும் கூட்டிப்போ"
பென்சனுக்குப் போனமகன்
பொன்னம்பலம் புலம்பி நின்றான்.
தன்னிலை மறந்தவள்
தன் மகன் நிலையுணர்ந்து
மீண்டு வந்தாள்.
மகனுக்கு வேலை தேடுவதற்காக.
முன்னோக்கி வந்த கடலலைகள்
பின்னோக்கி நகர்ந்தன.

**– கலாநிதி ஜீவகுமாரன்**
(டென்மார்க்)

# கதிர்காமத் திருமுருகன்:
## பதிப்பு வரலாறும் விசாரணையும்






கலாநிதி
**செல்லத்துரை சுதர்சன்**
(தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)


### அறிமுகம்

தமிழரது அரசியல் சமூக பண்பாட்டு வரலாறு தொடர்பான முக்கியத்துவம் மிக்க பல நூல்களை வெளியிட்டுவரும் ***கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை***, கடந்த வருடம் (2024) ***'கதிர்காமத் திருமுருகன்'*** என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நூலைச் செம்பதிப்பாக வெளியிட்டது. பதிப்பு வரலாற்றில், இதுவரை எட்டுப் பதிப்புகளைக் கண்ட இந்த நூல், திருத்திய செம்பதிப்பு எனும் புதிய பதிப்போடு ஒன்பதாவது பதிப்பினையும் கண்டுள்ளது. மலையக நூற்பதிப்பு வரலாற்றில் இந்த நூல் மாத்திரமே ஒன்பது பதிப்புகளைக் கண்ட நூல். இது ஒரு ***வரலாற்றுச் சாதனை***. மகிழ்வு தரும் விடயமுங்கூட.

பலரும் கண்டுகொள்ளாத, மலையகத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்றான இந்த நூலை, கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையினர் தேடிக் கண்டெடுத்து, திருத்திய செம்பதிப்பாக வெளியிட்டமை, மலையக நூற்பதிப்பு வரலாற்றில் முதன்மையான செயற்பாடாக அமைகிறது. இந்த நூலின் பதிப்பு வரலாற்றையும் இதன் மீதான விசாரணையையும் மேற்கொள்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

### பதுளை வ. ஞானபண்டிதன்


***'கதிர்காமத் திருமுருகன்'*** என்கின்ற நூலின் ஆசிரியர் இலங்கையைச் சேர்ந்த, பதுளை வ.ஞானபண்டிதன் அவர்கள். அவர், ***பதுளை சமத்துவ சங்கத் தலைவர்*** பதவியிலிருந்து, சாதிய அடக்கு முறைக்கு எதிரான பிரசாரகராகவும் செயற்பாட்டாளராகவும் இயங்கியவர். சமூக சமத்துவப் போராளியாகத் திகழ்ந்தவர். சாதிய அடக்கு முறைக்கு எதிராக, அவர் வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களும் நிகழ்த்திய பிரசங்கங்களும் அவருக்கு எதிர்ப்பினை ஏற்படுத்தின. எனினும், சமூக மற்றும் சமயப் பணிகள் குறித்துத் தான்கொண்ட இலட்சியத்தில் அவர் பின்வாங்கியதில்லை. இதனை, அவரது வாழ்வு குறித்த பதிவுகள் காட்டிநிற்கின்றன.

***"முப்பதுகளில் தீவிர சாதிய மறுப்பைப் பிரசங்கித்து, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கருத்தோட்டங்களை மலையக மக்கள் மத்தியில் ஊன்றச் செய்தவர்களில், பதுளை வ.ஞானபண்டிதனின் பங்கு முக்கியமானது" என்று மு. நித்தியானந்தன் அவர்கள் 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்'*** (2023:142) என்னும் நூலில் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஞானபண்டிதன், பதுளையின் லோவர் வீதியில், பத்துக்கும் மேற்பட்ட வர்த்தகக் கடைகளின் உரிமையாளராக இருந்தாலும், சமூக மற்றும் சமயப் பணிகளில் முன்னின்று உழைத்தவர். தேசபக்தர் **கோ. நடேசையர்** அவர்களுடன் தொடர்பில் இருந்தவர். நடேசையர் தஞ்சையில் இருந்தபோது வெளியிட்ட 'வர்த்தக மித்திரன்' பத்திரிகையில், ஞான பண்டிதன் அவர்களின் வர்த்தக விளம்பரங்கள் வெளியாகியுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

### கதிர்காம ஆசையும் ஆராய்ச்சியும்

கதிர்காமத் தலத்திற்குத் தொண்டுசெய் உளம் பூண்டிருந்த ஞானபண்டிதன், பதுளையில் 500 பேரைத் திரட்டி, கதிர்காமத் தொண்டர் படை அமைத்துச் செயலாற்றியவர். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கதிர்காமம் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கதிர்காமம் குறித்த இந்த முக்கியமான நூலை எழுதியவர்.



பதுளை வ. ஞானபண்டிதன்

காலனிய அறிக்கைகள், ஆங்கிலக் கட்டுரைகள், தொன்மக் கதைகள், செவிவழிச் செய்திகள், நீதிமன்ற வழக்குப் பதிவுகள், நேர்காணல்கள் ஆகிய அனைத்தையும் நுட்பமாக ஆராய்ந்து, கதிர்காமம் குறித்த தனது நூலில் வெளிப்படுத்தியவர்.

கதிர்காமத்தில் இந்துக்களின் நலன்காக்க, பதுளை நீதிமன்றத்தில், தனது சொந்தச் செலவில் வழக்காடி, உயர்நீதிமன்றம்வரை சென்று, நேரிய தீர்ப்பைப்பெற்று வெற்றி கண்டவர். சிங்களவர் கைப்பிடிக்குள் பௌத்தத் தோரணை பெற்றிருக்கும் இக்காலக் கதிர்காமத்திலிருந்து வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், ஞானபண்டிதன் அவர்களது பணிகளின் முக்கியத்துவம் புலனாகும். அவர் எழுதிய நூல், எத்தகையதொரு வரலாற்றுப் பொக்கிசம் என்பதும் தெளிவாகும்.

கதிர்காமம் குறித்து ஞானபண்டிதன் எழுதிய ஆராய்ச்சி நூல், கதிர்காமத் தலத்தின் கடந்த காலத்தையும் அவர் வாழ்ந்த சமகாலத்தையும் படம்பிடித்துக் காட்டுவது. பலரும் ஆராய்ந்து அறியத் தயங்கும் சட்ட மூலங்களில் கைவைத்து ஆராய்ந்து வெளிப்படுத்துவது. தலத்தின் தொன்மை வரலாற்றையும், காலனிய கால நிலவரங்களையும், அவர் எழுதிய கால நிலவரங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவது. ஆராய்ச்சிப் பண்புடையது. சமய பண்பாட்டுத் தளத்தில் தனித்து உணரப்பட வேண்டியது. வரலாற்று வரைஞர்களுக்கு வழிகாட்டியாய் அமைவது. விவாதத்திற்கும் உரியது. இவற்றினால், சமய பண்பாட்டு அரசியல் வெளியில் அவரது நூல் அதிக கவனத்திற்கும் உரையாடலுக்கும் உள்ளானது. அந்த நூல் கால ஓட்டத்தில் மறைக்கப்பட்டும் கருத்தியல் முரண்பாட்டால் மறுக்கப்பட்டும் போனமை, துயரமானது.

### பருத்தித்துறைச் சைவப்பிரகாச சபையின் 'சைவபோதினி'

சைவசமய வளர்ச்சி கருதி, ***பருத்தித்துறைச் சைவப் பிரகாச சபை*** வெளியிட்ட மாதாந்தப் பத்திரிகையே, ***'சைவபோதினி'***. இப்பத்திரிகை, 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்', 'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே' ஆகிய மகுட வாசகங்களைத் தாங்கி வெளிவந்தது.

இப்பத்திரிகை, 1939ஆம் ஆண்டிலிருந்து, பருத்தித்துறையில் அமைந்த சைவபோதினி யந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியாகியது. பதுளையிலிருந்த ஞானபண்டிதன் அவர்கள், பருத்தித்துறையில் இருந்து வெளிவந்த, ***'சைவபோதினி'*** என்ற சைவ சமயப் பத்திரிகையில், கதிர்காமக் கந்தன் பற்றிய தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளை, தொடராக எழுதினார்.


### 'சைவபோதினி' அளித்த கௌரவம்

தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, வ.கணபதிப்பிள்ளை முதலாய அறிஞர்களின் கட்டுரைகளையும் மேலைப்புலோலி மகா வித்வான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் நூல்கள் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகளையும் 'சைவ போதினி' தாங்கி வெளிவந்தது.


வித்வான்கள் பலரது வியாசங்களை வெளியிட்ட இந்தப் பத்திரிகை, ஞானபண்டிதன் அவர்கள் எழுதிய கதிர்காமக் கந்தன் தொடர்பான கட்டுரைகளை உவந்தேற்றுப் பிரசுரித்தமையானது, ஞானபண்டிதன் அவர்களின் புலமைக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதப்பட வேண்டியது. புலமையாளர் ஒருவருக்கு, 'சைவபோதினி' வழங்கிய கௌரவமே இதுவெனில் மிகையாகாது.

### 'கதிர்காம முருகன்' – முதலாம் பதிப்பு

சைவபோதினி சந்தாதாரர்கள் மாத்திரமே வாசித்துப் பயன் பெற்றுவந்த ஞானபண்டிதனின் கட்டுரைகளைத் தொகுத்து, ***'கதிர்காம முருகன்'*** என்ற தலைப்பில், பருத்தித்துறைச் சைவப்பிரகாச சபையினர் தங்களின் பிரசுரமாகவே, பிரபாதி வருடம் (1940) சித்திரை மாதம் இந்நூலை வெளியிட்டனர். இதுவே இந்நூலின் முதற் பதிப்பு ஆகும். இந்நூலின் முன் அட்டையில்,




1940இல் வெளியான வ.ஞானபண்டிதன் எழுதிய
‘கதிர்காம முருகன்’ நூலின் முதற் பதிப்பின் முன் அட்டை




1941இல் வெளியான வ.ஞானபண்டிதன் எழுதிய
‘கதிர்காம முருகன்’ நூலின் நான்காம் பதிப்பின் முன் அட்டை

***“வதுளை திரு. வ.ஞானபண்டிதன் அவர்களால் ‘சைவபோதினிக்கு’ எழுதியுதவியது”*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முதற்பதிப்பான இந்நூலில், எவருடைய முன்னுரையோ அணிந்துரையோ இடம் பெறவில்லை. இந்த முதற் பதிப்பில், 2000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

## இரண்டாம் மூன்றாம் பதிப்புகள்

இந்த நூலின் இரண்டாம், மூன்றாம் பதிப்புகள், ஈழத்திலும் தமிழகத்திலும் இதுவரை தேடியும் கிடைக்கப்பெறவில்லை. எனவே அவை பற்றிய விரிவான செய்திகள் எவற்றையும் கூறமுடியாது. ஆனால், அவை வெளிவந்துள்ளன என்பதை, கிடைக்கப் பெற்ற நான்காம் பதிப்பில் வரும் ஒரு குறிப்பை வைத்து, உறுதிசெய்ய மாத்திரமே முடிகிறது.

அந்தக் குறிப்பானது, ‘இரண்டாம், மூன்றாம், நான்காம் பதிப்புகளின்போது, ஒவ்வொரு பதிப்பிலும் ***1000 பிரதிகள்*** அச்சிடப்பட்டுள்ளன’ என்ற செய்தியைத் தருகிறது. அக்காலத்தில் ***100 பிரதிகள்*** அச்சிடும் செலவு ***மூன்று ரூபாய்*** என்பது ஆச்சரியமானது. அவ்வாறாயின், ***பிரதி*** ஒன்றின் அடக்க விலை ***மூன்று சதம்*** என்பதாக இருந்திருக்கிறது. வியப்புக்குரியதுதான்!

இத்தகைய விபரங்களைத்தான், நான்காம் பதிப்பில் உள்ள குறிப்பின் துணைக்கொண்டு இப்போது கூறமுடியும்.

## நான்காம் பதிப்பு

இந்நூலின் நான்காம் பதிப்பு 1941ஆம் ஆண்டு வெளிவந்தது. முதற் பதிப்பில், ***‘கதிர்காம முருகன்’*** என்றிருந்த தலைப்பு, ***‘ஸ்ரீ கதிர்காம முருகன் – கதிர்காமம் கந்தசுவாமி கோயில்’*** என இப்பதிப்பில் மாற்றம் பெற்றுள்ளது.

***‘பதுளை சமத்துவ சங்கத் தலைவர் திரு.வ.ஞானபண்டிதன் அவர்கள் எழுதியது’***, ***என்றும்*** ***‘கோட்டாறு மதுரகவி எஸ்.எஸ். நாதன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது’*** என்றும் இப்பதிப்பின் முன் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில், ***‘ஆர். எம். கே. அச்சியந்திரசாலை, பழனி’*** என்ற குறிப்பு இருப்பதால், இப்பதிப்பு தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டது எனத் துணியமுடிகிறது.

இந்நூலின் நான்காம் பதிப்பான இந்தப் பதிப்புவரையும், ***‘நூலாசிரியர் திரு. வ. ஞானபண்டிதன்’*** என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நான்கு பதிப்புகள் வெளிவந்த காலகட்டத்தில், ஞானபண்டிதன் அவர்கள் உயிரோடிருந்ததால், நான்கு பதிப்புகளிலும் ***‘எஸ். எஸ். நாதன் வெளியீட்டாளர்’*** என்ற நிலையிலேயே இருந்திருக்கிறார் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது.

## ஐந்தாம் பதிப்பு

இந்த நூலின் ஐந்தாம் பதிப்புத் தொடர்பான குழறுபடிகள் ஆய்வுக்கு உரியவை. எஸ். எஸ். நாதன் அவர்கள், இந்த நூலின் பதிப்பு ஒன்றை 1965ஆம் ஆண்டு வெளிக்கொண்டு வந்தார். இதன் முதலாவது பக்கத்தில், ஐந்தாம் பதிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவறான பதிவு என்பது எமது கருத்து. 1965ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு பதிப்பு வந்திருக்கிறது. ஆனால், அப்பதிப்பில் வெளிவந்த ஆண்டு குறித்த விபரம் தெளிவாகப் பதிவாகவில்லை. எனவே, அது பற்றிச் சிறிது அலச வேண்டும்.

## கலண்டர் விளம்பரம்

1965ஆம் ஆண்டுக்கு முன்னரான பதிப்பின் இறுதிப் பக்கத்தில், ***“ஒவ்வொரு வருடமும் பிற்பகுதியில் தவறாது வெளிவருகின்றது – லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் – உங்கள் அபிமானத்தைப் பெற்றுள்ள அறிவுக் களஞ்சியம் – 1965–ம் ஆண்டுக் கலண்டருக்கு இன்றே ஆடர் செய்யுங்கள்”*** என ஒரு விளம்பரம் வெளியாகியுள்ளது.

இந்த விளம்பரத்தைக் கூர்ந்து அவதானித்தால், 1965ஆம் ஆண்டுக் கலண்டருக்கான

விளம்பரம் ஒன்று, அதற்கு முந்திய வருடமான 1964ஆம் ஆண்டு வெளிவந்துள்ளதைப் புரிந்துகொள்ள இயலும். எனவே, 1964ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பே, இந்த நூலின் ஐந்தாம் பதிப்பு எனத் துணிந்து கூறமுடியும்.

### சாந்திக் குறிப்பு

1964ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பே ஐந்தாவது பதிப்பு என இன்னொரு விடயத்தாலும் உறுதிசெய்யலாம். அதாவது, 1964ஆம் வெளிவந்த இப்பதிப்பின் இரண்டாவது பக்கத்தில், ***'சாந்தி'*** என்ற தலைப்பில், எஸ். எஸ். நாதன் எழுதிய பின்வரும் குறிப்பினூடாகவும் அதை உறுதி செய்யலாம்.

***"இப்புத்தகம் எழுதி முடிந்தபோது, எனது அரசியல் தந்தையும், பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகரும், தமிழறிஞருமான தலைவர் வ. ஞானபண்டிதன் அவர்கள் இறையடி எய்தினார்கள். இக்கருமத்தை நிறைவேற்றினாலொழிய மனச்சாந்தி அடையாது என இதனைப் பிரசுரித்துள்ளேன். அவர்களின் ஆத்மா சாந்தியில் நிலவட்டும்"***

மேற்குறித்த குறிப்பு, ஞானபண்டிதன் அவர்கள் காலமாகிய பின்னரேயே அவரது நினைவாக ஐந்தாவது பதிப்பு 1964ஆம் ஆண்டு வெளிவந்தது என்பதைத் தெரிவிக்கிறது. ஞானபண்டிதன் அவர்களது வாழ்க்கைக் குறிப்புகளின்படி, அவர் 1964ஆம் ஆண்டு காலமானார். நான்காம் பதிப்பு வரையும் அவர் உயிருடன் இருந்தார். நான்காவது பதிப்புக்கும் ஐந்தாவது பதிப்புக்கும் 23 ஆண்டுகள் இடைவெளி உள்ளது. இந்த ஐந்தாவது பதிப்பும் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

### ஆசிரியர் பெயர் நீக்கம்

***'ஸ்ரீ கதிர்காம முருகன்'*** என்ற தலைப்பில் வெளிவந்த இந்த ஐந்தாவது பதிப்பில் ***'வ. ஞானபண்டிதன்'*** என்ற பெயர் நீக்கப்பட்டு, ***'தொண்டன் ஆசிரியர் திரு. எஸ். எஸ். நாதன்'*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதிப்பில், ***'ஈழமேகம்' ஆசிரியர் எம். ஐ. எல். பக்கீர்தம்பி*** அவர்களது அணிந்துரை இடம்பெற்றுள்ளது. அந்த அணிந்துரையில், ***"திரு. நாதன் அவர்களின் பன்நெடுங்கால அயார உழைப்பின் பயனாய் ஆய்ந்தளிக்கப்பட்ட ஸ்ரீ கதிர்காம முருகன் என்னும் சரித்திரப் பொதிகையாய் அமைந்த நூலை என் சிற்றறிவுக்கியைய நனி நுணுகி ஆராய்வு செய்தேன்"*** என அமையும் பதிவு ஆச்சரியமளிக்கிறது.







எஸ். எஸ். நாதன் அவர்கள் தாமே வாங்கி உள்ளடக்கிய மேற்குறித்த அணிந்துரையில், அவரே ஆசிரியர் எனும் தகுதியைப் பெறும் வரிகளை அச்சிட உவந்தமை, எற்புடையதோ என எண்ணத் தோன்றுகிறது. அத்துடன் அது எதற்காக என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

***"கொழும்பு. லீலா ஸ்டோர்ஸ், நியூ லீலா அச்சக அதிபர், லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் உற்பத்தி யாளர் உயர்திரு. ச. த. சின்னத்துரை அவர்களின் பேராதரவால் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கப் பட்டது"*** என்ற குறிப்போடு வெளிவந்தது இந்த ஐந்தாவது பதிப்பு.

### ஐந்து இரண்டான சித்து

இந்த ஐந்தாவது பதிப்பில், இறுதிக்கு முன்னரான பக்கத்தில், **"முதற் பதிப்பு முற்றாக முடிந்துவிட்டது. இது இரண்டாம் பதிப்பு. முதற் பதிப்பைப் பாராட்டி இலங்கையின் பிரபல தமிழ்**

***தினசரியான வீரகேசரி நல்ல கண்ணோட்டத்தில் கணித்து அபிப்பிராயம் வெளியிட்டது. பண்டிதர்களும், ஆசிரியர்களும் தங்களின் உள்ளக் கருத்தை, நன்றி யறிதலுடன் எழுதிப் பாராட்டியுள்ளார்கள். அன் பளிப்பாகக் கொடுத்துவருகிறோமாயினும் பிரதிகள் தபாலில் வேண்டுவோர் 15 சதமுத்திரை அனுப்பி வைத்து ஆதரிக்கவேண்டும்"*** என்ற குறிப்பு மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

***'முதற் பதிப்பு முற்றாக முடிந்துவிட்டது. இது இரண்டாம் பதிப்பு'*** என்று எஸ். எஸ். நாதன் எழுதியிருப்பதைக் கூர்ந்து அவதானித்தால்தான், அதற்கு விளக்கம் காணமுடியும்.

ஞானபண்டிதன் மறைவுக்குப் பின்னர், நியூ லீலா அச்சக அதிபர் திரு. ச. த. சின்னத்துரை அவர்களின் ஆதரவில் நாதன் இதனை வெளியிட்டார். தான் வெளியிட்ட இந்தப் பதிப்பை, ***'ஐந்தாவது பதிப்பு'*** என்றே அவர் பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால், அவர் இரண்டாவது பதிப்பு என்று ஏன் பதிவு செய்தார்?

**தொகுத்தோன் ஆசிரியனாதல்**

ஞானபண்டிதன் அவர்களின் மறைவின் பின்னர், எஸ். எஸ். நாதன், தான் வெளியிட்ட பதிப்புகளில், நூலை எழுதிய ஞானபண்டிதனின் பெயரை நீக்கி, ***'எஸ். எஸ். நாதன் தொகுத்தது'*** என்றே குறிப்பிட்டுள்ளார். அதனால்தான், இப்போது தன் பெயரை ஆக்கியோனின் இடத்தில் வைக்க முனைந்து, இந்த ஐந்தாவது பதிப்பை, ***'இரண்டாம் பதிப்பு'*** என்கிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.

**ஆறாம் பதிப்பு**

இந்த நூலின் ஆறாவது பதிப்பு 1965ஆம் ஆண்டு வெளியானது. 1965ஆம் ஆண்டு வெளியான இந்த நூலின் முதலாவது பக்கத்தில், ஐந்தாம் பதிப்பு எனக் குறிப்பிட்டிருத்தல் தவறு என்பது முன்னரே கூறப்பட்டது.

வரலாற்று ஆய்வு ஒழுங்கில் அது ஐந்தாவது பதிப்பல்ல. அது, ஆறாவது பதிப்பே. பதிப்பு வரலாற்றின் செம்மை கருதுவோர் இந்தத் திருத்தத்தை ஏற்று உவப்பர்.

**பெயர் மாறிய முருகன்**

இந்த ஆறாவது பதிப்பில், ***'கதிர்காமத் திருமுருகன்'*** என்று இந்த நூற்பெயர் மாறி யுள்ளது.




"இச்சுவடியின் பெயர் ***"கதிர்காமத் திருமுருகன்" என்றாவது "திருக்கதிர்காம முருகன்" என்றாவது இருத்தல் வேண்டும் என்பது என் விழைவு"*** என்று தமிழறிஞர் கந்தமுருகேசனார் அவர்கள், இப்பதிப்பிற்கு நல்கிய ஆசியுரையில், ஆலோசனையாகக் கருத்துக் கூறியுள்ளார். அவர் கூறிய கருத்தை ஏற்று, இந்தப் பதிப்பில், நூலின் தலைப்பை எஸ்.எஸ். நாதன் மாற்றியிருக்க வேண்டும்.

**காணாமல் போன ஆசிரியர்**

இந்தப் பதிப்பில் ***'ஆசிரியர் வ. ஞானபண்டிதன்'*** என்பது நீக்கப்பட்டுள்ளது. ***'தொண்டன் ஆசிரியர் திரு. எஸ். எஸ். நாதன் அவர்கள் தொகுத்தது'*** என்றே முதலாவது பக்கப் பதிவு தெரிவிக்கிறது.

***"இப்புத்தகம் எழுதி முடித்தபோது, எனது அரசியல் தந்தையும், பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகரும் தமிழறிஞருமான தலைவர் வ. ஞானபண்டிதன் அவர்கள் இறையடி எய்தினார்கள். இக்கருமத்தை நிறைவேற்றினாலொழிய மனச்சாந்தி அடையாது என இதனைப் பிரசுரித்துள்ளேன். அவர்களின் ஆத்மா சாந்தியில் நிலவட்டும்"*** என்று எஸ். எஸ். நாதன் அவர்கள், தான் ஐந்தாவது பதிப்பில் குறிப்பிட்டதை மீளவும் ***'சாந்தி'*** என்ற தலைப்பில் இப்பதிப்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

***'வ. ஞானபண்டிதன் எழுதியது'*** என்று ஐந்து பதிப்புகள் கண்ட அதே பிரதியே, ஆறாவது பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆகையால்,

***‘இப்புத்தகம் எழுதி முடித்தபோது’*** என்ற எஸ். எஸ். நாதனின் குறிப்பு மேலதிக விளக்கத்தைக் கோரி நிற்கிறது. இந்த ஆறாம் பதிப்பில், ***எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி*** அவர்களின் உரை, ஐந்தாம் பதிப்பில் இடம்பெற்றுள்ளவாறே, மீளவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

***சி. அ. இராமச்சந்திரன், கந்தமுருகேசனார்*** ஆகியோரின் உரைகள் இந்த ஆறாம் பதிப்பில் முதன்முதலாக இடம்பெற்றுள்ளன. இப்பதிப்பு A.M.P.S. ***செல்லச்சாமிநாடார் அன்ட் பிரதர்ஸ்*** அனுசரணையில் வெளிவந்துள்ளது.

**தெரிந்து செயல்**

சி. அ. இராமச்சந்திரன் அவர்கள் இந்த ஆறாம் பதிப்புக்கு வழங்கிய மதிப்புரையில், ***“ஸ்ரீ. எஸ். எஸ். நாதன் அவர்களால் எழுதப்பட்ட ஸ்ரீ கதிர்காம முருகன் என்ற புத்தகம் எனது பார்வைக்காக இலவசமாக அனுப்பப்பட்டது”*** என்று கூறுவது அதிர்ச்சியளிக்கிறது.

இந்தப் பதிப்பில் ***‘இவ்வெளியீடு’*** என்ற தலைப்பில் A.M.P.S. செல்லச்சாமிநாடார் அன்ட் பிரதர்ஸ் வழங்கிய உரையில், ***“கதிர்காமத் திருமுருகன் 5–ம் பதிப்பாக வெளிவருகிறது. இந் நூலாசிரியர் திரு. எஸ். எஸ். நாதன் அவர்களின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறோம்”*** என்று கூறுவது அதைவிடவும் அதிர்ச்சியளிக்கிறது.

ஐந்தாவது பதிப்பை, அணிந்துரை மற்றும் மதிப்புரைகளுக்காகக் கொடுத்து, அவற்றை வாங்கிய நாதன் அவர்கள், அவற்றினைச் சீர்தூக்கி ஆராயாமல் தானே பதிப்பித்த இப்பதிப்பில் அடக்கியிருக்கமாட்டார் எனக் கூறவியலாது. காரணம், நூலாசிரியர் பெயரில் ஏற்பட்ட மாற்றமே.

**ஏழாம் பதிப்பு**

***‘தொண்டன்’*** ஆசிரியரும், பதுளை சமத்துவ சங்கத்தினதும் கதிர்காமத் தொண்டர் படையதும் காரியதரிசியுமான எஸ். எஸ். நாதன் அவர்கள் 1973ஆம் ஆண்டு காலமானார்.

அவரது மகன் திரு. சி. சிவகுருநாதன், 2012ஆம் ஆண்டு, இந்நூலின் ஏழாவது பதிப்பை வெளிக்கொண்டு வந்தார். ***‘கதிர்காமத் திருமுருகன்’*** என்று தலைப்பிட்டு, அடைப்புக் குறிக்குள் ***‘வரலாற்று ஆய்வு நூல்’*** என்று துணைத் தலைப்பிட்டு, ***‘ஆக்கியோன் மதுரகவி எஸ். எஸ். நாதன்’*** என்று அச்சிட்டு அவர் அதனை வெளிக்கொண்டு வந்தார்.

**கூடிவாழ்ந்து ஆசிரியர் ஆதல்**

முன்னைய இரண்டு பதிப்புகளில் ***‘தொகுத்தவர்’*** என்று குறிப்பிடப்பட்ட எஸ்.எஸ். நாதன், இப்பதிப்பில் ***‘ஆசிரியர்’*** என்ற நிலைக்கு மாற்றப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டுள்ளார்.


அமரர் எஸ். எஸ். நாதன் அவர்களின் புதல்வர் திரு. சி. சிவகுருநாதன் அவர்கள், தான் வெளிக்கொண்டு வந்த பதிப்பில், தனது உரையில், ***“மேலும் அவரால் (எஸ்.எஸ். நாதனால்) ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ள ‘கதிர்காமத் திருமுருகன்’ என்னும் ஆய்வு நூலை, அவரோடு கூடிவாழ்ந்த ஒருவரும், அவரின் அரசியல் தந்தையும் பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகரும் தலைவருமான அறிஞர் பெருமகனார் வ ஞானபண்டிதன் அவர்கள் இறையடி எய்தியதையிட்டு அன்னாரின் ஞாபகார்த்தமாய் 1964ஆம் ஆண்டு மூன்றாவது பதிப்பாய் வெளியிட்டிருந்தார்”*** என்று எழுதும்போது, இந் நூலை ஆக்கிய ஞானபண்டிதன் அவர்கள், எஸ். எஸ். நாதன் அவர்களுடன் கூடிவாழ்ந்த ஒருவராக நிறுத்தப்பட்டிருப்பது வியப்பை அளிக்கிறது.

***‘என்னுரை’*** என்ற தலைப்பில் ‘கதிர்காமத் திருமுருகன்’ நூலின் பதிப்புகள் பற்றி, சி.சிவகுருநாதன் தந்திருக்கும் தரவுகள் மிகவும் தவறானவை. ***‘கதிர்காமத் திருமுருகன்’*** நூலின் பதிப்பு வரலாற்றை அவர் முறையாக அறிந்திருக்கவில்லை என்பதை அவரது ***‘என்னுரை’*** தெளிவாகக் காட்டிநிற்கிறது.

**வளரும் நூல்**

முதல் பதிப்பு 23 பக்கங்களிலும், நான்காம் பதிப்பு 14 பக்கங்களிலும், ஐந்தாம் பதிப்பு 56 பக்கங்களிலும் வெளியாகியுள்ளன. முதலாம் பதிப்பில் காணப்படாத சில வாக்கியங்கள் நான்காம் பதிப்பில் காணப்படுகின்றன. உதாரணமாக, ***“இன்றைய சிங்கள மந்திரிமார் திரு. பண்டாரநாயக்கா, சேனநாயக்க ஆகியவர்கள் ஆதார மின்றி, ஆராய்ச்சியின்றி, உண்மையறியாமல் அர்த்தமற்ற முறையில் இலங்கை சிங்களவருக்கே என்று பறைசாற்றுகிறார்கள்”*** என்ற பகுதியைக் குறிப்பிடலாம்.

ஞாபண்டிதன் எழுதிய நூலை, அவர் இறக்கும் வரையிலும் சேகரித்த குறிப்புகளை வைத்து, பின்னாளில், எஸ். எஸ். நாதன் அவர்கள் தனது பதிப்புகளில் சிறிது விரித்து எழுதியிருப்பாரோ எனத் தோன்றுகிறது.




***'விபூதிமலை'*** பற்றிய சேர்க்கை ஞானபண்டிதன் சேகரித்த குறிப்புகளை வைத்து, நாதன் எழுதிய சேர்க்கையாக இருக்கலாம். ஞானபண்டிதனின் மொழிநடையிலும், நாதன் சிறிது மாற்றம் செய்தே இதைச் சாதித்துள்ளார் எனலாம்.

### எட்டாம் பதிப்பு

ஞானபண்டிதன் ஆக்கிய ***'கதிர்காமத் திருமுருகன்'*** என்ற நூல் 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் எட்டாவது பதிப்பைக் கண்டது. ***தமிழக அரசு*** பழநியில் நடாத்திய அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் முதலரங்கில், முதல் நிகழ்வாக எட்டாவது பதிப்பான செம்பதிப்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பின்போது 1000 பிரதிகள் அச்சிடப்பட்டன.

ஞானபண்டிதனின் ஆய்வுக்கட்டுரையின் உபதலைப்புகளுக்கு ஆதாரம் காட்டும் புகைப்படங்கள் மற்றும் வரலாற்றுப் பதிவுகளையும் இந்தப் பதிப்பு தாங்கி வெளிவந்தது. இதனைத் தமிழக ஆய்வாளர்கள் மத்தியில் இந்தப் பதிப்பு கவனிப்புக்கு உரியதாகியது.

### ஒன்பதாவது பதிப்பு – திருத்திய செம்பதிப்பு

திருத்திப் புதுக்கிய செம்பதிப்பாக, ஒன்பதாவது பதிப்பு 2024ஆம் ஆண்டு செப்டம்பரில் இலங்கையில் வெளியானது. யாழ்ப்பாணத்தில் உள்ள குரு பதிப்பகத்தில் இது அச்சிடப்பட்டது.

எட்டு மற்றும் ஒன்பது ஆகிய இவ்விரு பதிப்புகளையும், ஈழத்தில் மலையக நூல்களை வெளியிடுவதில் புகழ்பெற்ற கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை வெளியிட்டது.

அறிஞர் மு. நித்தியானந்தன், வெளியீட்டாளர் எச். எச். விக்கிரமசிங்க ஆகியோரின் அரிய முயற்சியில் இந்த இரு பதிப்புகளும் வெளியாகின. ஈழத்தின் சிறந்த நூல் வடிவமைப்புக் கலைஞர் ஆறு. பிரசாத் அவர்கள் வரலாறு பேசும் புகைப்படங்கள் பக்கங்கள் எங்கும் விரவிவரச் சிறப்புற இப்பதிப்புகளை வடிவமைத்துள்ளார்.

### இருவேறு முகப்புகள்

ஒன்பதாவது பதிப்பில் இலங்கைக்கும் மலேசியாவுக்கும் எனத் தனித்தனியான இருவேறு முகப்பு அட்டைகள் வடிவமைப்பட்டு வெளியிடப்பட்டன.

இலங்கைக்கான பதிப்பின் நூல் முகப்பைக் காலனிய ஆட்சிச் சின்னத்துடன்கூடிய கதிர்காமம் பெரிய கோயில் நுழைவாயிற் கோபுரப் புகைப்படம் கொண்டும், மலேசியாவுக்கான நூல் முகப்பை, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் கதிர்காம யாத்திரை ஒன்றின் போது, ஜுலியா மார்கரெட் கெமரூன் என்ற பெண் புகைப்படக் கலைஞர் 1875 - 1879 என்ற காலகட்டப் பகுதிக்குள் எடுத்த புகைப்படம் கொண்டும் ஆறு. பிரசாத் அழகுற வடிவமைத்துள்ளார்.

2024ஆம் ஆண்டு இரு மாதங்களுக்குள் (ஆகஸ்ட் - செப்டம்பர்) இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டுத் தீர்ந்தமையும் இந்த நூலின் ஒரு வரலாற்றுச் சாதனை எனலாம்.

### நிறைவாக

இந்த நூல் இன்னும் பல பதிப்புகளைக் காணும் வாய்ப்புத் தெரிகிறது. இன்னும் பல்லாயிரம் பிரதிகள் அச்சேறி உலாவரும் காட்சி, காலத்தால் கனிந்திருக்கிறது. ஈழத்தின் பல்லின பல் பண்பாட்டு வெளியில், தொடர் உரையாடலுக்கான பொருளாகக் கதிர்காமம் அமைந்திருப்பதே அதற்குக் காரணம்.

# யாரொடு நோவேன்



கணப் பொழுதில்
காணாமல்ப் போனதே!
விமானப் பயணம்
வினையாகிப் போனதே!

எத்தனை கனவுகள் –
எத்தனை எதிர்பார்ப்புகள்–
அத்தனையும் அழிந்தனவே
அரை நொடிப்
பொழுதினிலே!

கல்நெஞ்சன் காலன்
கவர்ந்துவிட்டான்
கணப்பொழுதில்.
யாரொடு நோவேன்
யார்க்கெடுத் துரைப்பேன்.

காலனுக்கு என்
கனிவான விண்ணப்பம்.
உலகச் சமநிலைக்கு
உயிர்ப்பறிப்பு
முக்கியந்தான்
ஆனால்
உன் உவகைக்காய்
உயிரைப் பறிக்காதே!

தனைமட்டும் நினைந்து
தான்மட்டும் வாழ்ந்து
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலமேதுமற்ற சுயநல
வாதிகள்

பஞ்சமகா பாவங்கள்
அஞ்சாமல் செய்கின்ற
பல மானுடப் பிறவிகள்?

பேசித் தீர்க்கமுடியாப்
பிரச்சினைகள் ஏதுமில்லை.
பெரும் பலத்துடன்
போர் முரசு கொட்டும்
பல நாட்டுத் தலைவர்கள்.

இன்னும் பலர் இன்புற்றிருக்க
அவர்களைப் பறிக்காமல்
இவர்களை மட்டும் அவசரமாய்
அழைத்தாயே!

மானுடனைக் காக்கும் நல்ல
மருத்துவச் செல்வங்கள்
மனமறிந்து செய்த
மாபெரும் பிழைதான் என்ன

இனியாவது இரக்கம் காட்டு
இரத்த பூமிதனில்
இன்பம் நிலவட்டும்
அன்பு அமைதி
ஊற்றெடுத்து ஓடட்டும்.

**– அநபாய சோழன் –**
(அவுஸ்திரேலியா)

## கண்ணீர் அஞ்சலி

## கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி



மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளரும் கலை இலக்கியவாதியுமான கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி அவர்கள் (26–07–2025) துபாயில் காலமானார். தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் தேர்ச்சி பெற்ற நாகூர் கனி அவர்கள்,

பல பத்திரிகைகளுக்கு ஊடகவியலாளராகவும் எழுத்தாளருமாக பணியாற்றியுள்ளார்.

1981ஆம் வருடம் தொடங்கிய வலம்புரி கவிதா வட்டத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும் பணியாற்றி, பல கவியரங்குகளை நெறிப்படுத்தியுள்ளார். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பல தொடர் நிகழ்ச்சிகளை நடத்தியதுடன் பின்னணிக் குரலும் கொடுத்துள்ளார்.

சிறுகதை, கவிதை, நாவல், பத்தி, தொடர்கள், வானொலி – தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சமூகச் சேவைகள் எனப் பல்துறைகளில் இயங்கிய அன்னாரின் இழப்பினால் தமிழ் மற்றும் இஸ்லாமிய இலக்கியச் சமூகங்கள் துயரில் ஆழ்ந்துள்ளன.

**– ஞானம்**

கூட்டங்கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். 'என்னையே இப்பிடி உலுக்கியிருக்கெண்டால் லக்கியாவின்ர குடும்பத்துக்கு எப்பிடியிருக்கும்?' உள்ளங்கை வியர்த்துக்கொட்டுகிறது. பாடசாலைக்குள் காலடி எடுத்துவைத்தபோது, என் சப்பாத்துக்கள் போட்ட சத்தத்தைவிட என் இதயம் அதிக சத்தத்தில் அலறுகின்றது. யார், யார் என்னவெல்லாம் செய்வார்களோ என்ற பீதி கடந்துசெல்வோரை நிமிர்ந்து பார்க்கவிடாமல் என்னைத் தடுக்கிறது.

"Instagram, twitter எண்டு எல்லாத்திலும் படம்போடுற, கருத்திடுற வேலை எல்லாத்தையும் நிப்பாட்டிப்போடு! ஆர் என்ன சொன்னாலும் சொல்லிப்போட்டுப் போகட்டும். பள்ளிக்கூடம் போறனா, வாறனா எண்டிருக்கவேணும். படிப்பைத்தவிர வேறையொண்டும் உன்ரை வேலையில்லை, விளங்கிச்சுத்தானே?' விடிந்ததிலிருந்து குறைந்தது ஐஞ்சு தடவையாவது அம்மா சொல்லியிருப்பா.

'பீற்றரைப் பாத்தால், கொலைசெய்வான், அதுவும் துடிக்கத்துடிக்கக் கத்தியாலை வெட்டிக் கொலைசெய்வான் எண்டு சொல்லேலுமே?' மீளமீள எனக்கு அதே நினைப்பாகவிருக்கிறது.

இலக்கியாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகக் கூடியிருக்கிறோம். அவளின் படம் மேடையின் கரையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பாடசாலை graduation உடுப்பில், தடித்த உதடுகள் மெல்லப் பிரிந்த புன்சிரிப்பும், இரு தோள்களிலும் படர்ந்திருந்த சுருட்டைத் தலைமயிருமாக இலக்கியா மிக அழகாக இருக்கிறாள்.

"நேற்றுவரை எங்களோடை இருந்த லக்கியா இண்டைக்கு உயிரோடை இல்லை எண்ட செய்தி எங்கள் எல்லாரையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கு. உங்கடை சக மாணவி ஒருத்தி கொடூரமாய்க் கொலைசெய்யப்பட்டிருக்கிறா. கோரமான இந்தச் செய்தி தரக்கூடிய மன அழுத்தத்தையும் சோகத்தையும் சமாளிக்கிறது லேசான விஷயமில்லை.

இதைக் கடந்துசெல்கிறதுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறவை தயவுசெய்து எங்கட கவுன்சிலர் மிசிஸ். ஜோனோடை கதையுங்கோ. லக்கியான்ரையும் பீற்றரின்ரையும் குடும்பங்களுக்கு எங்கடை ஆழ்ந்த அனுதாபங்களைச் சொல்லுறதைத்தவிர வேறை என்னத்தைச் செய்யலாமெண்டு எங்களுக்கும் தெரியேல்லை.

இப்பிடியான கோரச் செயல்களின் விளைவுகள் எங்கட முழுச் சமூகத்தையும் பாதிக்குது…

உங்கட வெறுப்பை, கோபத்தை, ஏமாற்றத்தை எல்லாம் எப்பிடி ஆரோக்கியமான முறையில வெளிப்படுத்தலாமெண்டு நீங்க எல்லாரும் அறிஞ்சிருக்கிறது அவசியம்," தாழ்ந்த குரலில் சொற்களிடையே இடைவெளி விட்டுவிட்டுப் பிரின்சிப்பல் பேசுகின்றார். அவரின் கண்களும் கலங்கியிருக்கின்றன.

"லக்கியாவுக்கு நிகழ்ந்த சோகம் தங்களுக்கும் நிகழலாமோ எண்டு அஞ்சுறவை, அப்பிடி நிகழாமலிருக்கிறதுக்கு என்னெல்லாம் செய்யலாமெண்டு சொல்ற சில கையேடுகளை அலுவலகத்தின்ர முன்பக்கத்தில வைச்சிருக்கிறம். அப்படிப் பயப்படுகிறவையும் தயவு




# வேம்பின் நிழல்போல...



ஸ்ரீரஞ்சனி
(கனடா)

செய்து என்னை வந்து சந்தியுங்கள்.'' பிரின்சிப் பலுக்குப் பக்கத்தில் நின்றிருந்த மிசிஸ். ஜோன் தொடர்கிறார்.

அஞ்சலி முடிந்து வகுப்புக்கு அமைதியாய் போன எங்களைப் பார்த்து, ''படிக்கிற மனநிலை இண்டைக்கு ஒருத்தருக்கும் இருக்காது. உங்கட கரிசனைகளைப் பற்றிக் கதைக்கிறதுக்கு ஆராவது விரும்பினா, என்னோடை கதைக் கலாம். அல்லது நாங்க லைபிரரிக்கும் போவம்,'' என்கிறார் சயன்ஸ் ரீச்சர் மிஸ்ரர் ரைலர் ஆதர வானதொரு குரலில்.

இங்கிலிஸ் ரீச்சர் மிசிஸ் நிமாலும் லைபிரரிக்கே வருகிறா. பிறகு ஜிம்மிலை விளையாட்டுப் பாடத்தை முடித்துக்கொண்டு லஞ்சுக்குப் போகிறோம். ''AI இன்ர உதவியோடை எங்கட படங்களையும் உடுப்பில்லாமல் பண்ணித் தங்களுக்கை பகிர்ந்துகொள்ளுவினமோ எண்டு எனக்குப் பயமாய்க்கிடக்கு! இவங்க எவ்வளவு அருவருப்பான விஷயங்களைச் செய்யிறாங்க.'' பக்கத்திலிருந்த கிரிஸ்ரினா குசுகுசுக்கிறாள். அவளின் தொண்டை கட்டிப்போயிருக்கிறது.

''பீற்றருக்கு லக்கியாவிலை சரியான விருப்ப மிருந்தது, அதாலை அவளுக்கு அவனைப் பிடிக்கேல்லை எண்டதை அவனாலை ஏற்றுக் கொள்ள முடியேல்லை. அதுதான் இத்தனை பிரச்சினை,'' தலையைக் குனிந்தபடி சொல்கிறான் ஈதன்.

''அவை விரும்பினா, நாங்க சம்மதிக்கோணும், எங்களுக்கெண்டு விருப்பு வெறுப்பு ஒண்டு மில்லையெண்டு அவை நினைக்கினம்.'' பெரு மூச்செறிகிறாள் அக்சயா.

''ஓம், ஆம்பிளையளுக்கு வாயிருக்கு, பொம்பிளையளுக்குக் காதுமட்டும்தானிருக்கு. என்னைத்தை அவை சொன்னாலும் நாங்க கேட்டுக்கொள்ள வேண்டியதுதான், திருப்பிக் கதைக்கக்கூடாது. கதைச்சால் எல்லாவகையாலும் எங்களைத் துன்புறுத்துவினம், பிறகு கொலையும்செய்வினம்'' பல்லை நெருமுகிறாள் ஆர்த்தி.

''வகுப்பிலை பீற்றர் இருக்கிறதே தெரியாது. இந்தப் பூனையும் பால்குடிக்குமோ எண்டமாதிரி அத்தனை அமைதியாய் இருந்தான்.'' தலையை வலமும் இடமுமாக ஆட்டுகிறாள் திரேசா.

''இனி அம்மா பார்க்கிலை விளையாடப் போறதுக்கும் விடமாட்டா.'' கவினின் முகம் வாடிப் போயிருக்கிறது.

''கேட்டவுடனை லக்கியாவின்ர அம்மா மயங்கிப்போனாவாம். பாவம் லக்கியா. பெரிய சிங்கரா வரவேணுமெண்டு கனவுகண்டவள். எனக்கிப்ப பீற்றரைக் கொல்லோணும் போலை யிருக்கு!'' மேசையில் முஷ்டியால் அடிக்கிறாள் மரியா. அவளின் கண்களிலிருந்து வடிந்தோடிய கண்ணீர் அவள் கன்னங்களை முழுமையாக நனைக்கிறது.

''பீற்றரின்ர தாயும் தகப்பனும் ஆள் மாறி வந்திட்டியள், அவன் அப்பிடியான ஆள் இல்லையெண்டு பொலிஸ்காருக்குப் பின்னாலை ஓடினவையாம், பாவம் அதுகள், அதுகளுக்கு மகனைப் பற்றித் தெரியேல்லை,'' அலெக்ஸ் சொல்ல, ''ஓமோம், அவன் எங்கே செய்தவன், பிழையாய்த்தான் கைதுசெய்து போட்டினம்!'' கோவமாக எள்ளல் செய்கிறாள் லீசா.

எனக்கு என்னத்தைச் சொல்வதென்று தெரியவில்லை. பீற்றரின் அம்மாவும் அப்பாவும் தங்கைச்சியும் எனக்கு முன்னால் அழுதுகொண்டு நின்றிருப்பதுபோலவும், இலக்கியாவின் அம்மா தற்கொலை செய்வதற்கு முயற்சிப்பதுபோலவும் எனக்குப் பிரமையாக இருக்கிறது. கண்களைக் கண்ணீர் மறைக்கிறது. சாப்பாடு வயிற்றுக்குள் இறங்கமறுக்கிறது. லஞ்சுக்குப் பின் வகுப்புக்குப் போகிறோம், கவுன்சிலர் மிசிஸ். ஜோன் எங்களுக்காக அங்கு காத்திருக்கின்றா.

''என்னோடை கதைக்க விரும்புறவை என்ர அலுவலகத்துக்கு வரலாமெண்டது உங்க ளுக்குத் தெரியும். இப்ப நான் சிலதைப் பொதுவாய்க் கதைக்க விரும்புறன்,'' குரலைச் செருமிக்கொண்ட அவ ஆரம்பிக்கின்றா. ''உங்கட வகுப்பிலை இருந்த ஒரு மாணவி கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள், ஒரு மாணவன் அதற்காகக் கைதுசெய்யப்பட்டிருக்கிறான், இது ஜீரணிக்கமுடியாத பெரிய சோகம்... உங்களுக்குள்ளை பலவிதமான உணர்ச்சிகள் அலைமோதிக் கொண்டிருக்கும். அவை எதுவுமே தப்பானதில்லை. எங்களைக் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணுறதுக்காக நாங்க எல்லோருமாய்ச் சேர்ந்து ஒரு மூச்சுப்பயிற்சி செய்துபாப்பமா? பாதங்களை நிலத்தில வைச்சிருந்தபடி, கதிரையில பின்னுக்குச் சாய்ந்து சௌகரியமாக இருங்கோ.

முதலில 1 2, 3, 4 என மனசுக்குள்ளை எண்ணினபடி ஆழமா மூச்செடுங்கோ. பிறகு 1 2, 3, 4 என மெதுவாக எண்ணிமுடிக்கும்வரைக்கும் மூச்சைப் பிடிச்சிருங்கோ. அதுக்குப் பிறகு 1 2, 3, 4 என மனசுக்குள்ளை சொல்லிக்கொண்டு மூச்சை மெதுவா வெளியேற்றுங்கோ. பிறகு 4



**ஓம், ஓம், இதை நாங்க ஒரு** wakeup call **மாதிரி நினைக்கோணும், பிள்ளை வழிமாறினா, என்னத்தைச் சம்பாதிச்சும் பயனில்லை.**

செக்கன் காத்திருந்திட்டுத் திரும்பவும் இப்பிடி மூன்று முறை செய்வம், சரியா?"

மிசிஸ். ஜோனுடன் சேர்ந்து அப்படிச் செய்தபோது இதயம் படபடப்பது சற்றுக் குறைந் திருப்பதுபோல எனக்குத் தோன்றியது.

"கொஞ்சம் ரிலாக்ஸாவிருக்கா? மன அழுத்தத்தை எப்போதாவது உணரும்போது இப்படிச் செய்துபாருங்கோ. 13 வயசு - கொஞ்சம் கஷ்டமான காலகட்டம்தான். தங்கியிருத்தலி லிருந்து விலகிச் சுயாதீனமா இருக்க முயற்சிக்கிற இந்தக் கட்டத்தில நிறையக் குழப்பங்கள் இருக்கும். அதோடை பருவமடைகிற காலம் இது, உங்கட உடம்பிலை சுரக்கிற ஓமோன்களின்ர தாக்கத்தையும் நீங்க சமாளிக்க வேண்டி யிருக்கும்.

ஆரம்பப் பாடசாலை ஒன்றிலையிலிருந்து இந்த இடைநிலைப் பாடசாலைக்கு வந்திருக் கிறீங்க. உங்களில் சிலருக்கு நெருக்கமான ஒரு நட்பு இன்னும் கிடைக்காமலிருக்கலாம். தனிமையை, வெறுமையை நீங்க உணரக்கூடும். பாடங்கள் சிரமமானதாக இருக்கலாம். வீட்டில உங்களிட்டை எதிர்பாக்கிறதுகளை உங்களால செய்யமுடியாம இருக்கலாம். இந்த அழுத்தங்கள் எல்லாத்தையும் தாங்கிற சக்தி உங்களுக்கு இல்லாமலிருக்கலாம்... தயவுசெய்து உங்கட உணர்ச்சிகளைப் பற்றிப் பெற்றோரோடையோ, ஆசிரியர்களோடையோ அல்லது உங்களுக்கு நம்பிக்கையானவர்களோடையோ மனம்விட்டுக் கதையுங்கோ. என்ர கதவு உங்களுக்காக எப்பவும் திறந்திருக்கும். வார விடுமுறை கழிஞ்சு பாடசாலைக்குத் திரும்பி வரேக்கை எல்லாருக்கும் கொஞ்சமாவது அமைதி கிடைக்குமெண்டு எதிர்பாப்போம்."

மிசிஸ் ஜோன் போனதும், மீளவும் லைபிரரிக்குப் போகிறோம்.

பள்ளிக்கூடம் முடிந்ததும், பீற்றரின் வீட்டருகில் என்ன நிகழ்கின்றதென அறியும் ஆர்வத்தில் வழமையில் வீட்டுக்குப் போவது போல எங்களின் தெருவில் திரும்பாமல், அதற்கு முன்பாகவிருந்த தெருவில் திரும்புகிறேன். பின் அங்கிருந்து எங்களின் தெருவை நோக்கி நடக்கிறேன். எங்களின் தெருவின் தெற்குப் பக்கத்தில்தான் பீற்றரின் வீடிருந்தது. அவனின் வீட்டுக்கு அண்மையில் செல்லச்செல்ல என் உடல் நடுங்குகிறது, நெஞ்சடைக்கிறது. ஆனால், அவனின் வீட்டுக்கு வெளியில் எந்தச் சஞ்சாரமும் இருக்கவில்லை. அவனின் வீட்டைக் கடந்து எங்கள் வீட்டுக்கு எப்படிப் போனேன் என்றே தெரியவில்லை, கால்கள் தடுமாறு கின்றன.

எங்களின் வீடு வழமைவிட அதிக நிசப்தமாக இருப்பதுபோலிருந்தது. எதைச் செய்யவும் எனக்குப் பிடிக்கவில்லை. சோபாவில் படுத்துக்கொள்கிறேன். மனம் எங்கெல்லாமோ அலைபாய்ந்துகொண்டிருக்கிறது. நேரம் போகப்போக மேலும் துக்கமாகவும், களைப் பாகவும், பசியாகவும் இருக்கிறது. குளிரூட்டியில் இருந்த பீசாவை மைக்கிரோவில் சூடாக்கியபடி instagramஐப் பார்ப்போமா என நினைத்தாலும், அதைப் பார்க்கப் பயமாகவும் இருக்கிறது. இந்தக் கொலையைப் பற்றி அதிலை என்ன வெல்லாம் பேசிக்கொள்வார்களோ என்ற என் நினைவைத் தொலைபேசியின் ஒலி குழப்பு

கிறது. FB messangerஇல் லீசாதான் அழைக் கிறாள்.

''ஹாய் லீசா''

மறுமுனையில் விசும்பல் ஒலி. ''ஏய் லீசா, என்ன நடந்தது?'' எனக்குள் ஆயிரம் கேள்விகள். ''என்ர போனைப் பறிச்சுப்போட்டினம், சுவேதா. கொம்பியூட்டரும் இனி லிவ்ங் ரூமிலைதான் இருக்குமாம். லக்கியா பீற்றருக்குப் போட்ட கொமன்ற்ஸ் பற்றி எனக்குத் தெரியுமோ? அதைப் பற்றி நானும் ஏதேனும் எழுதினேனா? ஏன் அதுகளைப் பற்றி ரீச்சர்மாரிட்டை சொல் லேல்லை எண்டு ஒரே அறுவை.''

''ஓ, சொறி லீசா. பீற்றர் ஒரு incel, அவனாலை கேர்ள்ஸ் ஐக் கவரமுடியாதெண்டு லக்கியா அவனை டிரடடல பண்ணேக்கை, நீரும் அதைப்பற்றி ஏதாவது எழுதினீரா?''

''இல்லை, நான் ஒண்டும் எழுதேல்லே, ஆனா லக்கியான்ர கொமன்ற்றுக்கும், மற்றவை சொன்னதுகளுக்கும் லைக் போட்டனான். அதுதான் வீட்டிலை பெரிய பிரச்சினை''

''இங்கையும் என்ன நடக்கப்போகுதோ தெரியாது. பீற்றரின்ர வீட்டுக்காரரைத் தெரியு மெண்டதாலை, நான் அதுக்கொரு கொமன்றும் எழுதேல்லை. ஆனா வேறை ஆக்களுக்கு என்னெல்லாம் எழுதியிருக்கிறன், எதையெல்லாம் லைக் பண்ணியிருக்கிறன் எண்டு பாக்கோணும். அம்மா வாறதுக்கிடையிலை எல்லாத்தையும் அழிச்சுப்போடோணும். சொறி, லீசா, உமக்கு அதுக்கெல்லாம் நேரமிருக்கேல்லை.''

''இது பொலிஸ் கேஸ் எண்டதாலை என்ன பிரச்சினையெல்லாம் வருமோ தெரியாது எண்டு அப்பா பயப்படுத்துறார். என்ர Instagram எக்கவுண்டையும் அழிச்சுப்போட்டார். போன் இல்லாமல் எனக்கு ஒரே விசராயிருந்துது. ஆரோடையாவது கதைக்கோணும் போலை யிருந்து... கடைக்குப் போனவை வருகினம் போலை இருக்கு, பிறகு கதைக்கிறன்.''

ஒரு மணித்தியாலத்துக்குள் அப்பாவும் அம்மாவும் வந்திடுவார்கள். எனக்குப் பதற்றமாகவிருக்கிறது. 'கையும் ஓடேல்லை, காலும் ஓடேல்லை' என்று இந்த நிலையைத்தான் சொல்கிறவைபோலும்.

''சுவேதா, இதென்ன லஞ்சுக்குக் கொண்டு போன சாப்பாடு அப்படியேயிருக்கு, Microwaveக் குள்ள பீசா கிடக்குது. நீ ஒண்டுமே சாப்பிடேல் லையே? கீழை வா!'' வந்ததும் வராததுமாக அம்மா சத்தமாகக் கூப்பிடுகிறா. அப்பா மேலே வந்து என் அறைக்கு முன்னால் நிற்கிறார்.

''சுவேதா, என்ன செய்கிறாய்?''

''ஒண்டுமில்ல, எனக்குத் தலையிடிக்குது''

''சாப்பிடாட்டிலும் தலையிடிக்கும், வா, வந்து முதலிலை சாப்பிடு''

போய்ப் பீசாவை எடுத்துக்கடிக்க ஆரம்பித்த போது, ''கொத்துரொட்டி வாங்கிக் கொண்டு வந்தனான். உதை வைச்சிட்டு அதைச் சாப்பிடு,'' என்று அம்மா சொல்ல, அப்பா அதை எடுத்துக் கொண்டுவந்து தருகிறார்.

எனக்குப் பிடித்த சிக்கன் கொத்து. ஆனால் ரசித்துச் சாப்பிட முடியவில்லை. ''சாப்பிட்டு முடி, உன்னோடை ஆறுதலாய்க் கதைக் கோணும்,'' அம்மா சொல்ல என் மனம் குறு குறுக்கத் தொடங்குகிறது.

''சும்மா பீடிகை போடாம நேரடியாய்க் கேளும்,'' என்ற அப்பா, அவரே ஆரம்பிக்கிறார்.

''வகுப்பிலை எல்லாருக்கும் பெரிய அதிர்ச்சியாயிருந்திருக்கும். பாவம் அந்தப் பிள்ளை லக்கியா! என்ன பாடுபட்டிருக்கும். நினைச்சுப்பாக்கவே முடியேல்லை. மனசுக்குப் பெரும் கஷ்டமாயிருக்கு. சமூக ஊடகமெண்டு ஒண்டு வந்ததும் வந்தது, அந்தக் காலத்திலை எங்களுக்கிருக்காத பிரச்சினைகளெல்லாம் உங்களுக்கு வந்திட்டுது.'' சொல்லிமுடித்துவிட்டு என்னையே உற்றுப்பார்க்கிறார், அவர்.

''13 வயசிலை மூளை முழுசா வளர்றதில்லை. அதாலை சிந்திச்சுச் செயலாற்றுறது கஷ்டம் தான்... உனக்கு என்ன பிரச்சினை வந்தாலும் நாங்க இருக்கிறம் எண்டது உனக்குத் தெரியோணும், எங்களோடை நீ என்னத்தையும் கதைக்கலாம், என்ன?'' என்கிறா அம்மா, உறுதிதரும் குரலில்.

'ம்ம், திட்டம்போட்டு நல்லாய்த்தான் கதைக்கினம். இப்பிடிக் கதைச்சால் நான் விட்ட பிழையெல்லாம் சொல்லுவன் எண்டு நினைக்கினம்போல, ஆனா சொன்னா என்ன நடக்குமெண்டு தெரியும்தானே,' என்ர மூளை என்னை எச்சரிக்க, நான் எதுவுமே பேசாமலிருக்கிறேன்.

''இண்டைக்குக் கதைக்கிறது உனக்குக் கஷ்டமாயிருகெண்டா நாளைக்கு ஆறுதலாய்க் கதைப்பம்,'' என்ற அம்மாவைத் தொடரவிடாமல், ''லக்கியாவோடை எனக்குப் பழக்கமில்லை. பீற்றரோடையும் ஒரு நாளும் கதைச்சதில்லை. நடந்ததுகளைப் பற்றிக் கதைக்கோணுமெண்டால் கவுன்சிலரோடை கதைக்கலாமெண்டு பள்ளிக்

கூடத்தில சொன்னவை,'' இந்தக் கதை மீளவும் தொடராமல் இருப்பதற்காக அவசரப்படுகிறேன் நான்.

"எங்களோடை கதைக்கேலாதெண்டால். கவுன்சிலரோடையாவது கதை, என்ன? கதைப்பியோ?'' என்ற அம்மாவைப் பார்த்து தலையை மேலும் கீழும் ஆட்டுகிறேன். பின்னர் என்னுடைய அறைக்குப் போன நான் படுக்கையில் விழுந்து குப்புறப் படுத்துக்கொள்கிறேன். அடக்கமுடியாமல் அழுகை அழுகையாக வருகிறது.

கொஞ்ச நேரத்தில் அப்பாவும் அம்மாவும் பேசிக்கொள்வது கேட்கிறது. "நாங்களும் வேலையாலை பிந்தித்தான் வாறம். வீட்டிலை அவள் கதைக்கிறதுக்கும் ஒருத்தருமில்லை. சின்னப்பிள்ளையிலை நீந்துறதுக்கு, சொக்கர் விளையாடுறதுக்கு அதுக்கு இதுக்கெண்டு கூட்டிக்கொண்டுபோனமாதிரி கூட்டிக்கொண்டு போறதுக்கும் எங்களுக்கு இப்ப நேரமில்லை.''

"தனியப் போய்வாற வயசு அவளுக்கு இப்ப வந்திட்டுத்தானே. அவளை பிஸியாக்கோணும், விருப்பமான புரோகிராம்களிலை சேத்துவிடோணும். அல்லது Instagram, twitter எண்டு நேரத்தைச் செலவழித்து வீண்பிரச்சினைகளைத்தான் விலைக்கு வாங்கின தாயிருக்கும்.''

"ம்ம், வேலையாலை வந்து நீர் சமைக் காட்டிலும் பரவாயில்லை, அவளோடை மனம் விட்டுப் பேசப்பாரும். ஒன்றாய் நேரத்தைக் கழிக்கப்பாரும். தேவைப்பட்டால் சாப்பாட்டைக் கடையிலை வாங்குவம். சமூக வேலை அது இதெண்டு ஓடித்திரியிறதை நானும் குறைக்கிறன்.''

"ஓமப்பா, நாங்க வேலையாலை வந்த களைப்பிலை, 'வா சாப்பிடு', 'சாப்பாடு காணுமோ', '*homework* செய்துபோட்டியோ', 'நேரமாகுது படு'', எண்டு சும்மா பேருக்குக் கதைச்சால் என்ணெண்டு பிள்ளையள் மனம் விட்டுக் கதைக்கிறது. ஆறுதலாயிருந்து கதைச்சாத்தானே அதுகளும் கதைக்கலாம்.''

"அவள் சின்னப்பிள்ளையாயிருக்கேக்கை நீர் அப்பிடிக் கதைச்சனீர்தானே. அப்ப அவள் உமக்கெல்லாம் சொல்லுறவள்தானே. திரும்பவும் அப்பிடியொரு ஐக்கியத்தை உருவாக்கப் பாருமப்பா. இந்த வயசிலை பிள்ளைகளுக்கு வாற உணர்ச்சிகளையும் ஆசைகளையும் நாங்க விளங்கிக்கொள்ள முயற்சிக்கோணும்.



# தந்தைக்கு ஒரு பாட்டு

– செல்லையா சுப்ரமணியம் –

அழத்தெரியாத ஒரு அப்பாவி
அப்பா என்பது அவன் பெயர்
எப்பாடு பட்டேனும் சாப்பாடு போடும்
அமுதசுரபி அவன்தன் குடும்பத்திற்கு

அன்பு அவன் என்பிலே கலந்தது
பண்பு அவன் பழக்கத்திலே புலர்ந்தது
தன்புகழ் பாடாத் தகப்பனவன்
வயலென்றும் வரப்பென்றும்
அயராது உழைத்து வந்து
உழைத்த களைப்பு போக்கிடவே
அயர்ந்து தூங்கிடுவான்

பாசத்தை மழையாகக் கொட்டமாட்டான்
வேசம் கட்டி ஆடமாட்டான்
வேதமே அவனுக்குத்தன் குடும்பம்தான்
ஆதவன் உதிக்கமுன் எழுந்திடுவான்
அருந்தவச் செல்வங்கள் அழகு பார்த்து
மருந்தன்ன அறிவுரைகள் பகர்ந்திட்டு
மாடாய் உழைக்க மனைவிட்டேகிடுவான்

தலைச்சுமை பெரிதல்ல அவனுக்கு
மனச்சுமைதான் கனப்பதுண்டு என்றாலும்
மழைச்சாரல் மனதோடு இளைப்பாறும்
மனிதனவன் மன்னிக்கப் பிறந்தவன்

தோள் சுமந்த தந்தைக்கு
தோள் கொடுக்கும் பிள்ளைகளே
தோழனாக வருவீரோ
தோழியாக வருவீரோ
செயலிழந்து அவர் வாழ்வு
ஒரு நாளில் வலுவிழக்கும்
சிறுமைப்பட விடமாட்டீர்
முதுமைப் பருவத்திலே
கருத்தோடு கவனிப்பீர்.

மனம்விட்டுக் கதைக்கோணும். அப்பிடியில்லாம நெடுகப் பிழைகண்டுகொண்டிருந்தம் எண்டால் எங்களுக்கு ஒண்டும் தெரியவராது.”

“ஓம், ஓம், இதை நாங்க ஒரு wakeup call மாதிரி நினைக்கோணும், பிள்ளை வழிமாறினா, என்னத்தைச் சம்பாதிச்சும் பயனில்லை. இண்டைக்கு முழுக்க வேலையிலை எனக்கு இதே நினைப்பாய்த்தானிருந்துது? லக்கியாவின்ர பெற்றோரின்ர நிலையிலையிருந்து யோசிச்சுப் பாருங்கோ, எப்பிடியிருக்கும்?”

“ம்ம், பீற்றரின்ர குடும்பமும் பாவம்தான். அவையும் பிசியாக இருந்திட்டினம். இப்ப அவைக்கும் பெருங்கஷ்டமாயிருக்கும்.”

“அவனுக்குச் சுயமதிப்பு இருக்கேல்லை. ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தத் தெரியேல்லை. போதாதற்கு எப்பிடிப் பழிவாங்குறது எண்டதைத் தானே ரீவி புரோகிறாம்களும் சினிமாவும் பிள்ளையளுக்குச் சொல்லிக்குடுக்குது. நாங்களும் பிசியாயிருந்தால் யார் அதுகளுக்கு வழி காட்டுறது?”

அம்மா விசும்புவது கேட்கிறது.

“பிள்ளையள் பாதுகாப்பாய் இருக்கோணுமெண்டு போனை வாங்கிக்குடுத்தால், இப்ப அதாலை வேறை பிரச்சினையாய்க்கிடக்கு... அந்தப் பிள்ளை எங்கை போய்வாறள் எண்டதையெல்லாம் கண்காணிச்சுத் திட்டமிட்டுக் கொலைசெய்யிறளவுக்கு மனசிலை அவன் வன்மத்தை வளத்திருக்கிறானே...” அப்பாவின் குரல் உடைகிறது.

“சூழலின்ர பாதிப்பிலிருந்து எவ்வளவு தூரம் எங்களாலை பாதுகாக்க முடியுமெண்டு எனக்குத் தெரியேல்லை. ஆனாலும் எங்களாலை ஏலுமானதை நாங்க செய்யோணும்!” அம்மா நா தளுதளுக்கச் சொல்கின்றா.

அம்மாவின் விசும்பலும் அப்பாவின் கரிசனையும் என்னையும் விம்மச்செய்கின்றது. படுக்கையில் புரண்டுபுரண்டு படுக்கிறேன். நித்திரைவருவது மாதிரித் தெரியவில்லை. இருந்தாலும், வருமென்ற நம்பிக்கையுடன் கண்களை மூடிக்கொள்கிறேன்.

ooo



# அப்படியே நிற்கட்டும் அந்தமரம்!

**கீத்தா பரமானந்தன்**

தலைமுறை தலைமுறையாய் தாலாட்டி நின்றமரம்
தாத்தாவும் பாட்டியும் தண்ணீரூற்றி வளர்த்தமரம்
காத்தோடு கலந்துவரும் மாம்பூ வாசனை
காக்கா குருவிகள் காப்பாய் அடைந்திருக்கும்!
ஊஞ்சல்கட்டி ஆடிமகிழ்ந்ததுவும் உட்கார்ந்து கதைபேசியதும்
கயிற்றுக்கட்டிலிலே காத்துவாங்கி உறங்கியதும்
வெளவால் அணில்கள் வரிசையாய்ப் பழம் கொந்தியதும்
தோப்பாய் நிழல்தந்து துள்ளிவிளையாடியதும் அதன்கீழேதான்
காயாயும் பழமாய் காய்க்கும் குலைகுலையாய்
கச்சிதமாய் ஊறுகாயும் மாவடுவும் தந்திருக்கும்
பிட்டுக்கு மாம்பழம் பெருஞ்சுவை கூட்டிநிற்கும்
வீட்டு விசேடமென்றால் வாசலிலே இலைதொங்கும்
இத்தனையும் எழிலாக எப்போதும் சுரந்தமரம்
தப்பாகி எல்லையின் நடுவே நிற்பதனால்
தறித்துவிடப் போகினமாம் அத்தையும் மாமாவும்
தாங்கவில்லை என்மனசு தடுமாறி அலைகிறது
அத்தையும் மாமாவும் ஆடிடவும் ஏறிடவும்
அணைத்திட்ட அந்தமரம் சொத்துப் பிரித்தலில்
அவமாகிப் போனாலும் அமைதியாய் என்நெஞ்சில்
அழகான தோற்றத்தில் அப்படியே நிற்கட்டும் அந்தமரம்



# சமகால உலகின் ஆடற்கலையும் இந்தியச்சூழலும்



பேராசிரியர்
சபா ஜெயராசா

பல்வேறு எழுநடைகளை (Styles) ஒன்றிணைத்தும், பல்வேறு ஆடல் வடிவங்களைக் கலந்து செழுங்கலவை (Blend) செய்தும், சமகால உலகஆடற்கலை மேலெழுந்து வருகிறது. புதிய புதிய அசைவுகள், மரபுவழி ஆடல்களில் ஒன்றிணைக்கப்படுகின்றன.

ஆடல் வளத்துக்கும் செழுமைக்கும் மூச்சுச் செயற்பாடு அடிப்படையானது. மூச்சை நெறிப்படுத்தும் தியானம் தமிழர் ஆடல் மரபில் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மூச்சு இயக்கத்தின் மீதும், அதனோடு இணைந்த அசைவுச் சுகத்தோடும், மனவெழுச்சி இங்கிதத்தோடும், சமகால உலக ஆடல்கள் மேலும் ஊன்றல் கொள்கின்றது.

அசைவுகளுடன் இணைந்த உடற் சமநிலைப் பாட்டுடனும் அதற்குரிய வலுவை வழங்கலுடனும் ஆடலை நெறியெழச்செய்தல் முன்னெடுக்கப்படுகிறது.

ஆடலைச்சுருக்குதலும் விரிவெழச் செய்தலும் தமிழ் மரபில் அரசரின் வெண்கொற்றக் குடையைச் சுருக்குதலுக்கும் விரித்தலுக்கும் ஒப்புமையாக்கப்பட்டன.

மனவெழுச்சிகளுடன் இணைந்த உடலசைவு அழகியலைக் கையளிப்பதற்கு சுருக்கும் நுட்பமும், விரிவாக்கும் நுட்பமும் துணை செய்கின்றன.

வளைவுகளால் ஆனவடிவம் என்ற சுழலிகை (Spiral) மீது, சமகால ஆடலார் ஊன்றிய கவனம் செலுத்துகின்றனர். பல்வேறு கோணங்களில் சுழலிகையை முன்னெடுத்து ஆடல் கையளிக்கப்படுகிறது.

உடலை நிலையிழக்கச் செய்தலும் உறுதியுடன் மீண்டெழச் செய்தலும் என்ற ஆடல் நுட்பம் சமகாலத்தில் மேலும் அழுத்தங்களுடன் மேற்கொள்ளப்படுகிறது. எத்தகைய அசைவுகளையும் இணக்கப்பாட்டுக்கு மீண்டெழச் செய்தல், அசைவு அழகியலை மேலும் செழுமைப்படுத்துகின்றது.

உடலைத் தொங்கல் நிலைக்குப் பெயரச் செய்து பாரமில்லா மீட்சிக்குட்படுத்தலும், அதற்குரிய வலுவை உள்ளீடாக்கும் உந்திகை (Momentum) செய்தலும், சமகால ஆடலில் ஊன்றிய கவனச் செறிவைப் பெறுகிறது.

ஒற்றைப் பரிமாணத்தில் ஆடலை அடக்கிச் சுருக்கிவிடாது, ஆடல் பெருவளத்தில் உள்ள நல்லவற்றை உள்வாங்குதலும், புதிய கண்டுபிடிப்புக்களை செய்தலும், புதிய தொழில் நுட்பச்சூழலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அழகியற் செறிவை நிலைநிறுத்தலும், மேற்கொள்ளப் படுகின்றன. பொருத்தமற்ற பழைமை நிலைவரங்களை அறைகூவலுக்கு உட்படுத்தலும், சமகால ஆடற் கலையில் நிகழ்த்தப்படுகின்றன.

ஆடலில் வெளிமை (Space) அதீத கவனக் குவிப்பைப் பெறுகின்றது. வெவ்வேறு மாற்றுக் கோணங்களில் அசைதலும் உயர்வெளியில் மேற்கிளம்பி ஆடி உச்ச அழகை வருவித்தலிலும், ஆக்க மலர்ச்சி முனைப்புடன் வெளிமையைக் கையாள்வதிலும், நிறைந்த கவனம் செலுத்தப்படுகிறது.

ஆடலை கூட்டுச் செயற்பாடாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தயாரிப்புச் செயற்பாட்டில் பார்வையாளரும்

உள்வாங்கப்படுகின்றனர். ஒலி, ஒளி வல்லுனர்களும், செயற்கை நுண்மதி நிபுணர்களும், வடிவமைப்பாளர்களும் இணைக்கப்படுகின்றனர்.

கூட்டுழைப்பு என்பது ஆடல் ஆக்கத்தை வளம்படுத்தல் கண்டறியப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்ற பின்னைப் புதுமைச் சிந்தனைகள் சமகால ஆடல் ஆக்கத்தில் செல்வாக்கு விளைவித்துள்ளன. மேலும் ஆடல் ஆசிரியர் **மேர்சி கனிங்காம்** நவீன ஆடல் தொடர்பான "விடுதலை முனைப்பு" உளப்பாங்கை முன்மொழிந்தார்.

அவரது காலத்தில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கிய அருவ ஓவியக் கலையின் செல்வாக்கு அவர்மீது பதிவு கொண்டது.

ஆடல் தொடர்பான மேர்சியின் சிறப்பார்ந்த கருத்துகள் வருமாறு:

1. காற்பகுதி அசைவுகளைக் காட்டிலும், உடற்பகுதி அசைவுக்கு முதன்மை கொடுத்தார்.
2. எடுத்தியம்பல் (Narrative) முறை அத்துணை அவசியமானது அல்ல என்றார்.
3. ஒத்திசைவு, வேகம், திசை ஆகியவற்றில் எதிர்பாராத திருப்பங்களை வலியுறுத்தினார்.
4. பன்மையான வினைப்பாடுகளுக்கு இடமளித்தார்.
5. ஆக்கநிலைச் சுதந்திரத்தை முக்கியப் படுத்தினார்.
6. ஆடலுக்கும் இசைக்குமிடையே சுதந்திரத்தை வலியுறுத்தினார்.
7. ஆடல் என்பது ஆடலுக்கே உரித்தானது. பகுப்பாய்வுக்கு இடமில்லை, என்பதை உணர்த்தினார்.
8. புத்தாக்கம் பெய்த ஒலி, ஒளி அரங்க முறைமையைக் குறிப்பிட்டார்.

சமகால ஆடற்கலையில் இசடோராடங்கன் என்பாரின் பங்களிப்பு விதந்து பேசப்படுகிறது. அவர் மார்க்சிய அறிவுடன் எழுந்த முற்போக்குச் சிந்தனையாளர்.

ஆடம்பரமான ஆடை அணிகலன் புனைவுகள் அற்ற விடுதலை ஆடலுக்கு வழிவகுத்தார். வெறுங்கால்களுடன் ஆடுதல், தலை அலங்காரம் இன்றி தளர்ந்த தலைமுடியுடன் ஆடுதல், இலகுவானதும் நெகிழ்ச்சிகொண்டதுமான உடையுடன் ஆடலை நிகழ்த்துதல் முதலியவற்றை வலியுறுத்தினர்.

மனவெழுச்சிவெளிப்பாடுகளுடன் நகைச்சுவை விசையை ஆடலில் உட்புகுத்தினார்.

உடற்பயிற்சிக்கலையில் மேற்கொள்ளப்படும் அசைவுகளை ஆடற்கலையிலும் பயன்படுத்தலானார். கிரேக்கக்கலை மரபு, கிராமிய ஆடல் நுட்பங்கள், மற்றும் இயற்கையான உடலசைவுகளை தமது ஆடல்களில் உள்ளடக்கினார்.

அவரது செயற்பாடுகள் பெருவரவேற்பைப் பெற்றன. ஆடலை இறுகிய செயற்பாடுகளுக்குள் அடக்கிவிடாது, புது மலர்ச்சி கொண்ட மக்கள் அழகியலுக்குரிய கலை வடிவமாக்கினார். அவர் முன்மொழிந்த கலை நுட்பங்களும், எளிமைப் பாங்கும், சமகால ஆடற்கலையுலகில் தொடர்ந்தவண்ணமுள்ளன.

மரபுவழியான செவ்வியல் ஆடல்களில் உட்பொதிந்துள்ள மேட்டுக்குடியினருக்குச் சார்பான கருத்தியலும், அரசியலும் சமகால ஆடற்கலையில் திறனாய்வுக்கு உட்படுத்தப் படுகின்றன.

ஆடல் என்பது அழகியல் வடிவம் மட்டுமல்லாது அரசியலும் அதனுள்ளே புகுந்திருத்தல் உற்றறிவு கொள்ளப்படுகிறது. சமூகம் மற்றும் பண்பாட்டுப் பரிசோதனைகள் ஆடலில் உள்ளடக்கப்படுகின்றன.


குறிப்பிட்ட ஆடற்சிந்தனாகூடத்துக்கும், குறிப்பிட்ட ஆடல் உருவழங்கியல் (*Choreography*) என்பதற்கும் ஆடல்கட்டுப்பட்டதன்று என்பது அளிக்கை நிலையிலும், கலைத்திறனாய்வு நிலையிலும் உணர்த்தப்படுகிறது.

விடுதலை அரங்கு (*Liberation Theatre*) தொடர்பான சிந்தனைகளும், சமகால ஆடற்கலையில் சுவறிவருதல் சுட்டிக்காட்டப்படுகிறது.

மக்கள் இதயத்தோடு இணைந்து நிற்கும் கருத்துக்களும், ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைச் சிந்தனைகளும் நவீன ஆடல் ஆக்கங்களில் உள்ளடக்கப்படுகின்றன. மரபுவழி ஆடல்நுட்பங்களை நவீன ஆடல் நுட்பங்களோடு இணைத்து ஆற்றுகைச் செழுமைக்கு வலுவூட்டல் மேற்கொள்ளப்படுகின்றது.

உலகெங்கிலும் பரவியிருக்கும் ஆயிரக்கணக்கான ஆடல் நுட்பங்ளைத் தொகுக்கும் முயற்சியிலும் ஆடல் ஆய்வாளர் முனைந்து வருகின்றனர். அந்த அனுபவம் ஆடற்கலையை மேலும் வளமும் செறிவும் கொண்ட செயற்பாடுகளுக்கு வழிவகுக்கிறது.

சமகாலத்தில் இந்திய செவ்வியல் ஆடல்களில் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. புராணச் செய்திகளையும் கதைகளையும் புராண பாத்திரங்களையும் கடவுளரையும்



**உதயசங்கர் (1900–1977),**
**இந்தி மரபுவழி ஆடல்களிற் காணப்படும் நிருத்தம், நிருத்தியம் என்ற பிரிநிலைகள் அவரால் இல்லாதொழிக்கப்பட்டன.**
**இவரது "இலங்காதகனம்", "பஞ்ச தந்திரம்" ஆகிய ஆடற்படைப்புகள் உலகப் புகழைப்பெற்றன.**

ஆடற்பொருளாக்கிய நிலையில் மாற்றங்கள் நிகழத் தொடங்குதலை மரபுவழி ஆசிரியர் எதிர்க்கின்றனர்.

சமூகப்பிரச்சினைகள், ஒடுக்குமுறைகள், தொழிலாளர் விடுதலை, பெண்விடுதலை, தேசிய இனங்களின் தீண்டாமை, முதலாம் கருப்பொருள்களை உள்ளடக்கிய ஆடல் ஆக்கங்கள் மரபு பேணுவோரால் ஏற்கப்படுவதில்லை.

அதேவேளை மேலைப்புல ஆடல் நுட்பங்களை இந்திய செவ்வியல் ஆடல்களுடன் கலந்து இணைவியம் (Fusion) செய்தலும் மேற்கொள்ளப்படுகிறது.

அத்தகைய இணைவிய முயற்சிகளை முன்னெடுத்தவர்களுள் உதயசங்கர் (1900-1977) முக்கியமானவர். இந்தி மரபுவழி ஆடல்களிற் காணப்படும் நிருத்தம், நிருத்தியம் என்ற பிரிநிலைகள் அவரால் இல்லாதொழிக்கப்பட்டன.

முன்னைய ஆடற்கட்டு பாடுகளை உடைத்து உடலின் இயற்கையானதும் நெகிழ்ச்சியானதுமான அசைவுகளுக்கு முதன்மை வழங்கினார்.

''இலங்காதகனம்'', ''பஞ்ச தந்திரம்'' முதலாம் அவரது ஆடற்படைப்புகள் உலகப் புகழைப்பெற்றன.

நவீன இந்திய ஆடற் கலையை உலக அரங்கில் வளர்த்தெடுத்தவர்களுள் பெங்களூரைச் சேர்ந்த தேவப்பிரியா முக்கியமானவர். பரதநாட்டியம், கதகளி, பலே முதலாம் ஆடல்களை வரன்முறையாகக் கற்றவர். எகிப்திய நடனம் மற்றும் பழங்குடியினரது பெல்லி (Belly) ஆடலையும் ஆழ்ந்து கற்றவர்.

உலகின் பல்வேறு ஆடல் வகைகளைக் கலந்து இணைவியமாக்கி சமகால வாழ்க்கையை ஆடற்கட்டமைப்புக்குள் கொண்டு வந்து வெற்றியும் பாராட்டும் பெற்றவர்.

பெங்களூரின் செல்வியல் ஆடல் தளத்தைப் பல்வேறு புதுமைத் தளங்களுக்குள் நகர்த்தி வந்தார்.

இந்தியக் கிராமிய ஆடல்கள் பொது மக்களைத் தழுவி நிற்கும் அளவுக்கு பரதம், கதகளி, கதக், முதலாம் செவ்வியல் ஆடல்கள் பொதுமக்கள் உணர்வுகளைச் சென்றடையவில்லை. இறுகிய கட்டுப்பாடுகளும் சம்பிரதாயங்களும் மரபுகளும் அந்த நிலையை ஏற்படுத்தி விட்டன என்ற திறனாய்வு அவரால் முன்வைக்கப்பட்டது.

ஆடல் என்பது இலக்கணமாகவும் மொழியாகவும் உள்ளது. இந்திய திரைப்பட வளர்ச்சி ஆடல் இலக்கணத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது.

தொன்மக் கதைகளைப் பேசிய செவ்வியல் ஆடல்கள் விடுதலையையும், சமூகப் பிரச்சினைகளையும் திரைப்படங்களிற் பேசத் தொடங்கின.

தமிழ்ச்சூழலில் பாரதியார், பாரதிதாசன் முதலியோரின் முற்போக்குக் கருத்துக்களையும், தமிழ் எழுச்சிச் சிந்தனைகளையும் பரத நாட்டிய வீச்சுக்குள் திரைப்படங்கள் முன்னெடுப்புச் செய்தன.

அவற்றுக்கு மரபுவழி ஆடற் சம்பிரதாயங்களுக்கு உட்பட்டோர் முதலில் எதிர்ப்பு வெளியிட்டனர்.

ஆனால் திரைப்பட வேகம் அவற்றைப் பின்தள்ளி மேலெழுந்தது. இன்று செவ்வியல் ஆடல்களுடன் மேலைப்புல ஆடல்களைக் கலந்து இணைவியம் செய்தல் திரைப் படங்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆடலின் பின்புலமாக அமையும் வர்க்கப் பண்பை சமூக இயங்கியல் ஆய்வாளர்கள் ஆழ்ந்து நோக்குதல் சமகாலத்தில் மேலும் முதன்மை பெறத் தொடங்கியுள்ளது.




# உம்மாவின் மையத்து

மின்சார சபையின் சிவப்பு நோட்டீஸின் படி நிலுவைப்பணம் நாளைக்கு செலுத்தப்பட வேண்டும். இருபத்தேழாயிரத்து முந்நூறு ரூபாய். உயர்தரம் பயோ செய்யும் மகளின் ஹொஸ்டல் கட்டணம் வேறு. டிசம்பர் விடு முறைக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது. அழைத்து வரச் செல்லும்போது எப்படியும் அதனைக் கட்டத்தான் வேண்டும். தண்ணீரை வெட்டிவிட்டுப் போய் மூன்று நாட்கள். பக்கத்து வீட்டு பாயிஸ் ஒன்றும் சொல்லாததனால் இன்னும் சில நாட்களுக்குச் சமாளித்துக் கொள்ளலாம்.

கொழும்பு நண்பரொருவரிடம் கடனாக வாவது கேட்டுப் பார்ப்போமே என்ற எண்ணத்தில் தான் இந்தப் பயணம் புறப்பட்டு வந்ததே. விடயம் கைகூடாததனால் மிகுந்து மாவத்தையிலிருந்து திரும்பி நடந்து வந்து கொண்டிருந்தேன்.

மனதை உறுத்திக் கொண்டிருக்கும் உடனடித் தேவைகளை நினைத்து நினைத்து ஏற்கனவே மனது மௌத்து. அழகுக்கு அழகூட்டிக் கொண்டிருக்கும் தாமரைக் கோபுரத்தின் இரவு நேர ரம்மியத்தை ரசிக்க மனம் வரவில்லை. களை கட்டியிருக்கும் இரவுச் சந்தைக்குச் சென்று மரக்கறி வாங்க மனம் வந்தும் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை.

பேரே வாவியோடு ஒட்டினாற் போலுள்ள நடைபாதை வழியாக பாணந்துறை தனியார் பஸ் நிறுத்துமிடத்தை நோக்கி நடந்து வந்தேன். தற்செயலாக வட்ஸ்அப்பைப் பார்த்தபோது உம்மாவின் மையத்துச் செய்தி ஊர்க் குழுமத்தில் வந்திருந்தது. பிறஷர்காரன் என்பதனால் குடும்பத்தவர்கள் யாரும் தகவல் தரவில்லை போலும். செய்தியைக் கேட்டதும் தலை சுற்றுவது போலிருந்தது. யார்யாரோ முகத்துக்குத் தண்ணீர் தெளித்துக் குடிக்கவும் தந்தார்கள். சுயநினைவு வந்தபோது ஒரு பெட்டிக்கடையில் உட்கார்ந்திருந்தேன்.

மதுகம பஸ்ஸிலேறி, பாணந்துறை புதிய பாலத்தைத் தாண்டியதும் வரும் மகாநாம ஹோல்ட்டில் இறங்கி முச்சக்கரவண்டியில் வீடு வந்து சேர்ந்தேன். திஹாரியில் வசிக்கும் தம்பி, வரகாபொல சீஎல்சீக்குப் போய் மகளை அழைத்து வந்திருந்ததும் அப்போதுதான்.

வழமையாகத் தூங்குவது போலவே சிரித்த முகத்துடன் உம்மா கட்டிலில் கிடந்தார். ஸாலிஹான மையத்து அப்படித்தானாமே! தஹஜ்ஜத், ழுஹா என நபில் தொழுகைகளைக்கூட ஒருநேரமும் விட்டவரல்லவே! நோன்பு பிடிக்க வேண்டாமென டாக்டர் வற்புறுத்தியும் கடந்த முறை ஆறு நோன்புகளைக்கூடப் பிடித்த வரல்லவா!

வீட்டிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டு வரும்போது உம்மாவுடன் கதைத்து விட்டுத்தான் வந்தேன். வழமை போலத்தான் இருந்தார் வித்தியாசமாக எதுவுமில்லை. நாங்கள் சிறு வயதினராக இருந்த போது இடம்பெற்ற சில சம்பவங்களை நினைவூட்டிப் பேசினார். எனது குறும்புச் செயல்களையும் ஞாபகப்படுத்தினார். வாப்பாவின் மௌத்துக்குப் பின்னர் யாரிடமும் கைநீட்டாமல், கஷ்டப்பட்டு எங்களை ஆளாக்கியதைப் பெருமையுடன் குறிப்பிட்டுப் பேசினார்.

எனக்கு எட்டு வயதாக இருக்கும் போது திடீர் விபத்தில் வாப்பா மௌத்தாகிவிட்டார்.



-கல்ஸாலி அஷ்ஹம்-

அவரது ஜனாஸாகூட கீறலாக இன்னும் ஞாபகம். தனது கையால மட்டை தட்டி முறுக்கியும், கோழி வளர்த்தும் எங்களை சிலர் யாஸீன் ஓதிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் முப்பது ஜுஸ் உக்களையும் ஆளுக்காள் பிரித்து ஓதிக் கொண்டிருந்தார்கள். "நீங்களுக ஓதத் தேவில்ல, அவா தாண்ட குழிக்கு நல்லா தேடிக்கொண்ட" எனச் சொல்ல வேண்டும் போலிருந்தது.

முன்பெல்லாம் மௌத்தை உறுதிப்படுத்திக் கொண்டதும் ஊரவரான கிராம சேவகர் கடிதம் தந்துவிடுவார். புதிதாக வந்துள்ளவர் கொஞ்சம் தூரத்துக் கிராமமொன்றைச் சேர்ந்தவர். அதுவும் ஊருக்குப் புதிதாக வந்துள்ளவர் என்பதனால், வீட்டுக்கு அழைத்து வரப்பட்டு பலரையும் விசாரித்து விபரங்களைக் கேட்டு எழுதிக் கொண்டிருந்தார். கொரணரும் வந்திருந்தார். மரண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு கிராம சேவகரின் அறிக்கை அவசியம்.

ஏற்பாடுகளைப் பார்க்கும்போது மௌத்தாகி மூன்று நான்கு மணித்தயாலங்கள் இருக்கும் போலத்தான் புரிகிறது. ஊர்ப் பள்ளிவாசல்களில் ஜனாஸா செய்தி அறிவிக்கப்பட்டும் விட்டதாம்.

இயன்றளவு அவசரமாக அடக்கம் செய்வதே மார்க்க விதிமுறை. பத்து மணியும் பிந்திவிட்ட நிலையில்...... கபுறு தோண்டி முடிக்கவும் வேண்டியுள்ளது. வெலிமடையிலிருந்து பூதாத்தா வந்து சேர எப்படியும் நள்ளிரவாகிவிடும்.

"நாள வெள்ளணக்கு எட்டு மணிக்கு அடக்கியத வெச்சிகொளோமோ? தொழில் களுக்கு போறவங்களுக்கும் வசதி" - மூத்த மச்சானின் பேச்சுக்கு குடும்பத்தில் எல்லோருமே உடன்பட்டனர்.

"நாங்க கபுறு வெட்டியத பொறுப் பெடுக்கியன்"

"மையத்துக்கு தேவயான கபன்செட்டெல்லம் நாங்க வேங்கி தாரன்"

மாமாவும் பெரியப்பாவும் அப்படிச் சொல்லிக் கொண்டு வந்தார்களாம். அவற்றுக்குத் தான் உடன்படவில்லையென சின்னானா சொல்லிக் கொண்டிருந்தார். அவர் செய்தது சரியே என்றேன். வாழும் நாளில் உதவாதவர்கள் மையத்தில் வந்து உதவத் தேவையில்லை. யாரிடமும் கேட்டுப் பெற வேண்டிய நிலையிலும் நாங்கள் இல்லை.

மையத்துச் செய்தியைக் கேள்விப்பட்டு பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் நிறையப்பேர் அந்த இரவிலும் வந்து கொண்டிருந்தனர். வரப்போகும் ஜனாதிபதி தேர்தல், தாம் சார்ந்த மார்க்க அமைப்புகளின் பிரசாரம் என கூட்டம் கூட்டமாகக் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

❍❍❍

மையத்து அடக்கம் செய்யப்படும் நேரம் பற்றி சுபஹுக்குப் பின்னரும் பள்ளிவாசல்களில் அறிவிக்கப்பட்டது. வட்ஸ்அப், பேஸ்புக் செய்திகள் வேறு. ஆட்கள் தொடராக வந்து கொண்டிருந்தனர். உம்மாவுக்கு ஊரார் மத்தியிலிருந்த மதிப்பு சாதாரணமானதல்லவே!

மையத்து குளிப்பாட்டும் மைமூன் தாத்தா ஆறு மணிக்கெல்லாம் வந்துவிட்டார். பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், மருமக்கள் எனப் போட்டி போட்டிக்கொண்டு ஆளிருந்ததனால் அவருக்கு எந்த வேலையும் அங்கிருக்கவில்லை. வழி காட்டிக் கொண்டிருந்தார், அவ்வளவுதான்.

ஏழு முப்பது அளவில் குளிப்பாட்டிக் கபனிடப்பட்டு எல்லா வேலைகளும் பூர்த்தி. ஜனாஸா சந்தூக்கில் வைக்கப்பட்டு வெளியே எடுத்து வரப்பட்டது.

"குர்ஆனுக தமாமாக்கியிருச்சியோ?" பள்ளி வாசல் ஹஸரத்.

"ஓ ஓ வழ்ழுஹாவில வெச்சிருச்சிய" மச்சான் விடையளித்தார்.

குர்ஆன் தமாம் எனும் பெயரில் ஹஸ ரத் என்னென்னவோ ஓதினார். பிறகு துஆவும் ஓதினார். வழமையாகச் செய்யும் ஜனாஸா வர்ணனையை மறந்துவிட்டார் போலும். ஊர் வழமையெனும் பெயரில் மார்க்கத்தில் ஏவப்படாத இப்படியான சடங்குகளை நினைக்க, அந்தத் துயரத்திலும் கோபம் தலைக்கேறியது. மச்சான் தரீக்காகாரர். இந்த நேரத்தில் மார்க்கம் பேசப் போனால் குடும்பப் பகை வருமென்ப தனால் அமைதியாகிவிட்டேன்.

"தம்பீ, உம்மட மையத்த நீதான் தொழுவிச் சோணும்" - பெரியநானா கூறியதை பூநானா தலையாட்டி அங்கீகரித்தார். "நீதான் மகன் ஏண்ட மையத்த தொழுவிச்சோணும்" உம்மாவின் ஒஸி யத்தும் அதுவே.

ஜனாஸா தொழுவிப்பதற்குப் பொதுவாகக் குடும்பத்தில் நெருங்கிய ஒருவர் முன்வருவதே வழக்கம். ஊர் வழமையும் அதுவே. தொழுகை விதிமுறைகள் எனக்குத் தெரிந்ததுதான். மூத்த தாத்தாவின் மகன் ஹாபிஸாக இருந்தாலும் நானே தொழுவிக்க வேண்டுமென்பதில் நானாமார்,



மச்சான்மார், தம்பி எல்லோரும் உறுதியாக இருந்தனர். நானும் அதை உளப்பூர்வமாக எதிர்பார்த்திருந்தேன்.

"அஹ்ஹது அல்லாஇலாஹ......" ஹஸரத் தொடங்க என்னென்னவோ ஓதல்களுடன் பள்ளிவாசலுக்கு ஜனாஸா எடுத்துச் செல்லப் பட்டது.

வுளூ செய்துகொண்டு ஆட்கள் வந்து சேர்வதற்கிடையில் ஜனாஸா தொழுகையின் சட்டதிட்டங்கள் பற்றி ஹஸரத் எடுத்துக் கூறினார்.

"குடும்பத்தில தொழுவிச்சியதுக்கு தாருசரி..."

இரண்டாம் வரிசையில் நின்ற நான் இமாமத் செய்வதற்காக முன்னே சென்றேன்.

"தொழுவிச்சுடேலா, இதென்தேன் கலர் சேட் போட்டுகொண்டு ?" - ஒரு தரீக்காதாரி சத்தம் போட்டுக்கொண்டு ஓடி வந்தார்.

ஓ உடேலா உடேலா. தொப்பி போட்டு கைநெடிய சேட் போட்டாதான் தொழுவிச்சேலும்" இப்படிச் சொல்லிக்கொண்டு சிலர் முன்வர கோரஸ் பாடியது இன்னொரு கூட்டம்.

மார்க்கத்துக்கு முரணற்ற விதத்தில் இஸ்லாமிய வரையறைகளுக்கு உட்பட்டு கலர் தொப்பியுடன் கைகட்டை சேட் அணிந்திருந்தேன். ஊரில் எந்த ரெட்மார்க்கும் எனக்கில்லை. ஐந்து நேரமும் பேணுதலாகத் தொழுவதோடு இயன்றளவு இஸ்லாத்தின் படி வாழ்ந்து வருபவன். தங்கள் மார்க்க அமைப்பில் நானில்லாதது அவர்கள் என்மீது வஞ்சம் பாராட்டக் காரணமாக இருக்கலாம். நான்தான் எந்த அமைப்பிலும் இல்லையே!

"இதென்தேன் புதுச் சட்டம், கலர் சேட் போட வேணாண்டு எங்கேன் இருச்சிய......" சத்தம் போட்டுக் கொண்டிருப்போரிடம் தரீக்கா காரராகிய மச்சானே நியாயம் கேட்க முன் வந்தார்.

"எங்கட தரீக்கா வேல களுக்கு எகேன்ஸ் ஆக் களுக்கு உடபடாது...... " கந்தூரி, மையத்து நாட்களில் மட்டும் பள்ளிவாசலுக்கு வரும் ஒருவர் சொல்வது கேட்டது.

அழுகை அழுகையாக வந்ததெனக்கு. நான் தரீக்கா வேலைகளில் ஈடுபாடு உடையவனல்ல, அவர்கள் சொல்வது போல் அதற்கு எதிரானவனுமல்ல. அப்படியிருக்கையில், இப்படி அப்பட்டமாகப் பொய் சொல்வதை நினைக்கையில் வேதனையாக இருந்தது. "மார்க்கத்தில இல்லாத விஷய மொண்ட தூக்கி புடிச்சிகொண்டு உம்மட மையத்தேம தொழுவிச்ச உடாமலிருச்சிய" சொல்ல நினைத்ததை மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

இதற்கிடையில் ஊரில் சண்டித்தனத்துக்குப் பேர்போன சிலர் சனத்தை விலக்கிக்கொண்டு முன்னுக்கு வந்திருந்தனர். இதற்கு மேலும் வாதிட்டால் கையைக் காலைக்கூடத் தூக்கி விடுவார்கள். பள்ளிவாசல் ஹஸரத் "கல்லில பேண்ட பூன போல" அமைதியாகக் கிடந்தார்.

தரீக்கா வேலைகளில் மிகுந்த ஈடுபாடுடைய முன்ஸிர் ஹாஜியார் நியாயம் கேட்க முன் வந்தபோது அவருக்கும் ஏச்சு விழுந்தது. "நீங்கெப்பேன் தவ் ஆன?"

"எங்கட சட்டத்த மதிச்சி நடக்கியெண்டா தொழுவிச்சேலும்" யாரோ சொல்வது கேட்டது. இதற்கு முன்னர் இங்கே இப்படியொரு சட்டம் இருந்ததில்லை.

இந்த அராஜகத்தை அங்கு நின்ற அனைவருமே அங்கீகரிக்கிறார்கள் என்றில்லை. ஆனால் வாய் திறப்பதற்குப் பயம்.பிடி வாதத்துக்கு மருந்தில்லையே!

வெள்ளைத் தொப்பியுடன் ஜுப்பா அணிந்திருந்த தாத்தாவின் மகன் பர்ஹான் ஹாபிஸ், நிலைமையைப் புரிந்துகொண்டு தொழுவிப்பதற்காக முன்னே சென்றான்.

நிய்யத்துக்கும் கூலியுண்டு என்பதை நினைத்தவனாக அல்லாஹு அக்பர் எனத் தக்பீர் கட்டினேன்.

❍❍❍

# ஆரம்பகால நாவலான கமலாம்பாள் சரித்திரமும் அக்காலச் சமூகமும் - ஒரு பார்வை




19ஆம் நூற்றாண்டில் இந்திய வரலாற்றில் பல மாற்றங்கள் உள் நுழைந்தன அக்கால சமுதாயச் சூழலானது பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டது ஆங்கிலக் கல்வியின் தாக்கமானது அக்காலத்தில் மத்திய தர வர்க்கத்தினர் தோற்றுவாய்க்கு உதவியது இதனால் மேலைத் தேயத்தில் காணப்பட்ட இலக்கியங்களை கீழைத்தேய அறிஞர்கள் விரும்பிக் கற்றார்கள். கற்றது மாத்திரம் இன்றி இலக்கியங்களில் காணப்பட்டவற்றை தமிழிலும் எழுதி புதுமை செய்தார்கள் அவ்வாறு புதுமை செய்த இலக்கிய வடிவமாக நாவல் எனும் இலக்கிய வடிவம் ஆனது தோற்றம் கண்டது என் நாவலின் ஊடாக அக்காலத்தில் காணப்பட்ட சமுதாயப் பிரச்சினைகளை கேள்வி எழுப்பும் நோக்கோடு பல நாவலை படிக்கத் தொடங்கினார்கள் சமூக சீர்திருத்தத்தினை வேண்டி நின்றவர்களுக்கு தமது எண்ணத்தை பிரதிபலித்து காட்டுவதற்கேற்ற சாதனமாக நாவல் அமைந்தது எனலாம். எனவே அக்கால சமுதாயத்தை காட்டும் கண்ணாடியாக நாவல்கள் அமைந்துள்ளன.

நாவலானது இயல்பான உலக அனுபவங்களை உரைநடையை பயன்படுத்தி சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய விதத்திலே மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அதற்கேற்ற பாத்திரங்களையும் கையாண்டு கதை வடிவில் அமைகின்ற இலக்கியமாக நாவலினைக் கொள்ள முடியும். சிறுகதை என்பது ஒரு வீட்டின் ஜன்னலை திறந்து பார்ப்பது போன்றது. ஆனால் நாவல் என்பது வீட்டினுடைய கதவினைத் திறந்து பார்ப்பது போன்றதாகும். எனவே நாவல், நீண்ட கதை வடிவில் அமைந்து அக்காலச் சூழலில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் படம்பிடித்து காட்டுகின்ற ஓர் இலக்கிய வடிவம் எனலாம்.



**E.A.G. மிலாணி,**
தமிழ் முதுகலை மாணவி
பேராதனைப் பல்கலைக்கழகம்.

மயூரம் வேதநாயகம் பிள்ளையினுடைய பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு அடுத்த நாவலாக தோற்றம் கண்டது ராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் ஆகும். இவர் 1872ஆம் ஆண்டு வத்தலகுண்டு கிராமத்தில் பிறந்தார். மதுரையிலும் சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும் கல்வி பயின்று பட்டம் பெற்று வேலையில் அமர்ந்தார். தமிழ் பெற்றுக்கொண்ட இவர் தமிழ் புலவர்களின் பாடல்களிலும் சிறப்பாக கம்பராமாயணத்தின் கவிதை இன்பத்திலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இளமைக் காலத்திலே வேதாந்தத் தத்துவங்களைக் கற்றுக்கொண்டு கவனத்தை அதன்பால் முழுவதும் செலுத்தினார். இந்நாவலானது ஆரம்பத்தில் விவேக சிந்தாமணி என்ற மாதப் பத்திரிகையில் 1893ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்முதல் தொடர் கதையாக வெளிவந்தது. இத்தொடர் கதையானது 1896ஆம் ஆண்டு புத்தக வடிவில் வெளிவந்தது.

ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரத்தில் அக்கால சமுதாயமானது படம்பிடித்து காட்டப் பட்டுள்ளதனை அறிய முடிகிறது. நாவலுக்கு இன்றியமையாது அந் நாவலில் வருகின்ற பாத்திரங்கள் ஆகும். நாவலாசிரியர் தான் சமூகத்திற்கு எடுத்துக் கூறும் சமூக கருத்துக்களை பாத்திரங்களின் மூலமே விளக்குவார்எனவே இந்நாளில் வருகின்ற பாத்திரங்களை நோக்குகின்றபொழுது அக்காலச் சமூகத்தை படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது. கதை எழுந்த காலத்தில் தமிழ்நாட்டில்



பி. ஆர். ராஜம் ஐயர்

நற்குணம் பொருந்திய குடும்பப் பெண்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக கமலாம்பாள் எனும் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

கல்வி அறிவு, அடக்கம், இசை, இனிய பேச்சு போன்றவை அமைந்த பெண்ணாக படைத்ததோடு மாத்திரமில்லாமல் பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டு ஈற்றில் பக்தியில் ஊன்றி திழைப்பவளாக அவளது பாத்திரம் காட்டப்பட்டிருப்பது, அக்காலப் பெண்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதையும் அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டாலும் அதனை சகித்துக்கொண்டு வாழும் பெண்களாகவும், இறைவனை எப்போதும் போற்றி பக்தி நெறியில் வாழ்பவர்களாகவும் அக்காலப் பெண்கள் காணப்பட்டுள்ளார்கள் என்பதனை கமலாம்பாள் எனும் பெண் பாத்திரத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் நிலமானிய சமூகத்தில் கூட்டு குடும்ப வாழ்க்கையை, அந்த உறவு நிலையை தக்க வைத்துக்கொள்ள பெண்கள் பாடுபட்டார்கள் என்பதனைக் கமலாம்பாளின் ஊடாக ராஜமையர் காட்சிப்படுத்துகிறார்.

முத்துசாமி ஐயரின் வாழ்க்கையின் ஊடாக அந்த காலத்தில் நிலவிய பிராமணிய சமூக நடைமுறைகளை விளக்கிச் சொல்வதற்கு ஏற்ற ஒரு பாத்திரமாக கமலாம்பாள் எனும் பாத்திரத்தை கதாசிரியர் கையாண்டு உள்ளார். நிலச்சுவாந்தர்களின் குடும்ப அமைப்பு, நிலமானிய சமூக உயர்ச்சி, கூட்டுக் குடும்பச் சிதைவு, நிலச்சுவாந்தர்களுக்கு சமூகத்தில் இருந்த மதிப்பு முதலியவற்றை விளக்குவதில் முத்துசாமி அய்யர் என்ற பாத்திரம் நாவலில் இழையோடுவதனை நன்கு அவதானிக்க முடிகிறது.

***“பெண்களுக்கு கலகம்தான் தொழில்..... இப்படித்தான் கோளும் புரளியும் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்....”*** என்று கூறுவதன் மூலம் அக்கால பெண்களின் நிலையை முத்துச்சாமி அய்யர் என்ற பாத்திரம் கூறுவதன் ஊடாக அக்கால பெண்கள் கோளும் புரளியும் சொல்லிக்கொண்டு திரிவதையே தங்களுடைய நடைமுறையாக கொண்டுள் ளார்கள். இவ்வாறு அக்கால பெண்களிடம் இருந்த புரளி பேசுதல் எனும் பண்பானது காணப்படுகிறது என்பதனை இந் நாவலின் இன்னொரு இடத்திலேயும் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

***“சுப்பு வீட்டில் குடத்தை இறக்கினது தான் தாமதம் ஈரப் புடைவையுடனே முட்டையை கையில் எடுத்துக்கொண்டு கமலாம்பாள் வீட்டை நோக்கி அடுப்பு நெருப்புக்காக புறப்பட்டாள். யதார்த்தத்தில் தன் வீட்டிலேயே நெருப்பு இருந்தது ஆனால் பொன்னம்மாள் சொன்ன வார்த்தைகளை கமலாம்பாளிடம் ஒன்றுக்கு பத்தாகச் சொல்ல வேண்டியது அதிக அவசியமாக இருந்தது......”*** என்ற நாவல் பகுதியினூடாக ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

அடுத்து, இந்நாவலினூடாகக் கதை எழுந்த காலத்தினுடைய கல்வி நிலையை அவதானிக்க முடிகிறது. மாணவர்களின் மனநிலை குறிப்பாக, அக்காலத்தில் பால்ய விவாகம் தொடர்பான செய்திகளை நாவல் வெளிப்படுத்த தவறவில்லை. 19ஆம் நூற்றாண்டுச் சூழலில் இப்பால்ய விவாகமானது மரபார்ந்த ஒன்றாக பேணப்பட்டு வந்துள்ளது. அது தவறாகவே சமூகத்தில் பேசப்படவில்லை. ராஜமையர் இந்நாவலின் ஊடாக பால்ய விவாகத்தினால் சமூகச் சிக்கல்கள் குறித்துப் பேசி உள்ளார். இவ்வாறு அவர் பேசுவதற்கான காரணம், நாவல் தோன்றிய காலப்பகுதியில் அக்காலச் சூழலில் பால்ய விவாகமானது அதிக மானதாகவே காணப்பட்டுள்ளது என்பதனை நோக்க முடிகிறது. மேலும் அக்காலத்தில் ஆசிரிய மாணவர்களுக்கிடையில் இருந்த உறவானது எந்த நிலையில் இருந்தது என்பதனை சீனிவாசன் எனும் பாத்திரத்தின் மூலம் ராஜம் ஐயர் எடுத்துக் காட்டுகிறார்.

பெண்களை கெட்டவர்கள் என்ற முத்துசாமி ஐயரின் கருத்தை உறுதிப்படுத்துபவர்களாக பொன்னம்மாள் படைக்கப்பட்டுள்ளாள். அக்காலத்தில் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் தவறு செய்பவர்கள் என்பதை இந்நாவல் படம்

பிடித்துக் காட்டத் தவறவில்லை. பொன்னம்மாள் தன்னுடைய கணவன் தன்னிடம் அன்பாக நடந்து கொள்ளாமையினால் வசிய மருந்து வேலைகளில் ஈடுபடுகிறாள் இவ்வாறான சம்பவங்களை கதாசிரியர் நாவலில் படம்பிடித்து காட்டுவதானது அக்காலத்திலே வசியம் செய்தல் என்பது காணப்பட்டுள்ளது என்பது மட்டுமின்றி வசிய வேலைகளில் பெண்களே அதிகம் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனையும் அறிய முடிகிறது.

மேலும் அக்காலத்தின் சமூக அமைப்பினை முத்துச்சாமி ஐயரின் இல்லற வாழ்வின் ஊடாக காட்சிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலே நிலமானிய சமூக நடைமுறைகளையும் நிலமானிய சமூகத்தில் கூட்டு குடும்பங்கள் சிதைந்து போகின்ற நிலையும் இந்நாவலில் பார்க்க முடியும். அதுமட்டுமின்றி அக்காலப் பெண்களின் மனப் போக்கு, அக்காலச் சமூக நிலை, குடும்பங்களின் பிரச்சினைகள், உறவுச் சிக்கல்கள், பிள்ளை வளர்ப்பு முதலான பல்வேறு விடயங்களை உணர்த்துவதற்கு இந்நாவலில் கையாண்டுள் ளதானது அக்காலத்தில் நிலவிய சமூகத்தின் பிரதிபலிப்பே ஆகும். ஆங்கிலேயருடைய ஆட்சி இவ்வாறாக இருந்தது என்பதனை விளக்குவதற்காக ஆங்கிலேய ஆட்சிச் சூழலில் செல்வாக்கு இழந்துபோன தமிழா சிரியர்களின் நிலை தொடர்பாக விவரிக்கப் படுகிறது.

அக்கால பெண்கள் கல்வி அறிவு அற்றவர் களாக காணப்பட்டார்கள். ஆனால், அக்காலத்தில் கல்வியறிவு அற்ற பெண்களினால் சமூகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பிரதி செய்வதாக கமலாம்பாள் சரித்திரம் அமைந்துள்ளது. இந்நாவலிலே வம்பர் மகாசபையின் உறுப்பினர்களாக அமையும் பெண்கள் போதிய கல்வி அறிவின்மை, மூடநம்பிக்கை, வீட்டு வேலைகள் தவிர வேறு ஆக்கப் பணிகளில் ஈடுபடாத வாழ்க்கை முறை போன்றவைகளால் வம்பு பேசுவதிலும் பிறருக்கு தீங்கு செய்வதிலும் பொழுதைப் போக்குகிறார்கள் எனக் காட்டுகிறார். மேலும் அந்தக்காலத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது முக்கியமானதாகக் காணப் பட்டது. இருப்பினும் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருடைய ஆட்சியின்நிமித்தம் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையானது சிதைக்கப்படுகிறது.

இந்த கூட்டு குடும்ப வாழ்க்கைமுறை யைப் பிரதிபலிப்பதற்காக பல்வேறு குடும்பங் களுடைய தொடர்புகள் இந்நாவல் முழுவதிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முத்துசாமி ஐயர் குடும்பமும் சுப்பிரமணி ஐயர் குடும்பமும் மிக முக்கியமாக இந்நாவலிலே கூறப்பட்டுள்ளது. அக்கால பகுதியில் கூட்டுக் குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் பற்றி ஆசிரியர் இந்நாவலிலே விபரித்திருக்கிறார். அதாவது உறவின் முறையிலான பொறாமைகளாலும் விளையும் குடும்ப சண்டை சச்சரவுகள் பற்றி ஆசிரியர் விளக்கியுள்ளார். குடும்பம் என்பது தனிநபரை கொண்டதல்ல. அது கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவுகள் அனைத்தும் ஒன்றித்து வாழும் வாழ்க்கை முறையாகும் இந்த வாழ்வில் சிறப்புகளும் உண்டு. பிரச்சினைகளும் உண்டு. பிரச்சினைகளைக் கண்டு துவண்டு விடாது ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, குடும்ப வாழ்வை சிறப்புள்ளதாக மாற்ற மனிதன் முயல வேண்டும் என்பதனை இந்நாவல் படம்பிடித்து காட்டுவதன் மூலம் 19ஆம் நூற் றாண்டுத் தமிழ்ச் சூழலில் பல்வேறு வகையான குடும்பப் பிரச்சினைகள் நிகழ்ந்துள்ளன என்பதனை இந்நாவல் வாயிலாக அறிய முடிகிறது

அக்காலச் சமூகத்தில் பெண்களுடைய ஒழுக்கத்தை ஐயுறுவது நிகழ்ந்துள்ளது என்பதற்கு ராஜம் ஐயர் எடுத்துக்காட்டும் விதம் சிறப்பானதாகும். கமலாம்பாள் பற்றி தவறான வதந்திகள் பரப்பப்பட்ட அதேவேளை, அவளுடைய கணவன் முத்துசாமி ஐயர் அவளைப் பற்றித் தவறான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார் எனக்காட்டி, இறுதியில் அவருடைய சந்தேகம் தெளிந்து அவர்களுடைய குடும்ப வாழ்க்கையானது செழித்து விளங்குவதனை நாவலானது படம் பிடித்து காட்ட தவறவில்லை.

மேலும் அக்காலத்தில் சமூக அமைப்பானது பாரம்பரியத்தில் வேரூன்று இருப்பதை அறிய முடிகிறது. நாவலில் பழமையான குடும்ப மரபுகள், பண்பாட்டு ஒழுக்கம், சாதி மற்றும் மத அடிப்படையிலான பிரிவினைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெண்களுடைய வாழ்க்கை முறையானது கட்டுப்பாடு நிறைந்ததாகவே இருந்தது என்பதனையும் நாவல் பதிவு செய்கிறது. மேலும் அக்காலச் சூழலில்

குடும்பத்தில் மருமகள், மாமியார் பிரச்சினைகள் காணப்படுவதனை நாவலின் ஓர் இடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். இதனை,

***"...மற்றைய பெண்கள் தங்கள் மாமியாருடன் சண்டை செய்வதை காட்டிலும் இவள் தன் மாமியாருடன் அதிகமாய் சண்டை செய்வதில்லை. சுக்கிர வாரம், வருஷ பிறப்பு முதல் தன் மாமியார் என்ன சொன்னாலும் அவளும் சண்டை செய்ய மாட்டாள். ஆனால் மறுநாள் வட்டியும் முதலுமாக யுத்தம் நடக்கும்"***

என்று கூறுவதன் ஊடாக இதனை அறிந்து கொள்ள முடிகிறது. அக்காலத்தில் பால்ய விவாகம் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. முத்துசாமி அய்யர் தன்னுடைய மகள் கல்யாணிக்கு திருமணம் பார்த்தல் தொடர்பான செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

***"இந்தப் பத்து வயது பெண் கல்யாணிக்கு கட்டு கட்டாக ஜாதகங்கள் வந்தன. தேடி எடுத்து சீனிவாசன் என்ற ஒரு பையனின் ஜாதகம் பொருந்துகிறது என்று எடுத்தார்கள்"*** என்ற அடிகளின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

அத்துடன் சமகாலச் சூழலில் கடவுள் நம்பிக்கையானது அதிகம் இருந்துள்ளது என்பதனை அறிய முடிகிறது இதனை கமலாம்பாள் என்ற பாத்திரமானது புலப்படுத்துகின்றது கமலாம்பாளின் கணவன் முத்துசாமி ஐயர் அவளுடைய ஒழுக்கத்தினைச் சந்தேகித்து அவளைப் பிரிந்து செல்கிறார். அப்போது ஒன்றும் அறியாத கமலாம்பாள்,

***"இவ்வுலகில் கடவுள் ஒருவரை நம்பலாமே என்றும் மனிதரில் யாரையும் நம்ப கூடாது எவ்வளவு உத்தமமான மனிதனாலென்ன? அவனும் கடவுளுடைய அக்ளைக்கு,,,,, உட்பட்டவன் தானே? கடவுளுடைய கிருபை இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது ஏதோ நாம் செய்த பாவம் அனுபவிக்கிறோம். பகவான் உடைய சங்கல்பம் அப்படியா இருக்குமானால் அதற்கு நாம் செய்யத்தக்கது என்ன........"*** எனக் கமலாம்பாள் கூறும் கூற்றிலிருந்து இதனை விளங்கிக் கொள்ளமுடிகிறது. இவ்வாறு அக்கால சமுதாயத்தில் கடவுள் பக்தியானது அதிகம் காணப்பட்டது என்ப தனை கமலாம்பாளின் கூற்றின் ஊடாக அறிய முடிகிறது. இறைவனை நம்பி சரண டைந்தவர்கள் கைவிடப்பட மாட்டார்கள் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

தொகுத்து நோக்குகின்றபோது, ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரமானது ஆங்கிலேயருடைய ஆட்சி காலமான 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் காண்கிறது. தமிழில் இரண்டாவது நாவலாக இந்நாவல் தோற்றம் கண்டாலும் நாவலுக்குரிய பண்புகளான நீண்ட கதை வடிவில் அமைதல், அதிக பாத்திரங்களை கொண்டிருத்தல், சமூகப் பிரச் சினையை கலைக்களமாக கொள்ளுதல் முதலிய பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய முதல் நாவலாக போற்றப்படுவது கமலாம்பாள் சரித்திரமே.

19ஆம் நூற்றாண்டு சமூகத்தில் காணப்பட்ட நிலமானிய அமைப்பின் உடைய சிதைவானது அக்கால கூட்டு குடும்ப வாழ்க்கைமுறையையும் பாதித்துள்ளது என்பதனை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது. மேடம் அக்காலச் சூழலில் பெண்கள் எவ்வாறு செயல்பட்டு உள்ளார்கள் என்பதனையும் அவர்களுக்கு கல்வி அறிவானது அக்காலத்தில் இல்லாமல் இருந்தது என்பதனையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் இந்நாவல் வெளிக்காட்ட தவறவில்லை. பக்தி நெறியானது அக் காலத்தில் அதிகமாக இருந்துள்ளது என் பதனையும் அறிய முடிகிறது. எல்லாம் இறைவனுடைய சித்தப்படியே நடைபெறுகிறது என்றும் இறைவன் ஒருவரையே நம்ப வேண்டும் என்ற கருத்தையும் அக்கால மக்களின் சமய நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாக நாவலானது அமைந்துள்ளது.

இந்நாவலின் பல இடங்களில் ஆன்மீக கருத்துக்களைத் தன் கதாபாத்திரங்கள் வாயிலாகவும் தன் கூற்றுக்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தி உள்ளதானது, அக்கால மக்களுக்கு ஆன்மீக நம்பிக்கை ஊட்டுவதையும் ஆசிரியர் நோக்கமாகக் கொண்டிருந்தார் எனலாம். மேலும் இந்நாவலில் 19ஆம் நூற் றாண்டு சூழலில் பால்ய விவாகம் ஆனது தவறான ஒன்றாக கருதப்படவில்லை அது மரபு ரீதியாக பேணப்பட்டு வந்துள்ளது என்பதனை அறிய முடிவதுடன் இவ்வாறான பால்ய விவாகம் தவறான செயல் என்பதனையும் நாவல் பேசுவதன் மூலம் அக்காலத்தில் பால்ய விவாகம், அதனால் நடந்த கொடுமைகள் என்பவற்றை அறியக்கூடியதாக உள்ளது. எனவே இந் நாவலானது 19ஆம் நூற்றாண்டு சமுதாய சூழலினை படம் பிடித்து காட்டுகின்ற ஓர் எழுத்து ஆவணமாக திகழ்கின்றது எனலாம்.

❍❍❍

# போதையற்ற உலகம் செய்வோம்

போதை என்னடா போதை
அதில் நீ மூழ்கியே நல்பாதை தன்னை
மறந்தாயடா
அகிலம் தன்னை இளந்தாயடா
காதை நன்றாய்த் தீட்டி நான் சொல்லுவதைக்
கேட்பாயடா மேதையே,
என்றும் நீ நம்பிக்கையுடன் குடியை மறப்பாயடா

உலகம் என்றும் இன்பமடர் குடியால் வருவதே
என்றும் துன்பமடர் மனைவி மக்கள் தன்னை நீ
மனமிரங்கி நினைத்திடடா
நூலகம்தான் உள்ளதடா,
அதை நீ காத்திடடா
மண்ணின் பெயரைக் காப்பாற்றியே
மதுவை நீயும் வீட்டிடடா

வெள்ளி போன்று துள்ளி ஓடும் மாணவரை
வீணாய் இதற்குள் தள்ளுகிறீர் அதுதான் ஏனடா..?
படிக்கும் வயதில் உள்ளவரைப் பாழடைய
வைக்கிறீரடா...பள்ளி செல்லும் மாணவரை பள்ளம்
தன்னில் தள்ளுகிறீர் பித்துப் பிடிக்கும் நேரத்திலும்
பிதற்றப் பிதற்றக் கொடுக்கிறீர் ஏனடா...

புது உலகம் செய்வோமடா
புது புரட்சியாலே நல்லுலகு படைப்போமடா...
விரைவுதனில் குடியை விரட்டி அடிப்போமடா
மது மறக்க வைப்போமடா
மண்ணை நினைக்க வைப்போமடா
விரைவாய் உலவும் போதையை
வேரோடு இங்கு அழிப்போமடா

போதை தன்னை மறந்து பண்புடன் வாழவே
குடிதனை ஒழிப்போமே
பேதை தன்னைப் புகழ்ந்து
வானை விட உயர்ந்து
மாணவர் தனைக் காத்து
மக்களுடன் கை கோர்த்து
பதவி ஒன்றை அடைந்து பாராட்டுகள் பெற்று
போதை தரும் தீமை அறிந்து
மண்ணில் நல்ல வண்ணமாய் வாழ்ந்து
பெருமையால் நீயும் உயர்ந்து
மற்றவர்க்கும், உற்றவர்க்கும் உதவி பல நீயும் புரிந்து
இவ்வுலகம் தனில் வாழ்ந்து
பற்றுப் பாசங்கள் நினைத்து
பணிவாய் அடங்கி நடந்து
மண்ணில் உன் எண்ணம் உயர்த்தி
மனமெங்கும் மகிழ்ச்சியே பெருக்கி
இன்னல் எது வரினும் இலகுவாய் மறையுமே
என வானமாய் கலை வண்ணம் கண்டு
வியப்புறு சொர்க்கம் அடைந்து
தினம் இன்பமே மனமயமாய் பெற்றிட
இன்றே குடியை விட்டுவிடு நண்பனே..! நண்பனே..!



**மிதுஷிக்கா பிரேமச்சந்திரன் – தரம் 10C,**
**யா/வயாவிளான் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



### வே. தில்லைநாதன்

தமிழ் – ஆங்கில மொழிகளில் புலமைத்துவம் பெற்றிருந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான வே. தில்லைநாதன் அவர்கள் (29–07–2025) காலமானார். இவரின் “இதய தந்திகள் மீட்டப்படுகின்றன” நாவல், தேசிய சாகித்திய விருதினைப் (1978) பெற்றமை குறிப்பிடத்தக்கது. நாவலுடன், சிறுகதைகள், குறுநாவல், விமர்சனங்கள், பத்தி என அன்னாரின் எழுத்துகள் அவரின் இறுதிக்காலம் வரை இலங்கை மற்றும் இந்தியாவில் பிரசுரமாகின.

ஞானம் சஞ்சிகை மற்றும் ஞானம் வெளியீடுகள் பற்றி உடனுக்குடன் கருத்துகள் தெரிவித்து ஊக்கப்படுத்திய இலக்கிய ஆர்வலர். தமது கருத்துகளை விரிவாக தபால்மூலம் பதிவுசெய்து அனுப்பி வைப்பார். தி. ஞானசேகரன் எழுதிய “எரிமலை“ எனும் அரசியல் நாவலை அமரர் வே. தில்லைநாதன் அவர்களே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.அன்னாரின் இழப்பின் துயரில் ஞானம் சஞ்சிகையும் பங்குகொள்கிறது. **– ஞானம்**






# பதிவு

**ந. பார்த்தீபன்**
(வவுனியா)

நண்பரொருவர் பயோ டேற்றாவுக்கு என்ன தமிழ் என்று கேட்கிறார்.

"ம்... டேற்றா என்றால் தரவு... பயோ...ம்... "உயிர்த்தரவு" என்று சொல்லலாம்.

நண்பர் "அதென்ன ஒருமாதிரியாக இருக்கு...?"

நான் "இப்ப பயோ காஸ் என்றால் உயிர்வாயு என்று சொல்லுறதுதானே...அதனால்தான் "உயிர்த்தரவு" என்று சொல்ல முடியும்"

"இல்லை... நான் எனது தரவு என்று போட்டுத் தயாரிக்கிறேன்" என்றார் நண்பர்.

"ஓகே...அதுவும் ஓரளவு பொருந்தும்" என்றேன். ஏன் இப்ப பயோ டேற்றா எனக் கேட்க வேண்டும் போலிருந்தது.ஆயினும் விரும்பினால் அவராய்ச் சொல்லட்டும் என்று மௌனமாகினேன்.

நண்பர் "ஒரு பிள்ளை வந்து கேட்டாள். அவளுக்கு ஒரு வேலைக்கு செல்ல பயோடேற்றா கேட்பதாகச் சொன்னாள். அதுதான்..."

பிறகும் அவரே "அந்தப் பிள்ளை காமென்சில வேலை செய்தவள். இரைப்பையில கட்டி என்று ஒப்பிரேஷன் செய்து...இப்ப அதிலிருந்து சிதல் வருகுதாம். பிறகும் ஆஸ்பத்திரிக்குப் போய்க் காட்டி, மருந்தெடுக்க... லீவு கேட்க, அவங்க தரமுடியாது... வேலைக்கு வரத்தான் வேணுமெனச் சொல்ல...அவள் வேலையை விட்டிட்டாள். இப்ப பிள்ளைக்கும் தனக்கும் சாப்பாட்டுக்குக் காசு வேணுமே... அதுதான் ஆஸ்பத்திரியில வேலைக்கு ஆக்கள் எடுக்கப் போறாங்களென யாரோ சொன்னதாகச் சொல்லி, அதுக்கு பயோடேற்றா முதல்ல குடுக்க வேணுமென்று,கேட்டு..."

"ஏன் அவளின்ரை புருசன் எங்கை?" என்று நான் கேட்டேன்.

"அந்த நாய் நாலு வயசு பொம்பிளைப் பிள்ளையையும் விட்டிட்டு வேறை ஒருத்தியைக் கட்டிட்டான்."

"அப்ப இவள் படி கேட்கலாமே...?"

"அதுதான் அந்தப் பிள்ளையின்ரை பேத்சேட்டிபிக்கெற்றில் பெற்றோர் பதிவுத் திருமணம் செய்யவில்லை என்று போட்டிருக்கு... கல்யாண எழுத்தில்லாமல் எப்பிடி படி கேட்கிறது?" என்று ஆதங்கத்துடன் சொல்கிறார் அவர்.

இந்தக் காலத்திலும் இப்படியான நிலைமையில சனம் இருக்குதோ...? நம்ப முடியாத நிலையில் நான் கேட்டுவிட்டேன்.

"எவ்வளவோ பெண்கள் கல்யாணப் பதிவில்லாமல்... காதலில் விழுந்ததால் ஏமாந்து போனார்கள். இப்ப பெண் தலைமைத் துவக் குடும்பமென்பது விதவையானோர் மட்டுமல்ல. ஏமாந்து போய் ஒண்டுரெண்டு பிள்ளைகளோடை... இருக்கிற பல பெண்களும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தில இருக்கிறாங்க... நீங்க பின் தங்கிய கிராமங்களில இறங்கி வேலை செய்து பாருங்கோ... தெரியும். அப்பப்பா ஓ.எல் எடுத்த எத்தனையோ பிள்ளையளை பிறகு காண முடியாது...எங்கையெண்டு பாத்தா... கைக் குழந்தையோடை வந்து நிக்கிறாங்க... என்னெண்டு கேட்டா, அவன் வேறை பெட்டையோடை தொடர்பு, குடுப் பாவிக்கிறான், அதுக்கு காசு கேட்டு நித்தம் அடி ஆக்கினை... நான் நீ போடா எண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன்... இப்ப நான் கச்சான் உடைக்கப் போறன், காமென்ஸுக்குப் போறன், கூலி வேலைக்குப் போறன்... எண்டு சொல்றாங்க.. பொடியங்க

இதுதான் வாசியெண்டு வேறை பெட்டையளைப் பிடிக்கிறாங்க...” கூறும்போது உணர்ச்சிவசப்படுகிறார்.

நான் ஒருகணம் திகைத்துப் போனேன். நண்பர் பின்தங்கிய கிராமங்களில் சமூக சேவைகளில் ஈடுபடுவதால் நேரிலே கண்டு கேட்டவற்றைக் கூறுவதை ஏற்கத்தான் வேண்டுமென நினைக்கிறேன்.

“இப்ப நான் பயோடேற்றா எழுதிற பிள்ளையும் அப்படி ஏமாந்ததுதான். அவன் வேறை கல்யாணம் கட்டியிட்டான்.படி வாங்கவும் வழியில்லை... இதுக்குள்ளை காமென்ஸுக்கு போய் நிறைய வருத்தங்கள்... பெற்றோருக்கும் பெரிய வசதி வாய்ப்பில்லை... என்ன செய்வது?”

“பொறுங்கோ... ஆஸ்பத்திரியில ஆரும் தெரிஞ்சாக்களைப் பிடிச்சு அதில போடப் பாப்பம்.”

“பிளீஸ்... அப்படியொரு முயற்சி செய்தால் பெரிய உதவியாயிருக்கும். பாவம் ஆஸ்பத்திரியில சின்ன வேலை கிடைச்சாலும் நல்லது.” என்று நண்பர் ஆர்வத்துடன் கூறுகிறார்.

“ஆனால்...” நான் சொல்லவா... வேண்டாமா... என நான் யோசிக்க... நீங்க ஏதோ சொல்ல விரும்புவது போல இருக்கு... என்னெண்டாலும் பரவாயில்ல சொல்லுங்கோ..” என்கிறார்.

இல்லை... இந்த மாதிரியான நேரத்தில தனியார் பெண்ணுக்கு, அல்லது நீங்க வேலை செய்யிற கிராமங்களுக்கு மாத்திரமல்லாமல்... எல்லோருக்கும் சென்றடையக் கூடியதாக ஒரு வேலைத்திட்டம் தயாரித்து எல்லோரையும் இணைத்து வேலை செய்வதுதான், அது பாரிய வேலைதான் ஆனா பொருத்தமானதும் அவசியமானதும் என நான் நம்பிறன்...” என்றேன்.

அவரிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

❍❍❍

# தேநீர் இடைவேளை

அவள் கண்களும் முகமும்
அசைகின்றன
அப்பாவுக்கு உன்னை பிடிக்கும்
அவள் அடிக்கடி சொல்வாள்
அவர் யார்?
எனக்கு நன்றாக தெரியாது
அறிமுகம் பெற இருந்தேன்

அவள் தேநீர் தட்டை மெதுவாக நீட்டினாள்
மெதுமையான மென்மையான
தன் விரல்களால் அதைப் பற்றி
தடவுவதற்கு வழி விட்டவளாய்
தேநீர் அருந்தும் போது
அவர்தான் அண்டை அயலவர்களைப்
பற்றியும் நண்பர்களை பற்றியும்
பேசுகிறாள்

வயதான கிராமத்து வைத்தியர் சொல்கிறார்
ஒவ்வொரு நாளும் கிராமத்தில் உள்ள
ஒவ்வொரு நாயையும் பராமரிப்பது
அவரது அன்றாடக்
கடமை என்பது.
உங்களுக்கு தெரியுமா?

நாய் ஒன்று செத்த போது
அவர் அழுதாராம்
அந்திப் பொழுதினிலே
அவளிடம் விடைபெற்றேன்
சஞ்சல மனத்துடன்

**பஸ்ஸில் பெர்ணான்டோ**
**ஆங்கிலத்தில் எழுதும் இலங்கைக் கவிஞர்**

**மொழி மூலம் – ஸ்ரீ பராக்கிரம கொடிதுவக்கு**

**தமிழில் – கலாபூஷணம் மாவனல்லை எம் எம்.மன்ஸூர்.**

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

### திரை தந்த திறமைமிகு நடிகை

தமிழ்த் திரைப்பட உலகில் மக்கள் மனங்களைக் கவர்ந்த ஒரு நடிகையாக விளங்கிய சரோஜாதேவி காலமானார் என்ற செய்தி, பலரையும் அவர் பற்றி மீண்டும் சிந்திக்கச் செய்திருக்கிறது. அவர் முதன்முதலில் தமிழில் இன்னொரு நடன நடிகையோடு நடனமாடிய நடனக் காட்சி அமைந்த தங்கமலை ரகசியம் என்ற திரைப்படத்தை நான் எனது பத்துவயதில் பார்த்தேன். அந்தப் படத்தில் சரோஜாதேவியின் நடன ஆற்றல்தான் வெளிப்பட்டது. அதன் பின்னர், அவர் எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், ஜெமினிகணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன் ஆகியோரோடு நடித்த பல படங்களைப் பார்த்திருக்கிறேன். எம்.ஜி.ஆரோடு 26 படங்களிலும், சிவாஜிகணேசனோடு 21 படங்களிலும் அவர் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி ஆகியோருடன் தாம் நடித்த அனுபவங்களை, சரோஜாதேவி 'மூவர் உலா' என்ற தலைப்பில் 1960களின் முற்பகுதியில் தமிழகத்தின் ஒரு வார சஞ்சிகையில் (குமுதம் அல்லது ஆனந்தவிகடன்) எழுதியிருந்தார். அவர் சொல்லச் சொல்ல யாராவது ஒருவர் எழுதியிருக்கலாம். அந்தக் கட்டுரை சுவாரசியமாக இருந்தது.

தமிழ்த்திரையைப் பொறுத்தவரை, அவர் நடன நடிகையாகவே அறிமுகமாகியிருந்தாலும், பத்மினி, வைஜந்திமாலா, கமலா லக்ஷ்மணன் போலப் பல நடனக் காட்சிகளில் நடிக்க வாய்ப்பு ஏற்படவில்லை. அவரது நடிப்பையே பல இயக்குநர்களும் பயன்படுத்திக்கொண்டார்கள். கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட சரோஜாதேவி, தமிழை அழகாக உச்சரித்து நடிக்கும் திறமை பெற்றவர். சரோஜாதேவி பொதுவெளியில் பேசுவதற்கும், திரைப் படங்களில் பேசுவதற்கும் இடையே வித்தியாசம் உண்டு. திரைப்படங்களில் அவர் மிகவும் மென்மையாகப் பேசுவார். பொதுவாக எல்லா நடிகைகளுக்கும் பொருந்தக்கூடிய பி. சுசீலாவின் குரல், சரோஜாதேவிக்கு மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறது.

சரோஜாதேவி எம்.ஜி.ஆருடன் நடிக்கும் போது, அநேகமாக அழகுப் பதுமையாகத் தோன்றுவார். ஆனால், சிவாஜிகணேசனுடன் அவர் நடிக்கும்போதுதான், அவரது முழு நடிப்பாற்றலும் வெளிப்படும். ஜெயலலிதாவைப் பொறுத்தவரையிலும் அதேநிலைதான். சரோஜாதேவி அழகிய தோற்றம் கொண்டவராக இருந்தபோதிலும், கருமை நிறமானவர். அவருக்கான ஒப்பனை, அவரைச் சிவந்த மேனி கொண்டவராகக் காட்டுகிறது. பல சமயங்களில் அளவுக்கு அதிகமான ஒப்பனையுடன் காட்சிகளில் தோன்றுகிறார்.

எம். ஜி.ஆர் தொடக்க காலத்தில் சரோஜா தேவியுடன் நெருங்கி நடிக்கக் கூச்சப்பட்ட போது, அக்கூச்சத்தை நீக்கி, தம்முடன் நெருங்கி நடிக்குமாறு தூண்டியவர், சரோஜாதேவி. சரோஜாதேவியின் தாயார் மிகக் கண்டிப்பான பேர்வழி. அவரை அறியாமல், சரோஜா தேவியின் அணுவும் அசையாது. 1960களில் எம்.ஜி.ஆர் இலங்கை வர இருந்தபோது, சரோஜாதேவியையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால், தாயார் அதனை விரும்பவில்லை. இதனைத் தெரிந்துகொண்ட எம். ஜி.ஆர், அப்படியாயின் தாம் ஜெயலலிதாவை அழைத்துக்கொண்டு இலங்கை செல்ல இருப்பதாகத் தகவல் தெரிவித்தார். அதன் பிறகுதான், சரோஜாதேவியின் அம்மா மகளை அழைத்துக்கொண்டு எம்.ஜி.ஆர் இலங்கை செல்லலாம் என்று அனுமதி வழங்கினார். எம்.ஜி.ஆரின் இலங்கை வருகை தொடர்பாகச் சம்பந்தப்பட்டிருந்த பிரபல அறிவிப்பாளர் அமரர் எஸ். பி. மயில்வாகனன் இதுபற்றி, யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் 1970களின் நடுப்பகுதியில் எழுதியிருந்த ஒரு கட்டுரையில் இருந்து இவ்விடயத்தைத் தெரிந்துகொண்டேன்.

எம்.ஜி.ஆர் சரோஜாதேவியை அரசியலுக்கும் அழைத்தார். ஆனால், சரோஜாதேவி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரைப்பட ரசிகர்களால் என்றும் மறக்க முடியாத நடிகையாகச் சரோஜாதேவி விளங்குகிறார். அவர் நடித்த திரைப் படங்கள் எதிர் காலத்திலும் அவரை நினைவு படுத்திக்கொண்டே இருக்கும்.

## நாடும் நடப்பும்

நமது நாட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கியுள்ளன. கடந்த காலங்களில் எவ்வித அச்சமோ, வெட்கமோ இன்றித் தாராளமாக எத்தகைய குற்றத்தையும் செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. அதற்கு அரச ஆதரவும் இருந்தது. ''பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்.'' ஆனால், இன்றோ நிலை மாறத் தொடங்கியிருக்கின்றது. உப்புத் தின்றவன் தண்ணீர் குடிக்கவேண்டியிருக்கிறது. சிறு முதலைகள் கொஞ்சம் கொஞ்சமாக அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், பெரு முதலைகள் இன்றும் தண்ணீருக்குள் மறைந்துகொண்டிருக்கின்றன. நாட்டில் எந்தவிதப் பழிபாவங்களுக்கும் அஞ்சாத ராஜவம்சம் ஒன்று மனத்தில் திகிலோடும், வெளியில் நடிப்போடும் நடமாடிக்கொண்டிருக்கிறது. ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள், அதனை நெருங்க அஞ்சுகிறார்களா அல்லது ஒன்றும் செய்யமுடியாமல் அவதிப்படுகிறார்களா என்பது புரியவில்லை.

நாட்டில் சில நல்ல விடயங்கள் நடந்து கொண்டிருந்தாலும், தமிழ் மக்கள் விடயங்களில் பேரினவாதமே ஆட்சிபீடத்தின் உள்ளடக்கமாக விளங்குகிறது. அதனை மூடி மறைப்பதற்காகச் சிவப்புச் சாயம் பூசப்பட்டிருக்கிறது. ஆட்சியிலும், கட்சியிலும் சிலவெளிப்படையான பேரின வாதிகள் உள்ளனர். பொய் பேசத் தெரிந்தவர்களும் உள்ளனர். வாக்குறுதிகள் காற்றில் பட்டங்கள் போல் பறந்துகொண்டிருக்கின்றன. அதேவேளை, தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு சார்ந்த உயர்சபை உறுப்பினர் ஒருவர், வரலாறு தெரியாதவராகவும், அறிவார்ந்த ரீதியாகச் சபை சந்திகளில் பேசத்தெரியாத வராகவும் விளங்குகிறார். பல சமயங்களில், தாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர் என்பதையே மறந்து, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர் போல் பேசுகிறார் கோரிக்கைகள் விடுக்கின்றார். தமிழ்மக்கள் எதிர்காலத்திலாவது மரமண்டைகளைத் தெரிவுசெய்யாமல் இருப்பார்களாக!

எதிர்க்கட்சி முக்கியஸ்தர் மனிதாபிமானம் கொண்டவரோ, இல்லையோ, மிகுந்த யானாபிமானம் கொண்டவர். அண்மையில் யானை ஒன்று இறந்ததற்குத் தமது ஆழ்ந்த இரங்கலை அவர் தெரிவித்துள்ளார். ஆனால், அவர் கண்களுக்குச் செம்மணிப் புதைகுழி விவகாரங்களோ, தமிழ் மக்களின் பிற துயரங்களோ கண்ணுக்குத் தெரிவதில்லை. இவர்கள் எல்லாம் தேசியத் தலைவர்கள் போலப் போர்வை போர்த்திக் கொண்டு திரிகிறார்கள். வடக்கில் ஒரு கதையும், தெற்கில் ஒரு கதையுமாகத் தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் ஏமாற்றிக் கொண்டு திரிகிறார்கள். இவர்களை நம்பி, இவர்களுக்குப் பின்னாலும் ஒரு தமிழ்ப் பட்டாளம் ஓடிக் கொண்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் தமிழ் மக்களுக்கென்று ஒரு ''வீடு'' இருந்தது. அந்த ''வீடு,'' தங்களை எப்போதும் பாதுகாக்கும் என்றும் மக்கள் நம்பியிருந்தனர். ஆனால், அந்தோ பரிதாபம்! ''வீடு'' இன்று சின்னாபின்னமாகிச் சிதறிக்கிடக்கிறது. தலைமைத் தகைமைகள் எதுவும் அற்ற ஒரு தலையாட்டிப் பொம்மை ''வீட்டின்'' முக்கிய பொறுப்பில் இருக்கிறது. சட்டம் தெரிந்த தந்திரசாலி ஒருவர் இன்னொரு முக்கிய பொறுப்பில் இருந்துகொண்டு, ''வீட்டையே'' ஆட்டிப்படைக்கிறார். திறமை இருந்தும், தந்திரசாலியின் கைப்பொம்மை போலப் பிறிதொருவர் இசைந்துநடக்கிறார். அதேவேளை, சமீபத்தில் ''வீட்டுக்காரர்கள்,'' ஒருபோதும் சேரக்கூடாத ஒரு கூட்டத்தோடு சேர்ந்து, கொஞ்சநஞ்சம் இருக்கிற மரியாதையையும் கெடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இத்தனைக்கிடையிலும், தூரத்தில் ஒரு நம்பிக்கை ஒளி காணப்படுகிறது. அந்த வகையில், தமிழ்மக்கள் கொடுத்துவைத்தவர்கள் என்றே கூறவேண்டும். உயர்சபை உறுப்பினர் ஒருவரின் வருகை, தமிழ் மக்களைத் தலைநிமிரச் செய்துள்ளது. தங்களுக்காக உயர்சபையிலும், பொதுவெளியிலும் ஓங்கிக் குரல் கொடுக்கும் ஒருவர் கிடைத்துள்ளார் என்பதைத் தமிழ் மக்கள் ஓரளவு உணரத்தொடங்கிவிட்டனர். அவரை விரும்பாதவர்கள், எதிர்ப்பவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். எது எப்படியோ, இதுவரை நாடு கண்டிராத ஒரு துணிச்சல்மிகு அரசியல்வாதியை நாம் இப்போது கண்டுகொண்டிருக்கிறோம்.




ஞானம் 302 ஆவது இதழ் கிடைத்தது. அதில் வெளியான ஏ. ஏ. ஹச். கே. கோரியின் "வீதி வரை உறவு" என்ற சிறுகதை சிறப்பாக உள்ளது. பெண் உரிமை பற்றிய விடயத்தை இஸ்லாமியப் பின்புலத்தில் கலைத்துவத்துடன் படைத்துள்ளார். பேராசிரியர் சி. மௌனகுருவின் "உறங்க விடாத சுடலைமாடன்" கதையை முன்பு எங்கோ வெளியாகி படித்த நினைவு. படைப்பின் இறுதியில் அது முதலில் வெளியான விபரத்தினை வெளியிடுவது பத்திரிகா / சஞ்சிகா தர்மம்.

**– தேவமுகுந்தன்**

**படைப்புகள் அனுப்பப்படுமிடத்து அவை ஏற்கனவே பிரசுரமாகியுள்ளனவா எனும் விபரத்தையும் எழுத்தாளர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஏற்கனவே பிரசுரமாகிய படைப்புகளை மீண்டும் ஞானத்தில் பிரசுரம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து அவ்விபரங்களை யாம் கட்டாயம் குறிப்பிடுவோம். இதில் எழுத்தாளர்களின் பங்கும் உண்டு.** **– ஞானம்**

❍ ❍ ❍

உங்களது ஞானம் சஞ்சிகையை இன்று பார்க்க கிடைத்தது. ஜுன் 2025 சஞ்சிகையின் கடைசிப் பக்கத்தில் Murals in Jaffna பகுதியை வாசிக்க நேர்ந்தது. எனது தந்தையார் து.அப்புத்துரை Artist அவர்களாவார். அவரது தந்தையார் மு.துரைச்சாமியினதும் சுவரோவியங்கள் பயன்படக்கூடும் என நினைத்து இதனை எழுதுகிறேன்.

1. தாவடி முருகமூர்த்தி கோவில் சுவரில் 'வள்ளி திருமணம் என்னும் வரலாற்று ஓவியம் மிக இலகுவாக ஆடைகளைப் பளிச்சென்று துவைக்கப் பயன்படுத்தும் "நீலத்"தை வச்சிரம் என்னும் ஒரு வகைப் பிசினில் கரைத்து காய்ச்சி வரையப்பட்டவை. மழை, வெய்யில் போன்ற எந்த சூழலுக்கும் அழியாதிருந்ததை நானும் பார்த்தேன். சிறுமியாக இருந்தபோது,
2. எனது தாத்தா மு.துரைச்சாமி யாழ்ப்பாண நகரம் அல்லது துறைமுகத்தில் யானைகள் வந்து இறங்குமாப்போல் ஓவியம் வரைந்திருந்தார். அதுவும் காலத்தில் அழிந்துவிட்டது.

நமது குடும்பத்தினர் வறுமை, நோய் வாய்ப்படல் போன்ற காரணங்களால் அவற்றைப்பேண முடியவில்லை. சிலவேளைகளில் பல்கலைக்கழகம், வேறு ஸ்தாபனங்களால் மாணவர்கள் கேட்கப்படும்போது என்னிடம் வந்து கேட்டதுண்டு. செயல்வடிவம் பெறுவதில்லை.


ஆதலால் நீங்கள் பேராசிரியர் த. சனாதனன் அல்லது வேறு தகுதியானவர்கள் மூலம் முயற்சி செய்யலாமா?

**– திருமதி தி. வினாயகமூர்த்தி**

**திருமதி தி. வினாயகமூர்த்தி அவர்களால் இங்கு கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஓவியங்கள் பற்றிய விபரங்களும் அவற்றுடன் தொடர்புடைய மேலதிக ஆதாரபூர்வமான விபரங்களும் நூலில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளன. தாவடி கோவலிலுள்ள ஓவியம் பற்றிய விபரத்தை நூலின் 62ஆம் பக்கத்தில் கண்டுகொள்ளலாம். கடிதத்துக்கு நன்றி.**

**– பேராசிரியர் த. சனாதனன் (ஆசிரியர் – Murals in Jaffna)**

❍ ❍ ❍





**இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்**
**– பேராசிரியர் கந்தையா பகீரதன்**
(2025)

ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் பழமையான ஈழத்து விவசாயப் பாரம்பரியத்தை பேசுபொருளாக இந்நூல் கொண்டுள்ளது. 'இலங்கையின் பாரம்பரிய விவசாய வரலாறு' தொடங்கி 'விவசாய எழுச்சித் திட்டங்கள் எப்படி இருக்கவேண்டும்' வரை பன்னிரு இயல்களில் விடயங்கள் உரையாடப்பட்டுள்ளன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதத்தை மாத்திரமே விவசாயத்துறை தரும் நிலையில், மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வழிகளை நூல் முன்மொழிகிறது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்'.

**ஈழத்து இலக்கியச் சிற்பிகள்**
**வி. ரி. இளங்கோவன்**
(2024)

'மண் மறவா மனிதர்கள்', 'ஈழத்து மண் மறவா மனிதர்கள்' எனும் நூல்களை ஏலவே வெளியிட்டுள்ள இளங்கோவன் அவர்கள், அத்தொடரில் ஆளுமைகள் பற்றி எழுதித் தொகுத்த புது வரவாக இந்நூல் அமைகிறது. இதிலே 2020களில் அவர் எழுதிய 60 ஆளுமைகளின் குறிப்புகள் உள்ளடக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் சில சிங்கள அறிஞர்களும் அடங்குவர். ஆளுமைகளின் படங்களும், அவர்களின் நூல்களின் அட்டைப் படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.





**சமஷ்டி அரசியல் முறைமைகள் – ஓர் அறிமுகம்**
**கந்தையா சண்முகலிங்கம் (தொகுப்பும் தமிழாக்கமும்)**
(2025)

கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, யூகோசிலாவியா ஆகிய எட்டு நாடுகளின் அரசியல் யாப்பு வளர்ச்சி பற்றி விரிவாக நூலிலே கூறப்பட்டுள்ளது. அத்துடன் 'பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களுக்கு பொருத்தமாக அரசியல் யாப்புகளை வரைதல்' தொடர்பான கட்டுரையும் நிறைவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆங்கிலக் கட்டுரைகளின் கருத்துகளைத் தழுவி நூலிலுள்ள 10 கட்டுரைகளும் ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளன. பன்முகப்பார்வை.

## கிடைக்கப் பெற்றவை...


GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**வண்ணார்பண்ணை இ. அருளம்பலசுவாமிகள்**
**– கலாநிதி செல்வமனோகரன்**
**(2025)**




குழந்தைவேற்சாமியின் சீடரான அருளம்பலசுவாமிகள், இல்லறஞானியாக, துறவியாக வாழ்ந்து, சமூகத்துக்கு பல்வேறு பணிகள் செய்து 1925ஆம் வருடம் இயற்கை எய்தினார். அரச உத்தியோகத்தராக, அச்சுக்கூடம் நடத்தியவராக, பதிப்பாளராக, ஆக்கவிலக்கியகர்த்தாவாக, கோயில் கட்டியவராக, பாடசாலை ஸ்தாபித்து நடத்தியவராக, சமூகப் பணியாளராக, தத்துவ அறிஞராக, பகுத்தறிவுவாதியாக பன்முகம் கொண்ட சித்தரின் வாழ்க்கை வரலாறு அவரின் நூற்றாண்டை முன்னிட்டு வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். ஒளிபாய்ச்சிக் காட்டும் முயற்சி.


**இலக்கண நானூறு**
**– த. யுவராஜன்**
**(2024 – நான்காம் பதிப்பு)**




பல்தேர்வு வினா அமைப்பில் ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து விடைகள் எனும் அமைப்பில் நானூறு வினாக்கள் பொருத்தமான விடைகளுடன் தரப்பட்டுள்ளன. இலங்கைக் கல்விப் பொதுத் தராதரம், உயர்தரம் மட்டுமன்றி தமிழ் இலக்கணம் கற்க விரும்பும் அனைவருக்கும் கொடையாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் நான்காம் பதிப்பைக் கண்டுள்ளதன் வாயிலாகவே இந்நூலின் வகிபாகத்தினை நன்கு தெரிந்து கொள்ளலாம். அரைத்த மாவை அரைக்காமல், இலக்கண புலமை மிகுந்தோரையும் திரும்பிப் பார்க்கவைக்கும் வண்ணம் இக்கேள்விகள் அமைந்துள்ளமை சிறப்பு. காலத்துக்குத் தேவையான முயற்சி.

**அவனும் ஓர் ஒற்றைப்பனை**
**– ந. பாக்கியநாதன்**
**(2025)**

‘மிதக்கும் நிழல்’ தொடங்கி ‘பொய் முகங்கள்’ ஈறாக உள்ள பாக்கியநாதன் கவிதைகள் எளிய மொழியில் பேசுபவை. ஆசிரியர் கவிதைகளுக்கு சூட்டியுள்ள தலைப்புகள், ஒருகணம் நிதானிக்க வைக்கின்றன. 2016இல், ‘ஒரு பிடி சாம்பல்’ எனும் கவிதைத் தொகுப்பின் வாயிலாக இலக்கிய உலகிற்கு அறிமுகமான ஆசிரியர், சில சிறுகதைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கவிஞரின் ஆழ்மனதில் பதிந்த நிராகரிப்பு உணர்வுகளின் வெளிப்பாடாக இக்கவிகள் அமைந்துள்ளன. உள்ளம் பேசுகிறது.




## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195